
ISBN:978-81-687049-1-6

108

செந்தமிழறிஞர்கள்

இராபர்ட் கால்டுவெல்






பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/5-%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B2%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

இராபர்ட் கால்டுவெல் *(1814 - 1891)*



அறிமுகம்

இராபர்ட் கால்டுவெல் 1814 மே 7-ம் தேதி அயர்லாந்து நாட்டில் பிறந்தார். தனது 24 வயதில், ‘லண்டன் மிஷனரி சொசைட்டி’ எனும் கிறித்துவ மதக் குழுவுடன் இணைந்து 1838 ஜனவரி 8-ம்தேதி சென்னைக்கு வந்தார். பின்னர் தமிழகத்தின் இடையன்குடி எனும் ஊரில் தனது மதப்பணியை மேற்கொண்ட அதே வேளையில் 50 ஆண்டு காலம் மொழி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்.

தமிழ் மற்றும் இலக்கியப் பணி

- திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலை நிறுத்தியதில் பெரும் பங்கு இவருடையது.
- சென்னையில் இருந்து திருநெல்வேலி சென்ற இவர் தரங்கம்பாடி, தஞ்சாவூர், நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை வழியாகச் செல்லும் போது அந்தந்தப் பகுதி மக்களின் வட்டாரத் தமிழ், பேச்சு மொழி, பண்பாடுகள் குறித்து அறிந்து கொண்டு வந்தார்.

- 50 ஆண்டு காலம் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாக குஜராத்தி, மராத்தி, ஒரிசா, தக்காணப்பகுதி, நீங்கலாகப் பலுசிஸ்தானம், வங்காளத்தின், இராஜ்மகால் மலைகள் தொட்டு கன்னியாகுமரி வரையும் திரவிட மொழிக் குடும்ப மொழிகளே ஆளப்பெற்றிருந்தது என்கிறார்.
- திருநெல்வேலியில் பணியாற்றிய காலத்தில், அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும் ஈமத்தாழிகள், நாணயங்கள் ஆகியவற்றையும் வெளிக் கொணர்ந்தார்.
- பாண்டிய நாட்டின் மீன் சின்னம் பொறித்த தங்கக் காசுகளைக் கண்டறிந்தார்.

படைப்புகள்

- திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு' (A Political and General History of Tinnevelly)
- ஆங்கில மொழியில் இயற்றிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) எனும் நூல் புகழ்பெற்றது.
- பரதகண்ட புராதனம். தாமரைத் தடாகம், நற்கருணை தியானமாலை உள்ளிட்ட தமிழ் நூல்களை இயற்றியுள்ளார்.
- Records of the Early History of the Tinnevelly Mission உள்ளிட்ட ஆங்கில நூல்களை இயற்றியுள்ளார்.

விருதுகள்/பட்டங்கள்/சிறப்புகள்

- **“திராவிட மொழியியல் ஆய்வின் முன்னோடி”** என்று அறியப்படுகிறார்.

(😊)(😊)(😊) ᘓᘓᘓᘓᘓᘓᘓ (😊)(😊)(😊)

அறிமுகம்

கால்டுவெல் (இராபர்ட் கால்டுவெல்) (மே 7, 1814 - ஆகஸ்ட் 28, 1891) தமிழ்ப் பணியாற்றிய கிறிஸ்தவ மதபோதகர். தமிழ் ஆய்வாளர், சமூகப் பணியாளர், கல்விப் பணியாளர். தமிழில் திராவிடம் என்னும் கோட்பாட்டு அடித்தளத்தை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்.

திராவிட மொழிக் குடும்பம் என்ற கருத்து, பிராந்திய வரலாற்றாய்வுக்கான முன்வரைவு, தேசியக்கல்விக்கான வரைபடச் சித்திரம், இனவரைவியல் ஆய்வுகளுக்கான முன்வடிவம் எனப் பல தளங்களில் அடிப்படை கருத்துருவங்களை உருவாக்கிய முன்னோடி.'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்', 'திருநெல்வேலி வரலாறு' இவருடைய முக்கியமான படைப்புகள்.



பாதிரியார் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் வரலாறு
தமிழ்ப் பணி வரலாறு

https://heritager.in/robert-caldwell/?srsltid=AfmBOorhyCwHFqOUJDl1W4rmzvURJYgsb917z4XyurTflxIH1nU5Z7Fk

கால்டுவெல் குடும்பம் ஸ்காட்லாந்திலிருந்து வட அயர்லாந்துக்குக் குடிபெயர்ந்து வந்தபின் இந்நாட்டில் உள்ள கிளாடி (Clady) என்னும் ஊரில் 1814ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாள் கால்டுவெல் தம்பதியருக்கு இராபர்ட் மகனாகப் பிறந்தார். இராபர்ட் கால்டுவெல் கிளாஸ்கோவில் பள்ளி, கல்லூரிப் படிப்புகளை முடித்தார். இவர் கல்லூரியில் இளங்கலை பயின்று வகுப்பில் முதல் மாணவனாக வெற்றி பெற்றார். ஐரோப்பியச் செம்மொழிகளான இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு மொழிகளையும், வேறு ஐரோப்பிய மொழிகளையும் கல்லூரியில் கற்றிருக்க வேண்டும். அவர் விருப்பப் பாடமாக ஒப்பியல் மொழியைப் பயின்றுள்ளார். கால்டுவெல் பாதிரியார் டப்ளினில் கலை, ஓவியம் போன்ற நுண்கலைகளையும் கற்றிருந்தார்.

இராபர்ட் கால்டுவெல் சமயப் பணியாளராக நியமிக்கப்பட்டுத் தமிழகம் வந்து சேர்ந்தார். இவர் கப்பல் பயணத்தின் போது சென்னை அரசு அலுவலரான சி.பி.பிரௌனுடன் நட்புக் கொண்டார். கப்பல் பயணம் தாமதமாகும் என்ற செய்தி கேட்டு அவர் பயணத்தின்போது இந்திய மொழிகளான சமஸ்கிருதம், தெலுங்கு இவ்விரண்டையும் கற்கத் தொடங்கினார். கால்டுவெல் பாதிரியார் சென்னை வந்தடைந்ததும் டாக்டர் ஜான் ஆன்டர்சன், வின்ஸ்லோ, டாக்டர் போப் ஐயர், ஹென்றி பவர் போன்ற அறிஞர்களுடன் நண்பரானார்.

1841ஆம் ஆண்டு கால்டுவெல் பாதிரியார் சென்னையிலிருந்து கால்நடையாகவே கிழக்குக் கடற்கரை வழியாகத் திருநெல்வேலி போய்ச் சேர்ந்தார். இவர் போகும் வழியில் சிதம்பரம், தஞ்சை, மேலும் இதா மாவட்டங்களிலுள்ள கோவில்களைக் கண்டு வியந்து அவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டார். டாக்டர் கால்டுவெல்டுக்குத் துணையாக வந்த எட்வர்ட் சார்ஜன்ட் என்பவர் தமிழில் நல்ல புலமை பெற்றிருந்தார். அவர் தமிழரைப் போலவே தமிழ் மொழியை எளிதாகவும், சரளமாகவும் பேசினார். மேலும் அவர் தமிழ்க் கருத்துக்களை நன்கு அறிந்தவராகவும் இருந்தார். அவ்வறிவு கால்டுவெல்லுக்குப் பயனுள்ளதாக இருந்தது. ஏனென்றால் கால்டுவெல் அவருடன் அடிக்கடி கலந்து பேச முடிந்தது.

இராபர்ட் கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடையன்குடியைத் தேர்வு செய்து அதைத் தமது மறைப்பரப்பு பணித்தளத்தின் மையமாகக் கொண்டார். அவ்வூர் வறண்ட சூழலுடையதாகக் காணப்பட்டது. பாலைவனமாக இருந்த ஊரைச் சோலைவனமாக மாற்றி மக்கள் வாழ்வதற்கேற்ற இடமாக மாற்றினார். சமயப்பணியாளரான கால்டுவெல் தமக்காக ஒரு வீட்டையும் இறை வழிபாட்டுக்காக ஓர் ஆலயத்தையும் கட்டி எழுப்பினார். தேவாலயம் கலை நுணுக்கம் நிறைந்ததாக இருந்தது.மக்களின் அறிவுக் கண்களைத் திறக்க டாக்டர் கால்டுவெல் பள்ளிக்கூடங்கள் பல தொடங்கி நடத்தினார். பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளி தொடங்கப் பட்டது. டாக்டர் இராபர்ட் கால்டுவெல் 1844ஆம் ஆண்டு தமது 29 வது வயதில் இலண்டன் சமயக் குழுவைச் சார்ந்த ரெவரென்ட் சார்லஸ் மால்ட் என்பவரின் மகளான எலிசாவைத் திருமணம் செய்து கொண்டார். இவரது மனைவியார் இடையன்குடி பெண்கள் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றினார். மேலும் நோயாளிகளையும் கவனித்து வந்தார். இவர் பேச்சுத் தமிழைச் சரளமாகப் பேசினார். பிற்காலத்தில் அவருடைய கணவர் செய்த ஆராய்ச்சிக்குப் பேச்சுத் தமிழ் பற்றி அறியப் பெரிதும் துணைபுரிந்தார். இத்தம்பதியருக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களுமாக நான்கு குழந்தைகள் பிறந்தனர். மகன்களின் பெயர்கள் இராபர்ட் அடிங்க்டன், இராபர்ட் சார்லஸ் ஆகும். மகள்களின் பெயர்கள் லூயிசா, வியாட் என்பதாகும். லூயிசா இளமையிலேயே காலமாகி விட்டாள்.1877இல் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அது திருநெல்வேலியை மிகவும் பாதித்தது. அப்போது கால்டுவெல் ஏழை எளியவர்களுக்குப் பெரிதும் உதவினார்.

கால்டுவெல் தமது இறுதிக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தபோது கொடைக்கானலில் தம் மகளுடன் வாழ்ந்து வந்தார். அங்கேயே

1891ஆம் ஆண்டு இறையடி எய்தினார். அவருடைய பூதவுடலை இடையன்குடிக்குக் கொண்டு சென்று நல்லடக்கம் செய்தனர்.

முதல் முதலில் தமிழ் மொழியில் ஒப்பியலாய்வு முறையை அறிமுகப்படுத்தியவர் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் என்பதை நாம் அறிவோம். ஆராய்ச்சி செய்து 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலைக் கால்டுவெல் பாதிரியார் எழுதினார். டாக்டர் கால்டுவெல் தமிழ் இலக்கண ஆய்வில் முதன்மையானவராகத் திகழ்ந்தார். அவர் தமது உயர் கல்விப் படிப்பில் ஒப்பியல் மொழி நூலைக் கற்றதன் பயன்தான். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுத உறுதுணையாய் இருந்துள்ளது.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கணங்களைக் கற்கவும் அவைகளைப் பயன்படுத்தவும் தமிழர்களாகிய நமக்குப் புதிய வழி காட்டி ஒளியேற்றிய மேலைநாட்டு அறிஞர்களுள் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்லும் ஒருவராவார். இவ்வறிஞர் படைத்த 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்* தமிழர்களாகிய நம்மில் இலக்கணத்தை அணுகும் முறையில் ஒரு புதுத் திருப்பத்தை உண்டுபண்ணியது எனக் கூறலாம்.

அடுத்து, கால்டுவெல் அறிஞர் வரலாற்றுத் துறையில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். மார்க்கோபோலோ காயல் பற்றிக் குறிப்பிடுவதைக் கண்டு தமிழகம் முற்காலத்திலிருந்து மேலை நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தது என்று அவர் கருதுகிறார். சான்றாக ஹீப்ரூ மொழியிலும், கிரேக்க மொழியிலும் தமிழ்ச் சொற்கள் இருப்பதை அவர் காட்டுகின்றார். எடுத்துக்காட்டாக: மயில் இறகைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான தோகை என்பது 'துகி' என்று ஹீப்ரூ மொழியில் வழங்குகின்றது. 'அரிசி' என்ற சொல் கிரேக்க மொழியில் 'அருசா' என்று வழங்குகின்றது.

அகழ்வாராய்ச்சியிலும் டாக்டர் கால்டுவெல் முனைப்புடன் ஈடுபட்டிருந்தார். வரலாற்றுச் சிறப்புடைய 'புன்னைக்காயல்' 'கொற்கை' என்ற இடங்களில் அகழாய்வு செய்தார். 'புன்னைக்காயல்' என்னும் ஊரில் பழைய பல கட்டடங்களும், ஆலயங்களும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பழைய காயல் என்ற இடத்தில் அவர் வரலாற்றுச் சன்றுகளை வெளிப்படுத்த நிலத்தைத் தோண்டினார்.வரலாற்று ஆராய்ச்சியில் ஆர்வமிக்கவர் இராபர்ட் கால்டுவெல், டாக்டர் கால்டுவெல் திருநெல்வேலியின் பொது வரலாறும் அரசியலும் என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதினார். (A Political and general History of Tinnelvelly

1881 Caldwell.R) இந்த நூல் வரலாற்று நூல்களின் தரத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்று முனைவர் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் கருதுகின்றார். வரலாற்று உண்மைகளைத் திரட்டுவதற்குரிய வழிவகைகளையும் சான்றுகளின் உண்மைகளைத் தக்கவாறு அறியும் முறையும் இந்நூல் மூலம் அவர் தெளிவாக்கியுள்ளார். பெயர்கள், சொற்கள் ஆகியவற்றின் மூலத் தோற்றம், கல்வெட்டுகள், நாணயங்கள், வெளிநாட்டார் கூற்றுகள் ஆகியவை வரலாற்றின் அடிப்படை மூலங்கள் ஆகும். இடங்களின் பெயர்களைப் பகுத்தும் அவற்றின் வேர்களை ஆராய்ந்தும் கால்டுவெல் சில முடிவுகளுக்கு வருகின்றார்.

கால்டுவெல் ஏறத்தாழ நான்கு அத்தியாயங்களில் பாளையக்காரர் வரலாற்றை ஆராய்ந்துள்ளார். இந்தப் பகுதியில் இவர் கட்டபொம்மன் என்பது குடிப்பெயர் என்பதை எடுத்துக்காட்டி நான்கு கட்டபொம்மன்களைப் பற்றிச் சுட்டிக் காட்டுகின்றார்.நெல்லை மாவட்ட மக்கள் கொடும் பஞ்சத்தில் சிக்கி, பட்ட துன்பங்களையும், கடுந்துயர்களையும் கால்டுவெல் விரிவாகச் சித்திரித்துள்ளார். அக்காலத்தில் அப்பகுதியில் நிலவிய சமுதாய நிலைகளையெல்லாம் தெரிந்து கொள்ள இவரது தெளிந்த உரைநடை, தத்ரூபமான வருணனைகள் உதவுகின்றன. இலக்கிய வரலாற்றுக்கு உதவும் வகையில் திருநெல்வேலியில் வாழ்ந்த புலவர்கள், கவிஞர்கள் ஆகியோரது பெயர்ப் பட்டியலையும் கால்டுவெல் இணைத்துளளார்.

ஏறத்தாழ இதே காலக்கட்டத்தில் டாக்டர் கால்டுவெல் "மறுநெறிக் கிறித்தவர்களின் இரு பிரிவினர் திருநெல்வேலியில் ஆற்றிய பணியின் வரலாறு History of the Tinnevelly Mission of the S.P.C.K and S.P.G) என்ற வரலாற்று நூலை எழுதியுள்ளார். இந்நூல் 1881இல் அச்சடிக்கப்பட்டது.

கால்டுவெல் சமய நூல்கள் சில எழுதியுள்ளார். அவர் நற்கருணைத் தியான மாலை 1853, பரத கண்ட புராதனம், தாமரைத் தடாகம், ஞானக் கோயில் ஆகிய உரைநடை நூல்களைப் படைத்துள்ளார். அன்னார் பாடிய கிறித்தவப் பாடல்கள் இன்றும் மறுநெறிக் கிறித்தவக் கோவில்களில் பாடப்பட்டு வருகின்றன. மேலும் அவர் விவிலியத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

அறிஞர் கால்டுவெல் எழுதியுள்ள 'இலக்கணமும் மொழியியலும் பற்றி டாக்டர் மீனாட்சி சுந்தரம் கீழ்க்கண்டவாறு பகுப்பாய்வு செய்துள்ளார். இலக்கணமும் மொழியியலும்: இலக்கணத்தைக் கற்பதிலும், இலக்கணத்தைப் பயன்படுத்துவதிலும் நமக்குப் புதிய ஒளி காட்டிய அறிஞர் பெருமக்களுள் டாக்டர் கால்டுவெல்லும் அடங்குவார். அவரின்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நாம் இலக்கணத்தை அணுகும் முறையில் புரட்சிகரமான ஒரு புதுத் திருப்பத்தையே உண்டாக்கிவிட்டது எனலாம். கால்டுவெல் அவர்களின் நூலைக் கற்ற பிறகு நம் தமிழ் நாட்டு அறிஞர்களும் நம் இலக்கண நூல்கள் அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ள பாங்கினைத் தெள்ளிதின் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

வரிவடிவ இயல் (Orthography): திராவிட மொழிகளின்

எழுத்துக்கள் வட இந்திய மொழிகளினின்று பெறப்பட்டவையா என்ற சிக்கல் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்று கால்டுவெல் கருதினார். இதுபற்றி அவர் தமது கருத்தைக் குறிப்பிடும் போது கால்டுவெல் திராவிட மொழிகளின் பழமைச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிறார்.

“இக்கால வட இந்திய மொழிகளைக் காட்டிலும் தென்னிந்திய மொழிகள் இலக்கியப் பழமையுடையனவாய், சிறப்புடையவனவாய் இருப்பதால்தான் அவ்வம் மொழிகளின் எழுத்துக்களின் பழமை பற்றிய தெளிவு சிறப்பு மிக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.”

ஒலியியல் (Phonology):

கால்டுவெல் தம்முடைய திராவிட ஒப்பிலக்கண நூலில் தமிழ் எழுத்துக்களின் தனித்தன்மைகளைப் பற்றி ஆய்வு செய்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

1. தமிழ் நெடுங்கணக்கில் எகர ஒகாரங்களுக்கும், ஏகார ஓகாரங்களுக்கும் தனித்தனி வரிவடிவங்கள் உள்ளன.

2. வடமொழி நெடுங்கணக்கில் காணப்படும் அரை உயிரெழுத்துக்களான ‘ri’ ‘iri’ ஆகியவை தமிழ் நெடுங்கணக்கில் காணப்பெறவில்லை. .மூக்கொலிகள் தமிழில் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவை தெளிவான திருத்தமான மூக்கொலிகளாக (மெல்லினமாக) உள்ளன.

3. தெலுங்கு மொழி நெடுங்கணக்கில் காணப்பெறும் ‘அரை அனுஸ்வத்ரா’ தமிழில் இல்லை. வல்லின ஒலிகள் மெல்லின ஒலிகளோடு சேர்ந்து வரும்போது தம் வன்மை குறைந்து காணப்படுவது தமிழில் எல்லா இடங்களிலும் இயல்பாக உள்ளது.

4. தமிழில் வெடிப்பொலிகள் (aspirates) இல்லை. வடமொழியிலிருந்து எந்த வெடிப்பொலி மெய்களையும் தமிழ் கடன்

பெறவில்லை....

5. 5. வடமொழியிலுள்ள க்ஷ. ஸ. ஷ ஆகிய ஒலிகள் தமிழ் நெடுங்கணக்கில் இல்லை.

இலக்கிய வரலாறு

கால்டுவெல் தொடக்கத்தில் இத்துறையில் தம் பணியைத் தொடர்ந்தார். அவர் தமக்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டுஓர் இலக்கிய வரலாற்றை எழுதினார். அதில் பல்வேறு இலக்கிய நூல்களுக்கு அவை வெளியான காலங்களைக் குறிக்க முயன்றார். இவர் குறித்த இந்தக் காலங்கள் பின்னர்த் தவறானவை எனக்கண்டு அறியப் பட்டன. அவருடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலின் மூன்றாவது பதிப்பிலும் அதற்குப் பின்பு வந்த பதிப்புகளிலும் இப்பகுதிகள் கொண்ட அதிகாரம் நீக்கப்பட்டு விட்டது. ஏனென்றால் காலவரையறை தவறு என்று நிரூபிக்கப்பட்டதால்தான்.

சொல்லமைப்பு

எவ்வாறு திராவிட மொழிச் சொற்களின் வேர்ச் சொற்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை எந்த நிலையில் தொடக்கத்தில் ஓரசைச் சொற்களாய் இருந்துள்ளன, எவ்வாறு சொல்லாக்கச் சாரியை, சந்தி, இடைநிலைகள், விகுதிகள் உருவாக்கத்தில் இடம் பெற்றன என்பன போன்ற நெறியில் சிறந்த தலைமை நிலையில் நின்று ஆய்ந்துள்ளார். தவிரவும் பதின்மூன்று சிறப்படை விகுதிகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

பால் பாகுபாடு

தமிழில் பெயர்ச் சொற்கள் முதலில் உயர்திணை, அஃறிணை எனப் பகுக்கப்படுகின்றன. பிறகு அவை பல்வேறு பால்களாகப் பகுக்கப்படுகின்றன. “பெயர்ச்சொற்களின் இத்தகைய பாகுபாடு இந்தோ-ஐரோப்பிய, செமெட்டிக் மொழிகளில் உள்ளது போல அவ்வளவு கற்பனையாக இல்லை. எனினும் இப்பாகுபாடு தத்வார்த்தமாக உள்ளது.” பால்பாகுபாடு பற்றிய தனித்தன்மையுடைய விதியானது “வளர்ந்து வரும் அறிவின் பயனாகவும், பண்பட்ட இலக்கண வளர்ச்சியின் தன்மையாகவும்” இருப்பதைத் தன்னாட்டு மக்களுக்கும் ஏனைய அறிஞர்களுக்கும் முதன்முதலாக வெளிப்படுத்தியவர் கால்டுவெல் ஆவார்.

வேற்றுமை

தமிழில் எண்ணற்ற ‘வேற்றுமைகள்’ உள்ளன. எட்டு வேற்றுமைகளைக் கொண்ட சமஸ்கிருதத்தைப் போன்று கூறுவது சரி இல்லை என்கிறார் கால்டுவெல். இவ்வெட்டு வேற்றுமைகளைத் தவிர கால்டுவெல் கருத்துப்படி “எழுவாய், விளி வேற்றுமைகள் சாராத ஒரு வேற்றுமை” இருக்கிறது. மூன்றாம் வேற்றுமையை இரண்டாகப் பிரிக்கலாம் என்று அவர் கருதுகிறார். ஐந்தாவது வேற்றுமை இன்றியமையாதது அன்று என்று கருதுகிறார். மூன்றாவது, ஏழாவது வேற்றுமைகள் இந்த ஐந்தாம் வேற்றுமையின் வேலையைச் செய்கின்றன. வேற்றுமைகள் பற்றிக் கால்டுவெல் ஆழ்ந்த ஆய்வு செய்துள்ளார் என்பதை இது மெய்ப்பிக்கிறது. வேற்றுமை அமையும் முறையில் புதிய விதிகளும், வகைப்பாடுகளும் செய்தல் இன்றியமையாதது.

பெயரடைகள்

கால்டுவெல் பெயரடைகளை நன்கு ஆராய்ந்தார். தொடர்புடைய மொழிகளுடன் பெயரடைகளை அமைப்பது பற்றிய முறையைப் பகுத்தாய்ந்தார். தமிழில் பெயரடை அமைப்பது பற்றி ஒரு உறுதியான முடிவுக்கு வந்தார். தொடக்ககாலத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் பெயரடைகளைச் சொல் வகையாகக் குறிக்கவில்லை. வெளிநாட்டு அறிஞர்கள் அவர்களுடைய மொழிகளில் பெயரடைகள் இருப்பதைக் கண்டு அந்த அடிப்படைகளில் தமிழில் பெயரடையாக வழங்கும் சொற்களையெல்லாம் பெயரடைகள் என்று தனியே ஒரு சொல் வகையை உருவாக்கினார். சொல்லை உருவாக்கும் உருப்புகள் தெளிவாகத் தரப்பட்டன. பெயரடைகளை எவ்வாறு உருவாக்குவது என்ற வழிமுறைகள் வெளிநாட்டு மாணவனுக்கு உதவியாகத் தரப்பட்டன. இத்தகைய வழிமுறை தமிழ் இலக்கண ஆசிரியர்களால் தெளிவாகத் தரப்படவில்லை. எனவே வெளிநாட்டு அறிஞரின் நூல் தமிழ் நாட்டு இலக்கண ஆசிரியர்களுக்குக் கூட உதவியாக அமைந்தது. இது தமிழுக்கு ஒரு கொடையாகக் கருதத் தக்கது. சிறப்பாக இலக்கணத்திற்குப் பெருங்கொடையாகும்.

எண்ணுப் பெயர்கள்

தமிழிலுள்ள எண்ணுப் பெயர்களைக் கால்டுவெல் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அவற்றின் வேர்ச் சொற்களை அறிய முயன்றார். இவ்வாய்வு செய்கிற வகையில் தமிழ் எண்ணுப் பெயர்களைத் தமிழோடு தொடர்புடைய பிற மொழிகளிலுள்ள எண்ணுப் பெயர்களுடன் ஒப்பிட்டும், வேறுபாடு கண்டும் இம்மொழிகளில் எவ்வாறு பல பழைய வடிவங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன என்றும் காட்டுகிறார். மேலும் “அத்தகைய கூட்டுச் சொற்களில்

எண்ணுப் பெயரடைகள் எவ்வாறு எண்ணுப் பெயர்களை மிகச் சுருக்கமாகவும், தூய பழைய வடிவத்திலும் வெளிப்படுத்துகின்றன" என்பதைக் காண்கின்றோம். குறுகிய, எளிய பெயரடைகளுடன் ஒன்றன்பால் விகுதி உருப்புக்களையும் இன்னோசைக் கூறுகளை அல்லது வேர்ச் சொல்லில் உள்ள உயிரெழுத்தை நீட்டுவதாலும் பல்வேறு பெயர்ச் உருவாக்கப்படுகின்றன என்று அவர் காட்டியுள்ளார். சொற்கள் எவ்வாறு

மறுபெயர்கள் அல்லது மூவிடப் பெயர்கள். மறுபெயர்கை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொழுது கால்டுவெல் பல்வேது வகைப்பட்ட இடப்பெயர்களை ஆய்ந்தார். ஒவ்வொரு வகையையும் தனித்தனியே ஆராய்ந்துள்ளார். அவற்றின் மூல வடிவத்தைக் கண்டறிய அவற்றைத் தொடர்புடைய மொழிகளில் உள்ள இடப்பெயர்களுடன் ஒப்பாய்வு செய்தார். ஒவ்வொரு மூலக்கூறை (வேர்ச்சொல்லை) உலகத்திலுள்ள முக்கியமான மொழிகளுடன் எல்லாம் ஒப்பாய்வு செய்கிறார். மூவிடப் பெயர்களின் வரலாற்றை முதன் முதலாகக் கண்டறிந்ததன் மூலம் தமிழுக்குச் சிறப்பாகவும் மொழிக்கும் பொதுவாகவும் அவர் நற்பணி செய்துள்ளார். தன்மை இடப்பெயர். முன்னிலை இடப்பெயர், சுட்டு வினாப் பெயர்கள், இணைக்கும் மாற்றும் பெயர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வினைச் சொற்கள்

வினைச் சொற்கள் உருவாகும் கட்டமைப்பை அலசும்போது தமிழ் வினைகளின் தனி இயல்புகளை டாக்டர் கால்டுவெல் எடுத்து மொழிகின்றார். தமிழ் வினைகளின் கட்டமைப்பு, வளர்ச்சி எழுதும் நிலை கண்டுபிடிக்கப்பட்ட தொடக்கக் காலத்திலேயே கவனத்தை ஈர்த்துள்ளது. அவ்வினைகள் மிக எளிமையாகவும், தெளிவாகவும் அமைந்துள்ளபாங்கு அவரைத் தமிழ் இலக்கிய மொழிப் பண்பாட்டை மிக்க தொன்மை வாய்ந்தது என எடுத்துக் கூறச் செய்துள்ளது.

1. தன்வினை, பிறவினை
2. ஏவல் வகைகள்
3. செயப்பாட்டு வினை
4. எதிர்மறை வினை
5. குறிப்பு வினை
6. காலங்கள்
7. நிகழ்காலம்
8. இறந்த காலம்
9. எதிர்காலம்
10. தழுவியற் சொல் (பெயரெச்சம்)
11.கட்டுப்பாட்டு நிலைப்பாங்கு

12. **வினைச் சொல்லின் பாங்குகள்**
13. **ஏவல் வினைப்பாங்கு**
14. **செய என் எச்சப்பாங்கு**
15. **வேரில் அல்லது வினையடியில் முளைத்தப் பெயர்கள்**
16. **வினையடிப் பெயர்கள்**
17. **செயற்படு வினைப் பெயர்கள்.**

அருஞ்சொல் விளக்கம் காட்டும் மொழி இன உறவுகள் :

திராவிட மொழிகளைத் தனிக் குழுவாக்கி ஆய்வு செய்த முதன்மையானவருள் ஒருவரான கால்டுவெல் அந்தக் குழுவில் தமிழ் மொழிதான் தமக்கை என வெளிப்பட எடுத்து மொழிகிறார். இந்தத் திராவிட இனமொழிகளைப் பண்பட்டவை என்றும் பண்படாதவை என்றும் இரண்டாகப் பிரித்துப் பேசுகிறார். அவற்றுள் தமிழ் மொழி மிகத் தொன்மையானது மட்டுமின்றி மிகவும் பண்படுத்தப்பட்ட மொழியாகவும் விளங்கி வந்துள்ளது என்பது அவரது கணிப்பாம். அடிக்கடி பலமுறை மலையாள மொழி, தமிழ் மொழியின் மகளாகக் கருதத்தக்கது எனப் பேசுகிறார். தமிழ் மொழி வடமொழியிலிருந்து வேறுபட்டது என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆய்ந்து அலசிய முதன்மையானவர்களுள் ஒருவராய் நின்றார் கால்டுவெல்.

டாக்டர் கால்டுவெல் பாதிரியார் ஆழ்ந்த, விசாலமான அறிவுடையவர். இவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற பெரிய நூல் இன்றளவும் விலைமதிப்புள்ளதாக உள்ளது. இவர் ஒரு பன்மொழி அறிஞர். அவருக்கு விருப்பமான சமயப்பணியை ஆற்றியதோடல்லாமல் இலக்கிய ஆர்வமிக்க இவர் பல நூல்களை எழுதியுள்ளார். தமிழ் மொழி வரலாற்றில் அன்னாரது பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(☺) @@@@@@@@@@@@@@@ (☺)

சமயம்

சபையாளுகை சபை

கால்டுவெல்லின் தந்தை மூப்பராளுகை (presbyterian) சபையைச் சேர்ந்த கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டவர். கால்டுவெல் சிறியவயதி வெஸ்ட்மினிஸ்டர் சிறிய ஞானோபதேசம் (The west minister shorter catechism) என்னும் நூல் வழியாக கிறிஸ்தவ அறிமுகம்

பெற்றார். டப்ளினில் வாழ்ந்த காலகட்டத்தில் அருள்திரு அர்விக் (Rev. Urwick) என்னும் கிறிஸ்தவ அருளுரையாளரின் தொடர்பால் கிறிஸ்தவ இறையியலில் ஈடுபாடு கொண்டவரானார்

மதநம்பிக்கையில் ஊசலாட்டம் கொண்டிருந்த தன்னிடம் கிறிஸ்துவே ஆணையிட்டதாக உணர்ந்ததாகவும் அந்நாள் தன் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது என்றும் கால்டுவெல் தன் நினைவுக்குறிப்புகள் நூலில் குறிப்பிடுகிறார். கால்டுவெல் கிளாஸ்கோ திரும்பி அருள்திரு கிரிவைல் இவிங் (Greville Ewing) தலைமையிலான சபையாளுகை (congregational) சபையின் உறுப்பினராக ஆனார். அருள்திரு சால்மர்ஸ் (Dr.Chalmers) அவர்களின் மாணவராக ஆகி கிறிஸ்தவப் பணிகளில் ஈடுபட்டார். விசிட்டர்ஸ் என்னும் கிறிஸ்தவப் போதனைத் தன்னார்வக்குழு ஒன்றின் உறுப்பினராகப் பணியாற்றினார்.

லண்டன் கிறித்தவ சமயத்தொண்டர் சங்கம்

தென்தமிழகத்தில் மதப்பணியாற்றிக் கொண்டிருந்த லண்டன் கிறித்தவ சமயத்தொண்டர் சங்கம் (லண்டன் மிஷனரி) தன்னார்வலர்களை தேடிக்கொண்டிருந்தது. 1834-ம் ஆண்டு கால்டுவெல்லும் அவர் நண்பர் டபிள்யூ. பி. லியோனும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். பெட்போர்ட்ஷயர் என்னும் இடத்தில் இருர்ந்த டர்வி என்னும் ஊரில் திரு.செசில் அவர்கள் நடத்திய இறையியல் பள்ளியில் சேர்ந்து கல்விகற்றனர்.

லண்டன் சமயத்தொண்டர் சங்கத்தின் சார்பில் கால்டுவெல் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைக் கற்றார். அப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சர். டேனியல் சேண்ட்போர்ட் கிரேக்க மொழியின் சிறப்புகளைப் பிற மொழிகளுடன் ஒப்புமைப்படுத்தி விளக்கிய திறனால் ஈர்க்கப்பட்டார். சமயநூல்களின் ஒப்பியல், மொழி ஒப்பியல் ஆகியவற்றில் கால்டுவெல்லுக்கு அப்போதே ஆர்வமிருந்தது. டேனியல் கீட் சாண்ட்போர்ட் (Daniel Keyte Sandfoard) என்னும் அறிஞர் மொழியியலில் கால்டுவெல்லின் தொடக்ககால ஆசிரியராக திகழ்ந்தார்.கால்டுவெல் கிளாஸ்கோ பல்கலையில் 1837-ல் முதல்மாணவராக வெற்றிபெற்று சர் ராபர்ட் பீல் நினைவுப் பரிசை பெற்றார்.

ஆங்கிலிகன் திருச்சபை

கால்டுவெல் பேராசிரியர் வார்ட்லா (Dr. Wartlaw) கிரிவைல் இவிங் ஆகியோரின் தூண்டுதலால் ஆங்கிலிகன் திருச்சபையில் நாட்டம் கொண்டார். ஆங்கிலிகன் சபையைச் சேர்ந்த ஹூக்கர் என்னும் கிறிஸ்தவ இறையியலாளரின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டார். வாட்டர்லேன்ட் என்னும் ஆங்கிலிகன் சபை அறிஞருடன் அணுக்கமாகப் பழகும் வாய்ப்பும் அமைந்தது.

குருப்பட்டம்

1834-ம் ஆண்டு கால்டுவெல்லுக்கு நுரையீரல் பாதிப்பு உருவானது. அவர் கடற்பயணம் செய்யலாகாது என மருத்துவர்கள் சொன்னாலும் அவர் இந்தியாசெல்வதில் உறுதியாக இருந்தார். ஆகவே அவருக்கு லண்டன் மிஷனரி சங்கம் குருப்பட்டம் வழங்கியது. ஆனால் அவர் அப்போது ஆங்கிலிகன் சபையில் தீவிர ஈடுபாடு கொண்டவராகவே இருந்தார். கால்டுவெல் 1838-ல் லண்டன்மிஷனரி அமைப்பின் சார்பில் இந்தியாவுக்கு கிளம்பினார்.



எலிசா கால்டுவெல்

இந்தியப் பயணம்

லண்டன் திருச்சபை சார்பாக ஜனவரி 8, 1838 அன்று கால்டுவெல், மேரி ஆன் என்னும் கப்பல் மூலம் சென்னை வந்தார். அவருடன் லியோன், ரஸ்ஸல் என்னும் இரண்டு இறைப்பணியாளர்களும் வந்தனர். ஐரோப்பாவில் இருந்து இந்தியாவுக்கு கடலில் பயணம் செய்தபோது ஹவ்ரே என்னும் துறைமுகத்துக்குச் சென்றுகொண்டிருந்த பிரெஞ்சுக் கப்பல் மேரி ஆன் கப்பல் மீது மோதி மூழ்கியது. அதில் பலர் இறந்து அறுவர் மட்டுமே உயிர்

பிழைத்தனர். கப்பலை 'பிளிமத்' துறைமுகத்தில் பழுது பார்த்து பின்னர் கிளம்பியது. அந்தக் காலத்தில் ஐரோப்பாவில் இருந்து இந்தியா வரும் கப்பல்கள் தென்னாப்பிரிக்கா வழியாக வரவேண்டி இருந்ததால், நான்கு மாதப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அவ்வாறு வரும்போது சி.பி. பிரௌன் என்னும் குடிமைப்பணி அதிகாரியுடன் நட்பு ஏற்பட்டது. அவர் ஆந்திராவில் பணி புரிந்தவர் என்பதால் தெலுங்கு, வடமொழி அறிந்து இருந்தார். அவர் வழியாகக் கால்டுவெல் அம்மொழிகளை அறிமுகம் செய்து கொண்டார்

கால்டுவெல்லுக்கு சென்னையில் வில்லியம் ஹென்றி ட்ரூ, மிரன் வின்ஸ்லோ, ஹென்றி பவர், ஜான் ஆண்டர்சன் ஆகிய ஆங்கிலேய தமிழறிஞர்களின் நட்பு கிடைத்தது. ட்ரூ அவர்களின் இல்லத்தில் தங்கி தமிழ் கற்றுக்கொண்டார்.

சென்னையில்

கால்டுவெல் சென்னையில் 1838 ஜூன் முதல் ஐந்து மாதம் ஆங்கிலேயச் சிற்றாலயத்தில் போதகராகப் பணிபுரிந்தார். சென்னை வேப்பேரியிலுள்ள லண்டன்மிஷன் சபையிலும் போதகராகப் பணிபுரிந்தார். சென்னை வாழ்க்கையில் ஜி.யு. போப் , ஜான் ஸ்கட்டர், ஜான் டக்கர் போன்றவர்களுடன் அணுக்கமாக இருந்தார்.

எஸ்.பி.ஜி சபை

கால்டுவெல் ஆங்கிலிகன் சபையில் இருந்த சி.எம்.எஸ் மற்றும் எஸ்.பி.ஜி என்னும் இரு சபைகளில் எஸ்.பி.ஜி சபையில் சேர்ந்தார். அதற்கு அச்சபையின் பேராயர் ஸ்பென்ஸர் காரணமாக அமைந்தார். 1841 பிப்ரவரி 28-ம் தேதி எழுதப்பட்ட கடிதத்தில் தன் சகோதரியிடம் தான் லண்டன்மிஷன் அமைப்பை விட்டு விலகுவதாக தெரிவித்திருந்தார். 1841 ஜூன் மாதம் எல்லா உறவுகளையும் முறித்துக்கொண்டார்.

கால்டுவெல் 19 செப்டெம்பர் 1841-ம் நாள் சென்னை பேராயர் ஜார்ஜ் டிரிவர் ஸ்பென்ஸர் அவர்களால் உதகமண்டலத்தில் உள்ள புனித ஸ்டீபன் ஆலயத்தில் வைத்து ஆங்கிலிகன் திருச்சபை போதகராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

பேராயர் பதவி

கால்டுவெல் 11 மார்ச் 1877-ம் ஆண்டு கல்கத்தா பேராலயத்தில் கல்கத்தா பேராயர் எட்வர்ட் ரால்ஃப் ஜான்சன் , சென்னை பேராயர் பிரெடெரிக் ஜெல், மும்பை பேராயர் லூயி ஜார்ஜ் மிலன், கொழும்பு பேராயர் ரெஜினால்ட் காப்புஸ்டோன் ஆகிய நான்கு பேராயர்களால் பேராயர் (பிஷப்) பதவிக்கு அருட்பொழிவு செய்யப்பட்டார்.

கல்விப் பணி

பள்ளிகள்

கால்டுவெல் இடையன்குடியை மையமாக்கி முதன்மையாக கல்விப்பணியை முன்னெடுத்தார்.அருள்திரு ரேனியஸ் 1821-ம் ஆண்டு இடையன்குடியில் ஒரு சிறு பள்ளியை தொடங்கி நடத்திவந்தார். கால்டுவெல் இடையான்குடிக்கு வரும்போது இடையன்குடி, தருவை, கீரைக்காரந்தட்டு ஆகிய மூன்று ஊர்களில் மட்டுமே பள்ளிகள் இருந்தன. இடையன்குடி பள்ளியில் 40 மாணவர்கள் பயின்றனர். கால்டுவெல் 1841-ல் இடையன்குடியில் ஆண்களுக்கு உண்டு உறைவிடப்பள்ளியை தொடங்கினார். 1842-ல் பெண்களுக்கான பள்ளியை தொடங்கினார். 1844 மே மாதம் கால்டுவெல்லின் மனைவி எலிசா அம்மையார் பெண்களுக்கான உண்டு உறைவிடப்பள்ளியை இடையன்குடியில் தொடங்கினார்.

கால்டுவெல்லுக்கு பள்ளிகளை நடத்துவதில் அருள்திரு பிலிப் பிளெச்சர் உதவியாக இருந்தார். 1845-ல் பேராயர் ஸ்பென்ஸர் இடையன்குடிக்கு வந்தபோது கால்டுவெல்லின் நிர்வாகத்தில் 14 பள்ளிகள் செயல்பட்டு வந்தன.

1858-ல் சென்னை மாகாண அரசு தாலுகா தலைமையிடங்களில் தாலுகா பள்ளிக்கூடங்களை நிறுவ ஆணையிட்டது.1859 ஏப்ரலில் கால்டுவெல் அந்த ஆணையை அடிப்படையாகக்கொண்டு தருவை, ராதாபுரம், சமூகரெங்கபுரம், குலசேகரன்பட்டினம், ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி, ஆறுமுகமங்கலம்,தென் திருப்பேரை, தட்டான் மடம் என்னும் ஒன்பது ஊர்களில் பள்ளிகளை நிறுவினார்.

1876-ல் கால்டுவெல் இடையன்குடியில் பாலர்பள்ளி ஒன்றை தொடங்கினார்.1884-ல் தன் துணைவி எலிசாவுடன் தூத்துக்குடிக்கு இடம்பெயர்ந்த கால்டுவெல் அங்கே மேலூரிலும் கீழூரிலும் இரண்டு பள்ளிகளைத் தொடங்கினார். 1884-ல் தூத்துக்குடி வடக்கூரில் ஒரு பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். 1887 நவம்பர் மாதத்தில் தூத்துக்குடியில் விக்டோரியா பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியை தொடங்கினார்.

ஆசிரியர்பயிற்சிப் பள்ளி

கால்டுவெல்லின் புதல்விகளான இசபெல்லாவும் லூயிஸாவும் 1864-ம் ஆண்டு இங்கிலாந்தில் கல்விகற்று திரும்பி வந்தார்கள். அவர்கள் பள்ளிகளின் பொறுப்பை ஏற்று நடத்தினார்கள். ஆசிரியர்கள் கூடுதலாகத் தேவைப்பட்டமையால் கால்டுவெல் 1865-ம் ஆண்டு உண்டு உறைவிடப்பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்பயிற்சி அளிக்க தொடங்கினார். அது ஆசிரியப்பள்ளியாக ஆகியது. முதற்கட்டமாக ஏழு மாணவர்களும் நான்கு மாணவிகளும் ஆசிரியர்களாக பணியாற்றலாயினர்.

இறையியல்பள்ளி

கால்டுவெல்1842ல் இடையன்குடியில் ஓர் இறையியல்பள்ளியை தொடங்கினார்.

சாயர்புரம் கல்லூரி


சாயர்புரத்தில் ஜி.யு.போப் 1844-ல் சாயர்புரம் செமினரி என்னும் பெயரில் ஒரு இறையியல்பள்ளி தொடங்கப்பட்டது. அது பின்னர் அப்பகுதி மாணவர்களுக்கான உயர்நிலைப்பள்ளியாக ஆகியது. கால்டுவெலின் முயற்சியால் சாயர்புரம் தலைவராக இருந்த அருள்திரு ஆதம்சன், அருள்திரு ஜே.ஏ.ஷாராக் ஆகியோரின் ஆதரவுடன் சாயர்புரம் உயர்நிலைப் பள்ளி 1880 சாயர்புரம் கல்லூரியாக ஆகியது. ஆதம்சன் அக்கல்லூரியின் முதல்வராக ஆனார்.

கால்டுவெல் கல்லூரி

சாயர்புரம் கல்லூரி 1883-ல் தூத்துக்குடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. புதியதாக இடம் வாங்கி விரிவாக்கம் செய்யப்பட்ட அக்கல்லூரி கால்டுவெல் கல்லூரி என

அழைக்கப்பட்டது. சாயர்புரம் உயர்நிலைப் பள்ளி போப் நினைவு பள்ளியாக நீடித்தது.

மொழியியல் ஆய்வுகள்



திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்

கால்டுவெல் ஆங்கில மொழியில் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) என்னும் நூல் மிக முக்கியமான படைப்பு.

கால்டுவெல் இந்த ஒப்பிலக்கண ஆய்வை அவருடைய இந்தியவியல் ஆய்வின் ஒரு பகுதியாக நிகழ்த்தினார். தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளை ஆராய்ந்த கால்டுவெல்அவற்றுக்கு ஒரு பொதுவான இலக்கண அமைப்பு இருப்பதை உணர்ந்தார். அவை சம்ஸ்கிருதச் சொற்களஞ்சியம், சம்ஸ்கிருத இலக்கணம் ஆகியவற்றின் துணையின்றி தனித்தியங்கும் இயல்பு கொண்டவையாக இருப்பதால் இவை முற்றிலும் வேறு மொழிக்குடும்பம் என்பது அவருடைய கருத்து. இந்தமொழிகளை அவர் திராவிட மொழிகள் என்றார்.

1856-ம் ஆண்டு Comparative Grammar of the Dravidian of South Indian Family Language என்ற ஆங்கில நூலை எழுதினார். இந்நூல் உலக அளவில் மொழியியல் ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்யும் நூலாக இருக்கிறது. இந்நூலுக்காக அவர் படித்த கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று


அழைக்கப்படும் இந்நூலின் தமிழ் வடிவப் பெயர் "திராவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்களின் ஒப்பிலக்கணம்". அந்த நூலின் மூலம் இந்திய மொழிகளில் திராவிட மொழிக்குடும்பம் தனித்து இயங்கும் ஓர் அமைப்பு என்ற கருத்தை ஆய்வுலகில் நிறுவினார்.

திராவிட என்னும் சொல்லை சிற்ப - தாந்த்ரீக மரபில் இருந்து எடுத்துக்கொண்டார். திராவிட என்பது ஒரு இனமாக இருக்கலாம் என்ற ஊகத்தை அவர் முன்வைத்தார். அந்த ஊகத்தை உடனடியாக ஒரு கோட்பாடாக ஆக்கிக் கொண்டு திராவிட இயக்கம் உருவானது. அவரிடமிருந்தே திராவிடவியல் ஆய்வுகள் தொடங்குகின்றன.

கால்டுவெல் முன்வைத்த திராவிடமொழிகொள்கை பின்னர் பெரிதாகப் பேசப்பட்டது. தமிழ் மொழிக் குடும்பம் இருப்பது பற்றிக் கண்டு பிடித்தது இவரல்ல என்றாலும், அதற்கான சான்றுகளை ஒருங்கிணைத்து அக்கருதுகோளை முதன்மைப்படுத்தியவர் கால்டுவெல். இவரது மொழி ஆராய்ச்சியின் விளைவாக திராவிட இனவாதம் தமிழகத்தில் வலுவாக உருவானது. எல்லிஸ், கால்டுவெல் போன்றோரால் முன்வைக்கப்பட்டு மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, ஞானியார் அடிகள் போன்ற சைவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டது.

"குமரி முனைக்குத் தென்பால் உள்ள பெருநாட்டில் முதன் முதல் தோன்றி வாழ்ந்த நன்மக்களே ஒரு காலத்தில் இந்திய நாடெங்கும் பரவிய தமிழர் ஆவர். தமிழரை வடமொழியாளர் திராவிடர் என்று அழைத்தனர். குமரிக் கண்டத்தைக் கடல் கொண்ட பொழுது இவருள் சில பகுதியினர் கடல் வழியாகவும், நில வழியாகவும் பெலுசித்தான், மெசபடோமியா முதலிய வடமேற்கு ஆசிய நாடுகளில் சென்று வாழ்ந்தனர்." என்பது கால்டுவெல்லின் கருத்து. (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்).

வரலாற்று ஆய்வுகள்



திருநெல்வேலி சரித்திரம்

திருநெல்வேலியைக் குறித்து அறிவதற்கான முதல் வரலாற்று நூலாக இருப்பது கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி சரித்திரம்.

திருநெல்வேலியில் பணியாற்றிய காலத்தில் அதன் வரலாறு பற்றி கால்டுவெல் ஆய்வுகள் செய்துள்ளார். தகவல் சேகரிப்புக்காகச் சங்க இலக்கியங்களின் ஏட்டுப் பிரதிகளைப் படித்தது மட்டுமன்றி, அகழ்வாய்வுகளில் ஆர்வம் காட்டி பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத்தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் ஆராய்ந்து வெளியிட்டார். மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பாண்டிய நாட்டுக் காசுகள் பல இவ்வாய்வுகளில் கிடைத்துள்ளன. இந்த ஆய்வுகளின் இறுதியில் "திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு (A Political and General History of the District of Tinnevely) என்னும் நூலை எழுதினார். இது 1881-ம் ஆண்டில் மதராஸ் அரசினால் வெளியிடப்பட்டது.

முறைப்படி தரவுகளைச் சேகரிப்பது, அவற்றை ஒழுங்குபடுத்தி முடிவுகளை அடைவது, அவற்றை ஆர்வமூட்டும் முறையில் முன்வைப்பது ஆகியவற்றில் ஐரோப்பிய- கிறித்தவ முறைமையை

அறிமுகம் செய்தார். புராணங்கள் தொன்மங்கள் நம்பிக்கைகள் ஆகியவற்றை தவிர்த்து வரலாற்றைத் தரவுகளின் அடிப்படையில் எழுதக் கற்பித்த முன்னோடிகளில் ஒருவர். தமிழக வரலாற்றெழுத்தைத் தொடங்கிவைத்தவர் என்ற முறையில் முக்கியமானவர்.கால்டுவெல் திருநெல்வேலி சரித்திரம் மூலம் பிராந்திய வரலாற்றாய்வுக்கான முன்வடிவை உருவாக்கினார்.

'திருநெல்வேலிச் சாணார் வரலாறு [1849]' என்ற நூல் வழியாக இனவரைவியல் ஆய்வுகளுக்கான முன்வடிவத்தை உருவாக்கினார். ஆனால் அந்த நூல் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது, நெடுங்காலமாக அச்சிலும் இல்லை. வாழ்நாள் முழுக்க நாடார்கள் நடுவே பணியாற்றியவராயிருப்பினும் அந்த நூலில் நாடார்களை கிட்டத்தட்ட 'வரலாறு அற்றவர்களாக' 'பண்படாக் குடிகளாக' சித்தரித்திருக்கிறார். அவர்களின் குமுக நெறிகள், வழிபாட்டு முறைகள் அவருக்குப் புரியவில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

படைப்புகள்

கால்டுவெல் இயற்றிய தமிழ் நூல்கள்

- நற்கருணை தியான மாலை (1853)
- தாமரைத் தடாகம் (1871)
- ஞான ஸ்நானம் (கட்டுரை)
- நற்கருணை (கட்டுரை)
- பரதகண்ட புராதனம் (1889)



திருநெல்வேலி சரித்திரம்

கால்டுவெல் இயற்றிய ஆங்கில நூல்கள்

- திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian or South Indian Family Languages, 1856)
- திருநெல்வேலியின் அரசியல் பொது வரலாறு (A Political and General History of Tinnevely, 1881)
- தின்னவேலி (திருநெல்வேலி) சாணர்கள்: அவர்களின் மதம், மற்றும் ஒரு சாதியாக அவர்களது நெறிகள் மற்றும் குணங்கள்; அவர்களிடையே கிறிஸ்தவம் பரவுவதற்கு உள்ள வசதிகள் மற்றும் தடைகள் பற்றிய சிறப்புக் குறிப்புகளுடன் - ஒரு வரைவு (The Tinnevelly Shanars: A Sketch of - Their Religion, and Their Moral Condition and Characteristics, as a Cast; with Special Reference to the Facilities and Hindrances to the Progress of Christianity Amongst Them, 1849)
- திருநெல்வேலி உயர் வகுப்பு மற்றும் உயர் சாதியினரிடையே கிறிஸ்தவ மதமற்றத்திற்கு செய்யப்பட்ட பணிகள் (Evangelistic Work amongst the Higher Classes and Castes in Tinnevelly. Rev. Dr. Caldwell's Third Journal,1876)
- மதத்தின் உள்ளிருக்கும் கோட்டை (The Inner Citadel of Religion. S.P.C.K.: London, 1879)
- காப்பாற்றப் படாதவர்களின் அணிவகுப்பு [மதத்தின் வழியில்.] (The March of the Unsaved. [A religious tract.] G. Stoneman: London, 1896)
- திருநெல்வேலியில் வேல்ஸ் இளவரசர் மற்றும் "டெலாகே சாலையிலிருந்து இடையான்குடி வரை" (The Prince of Wales in Tinnevelly, and "From Delahay Street to Edeyengoody.". London: S.P.C.K., 1876)
- குடுமியின் மீதான அவதானிப்புகள் (Observations on the Kudumi. J. J. Craen: [Madras?] 1867)
- இந்தியாவில் மிசனரிப் பள்ளிகளில் கிறிஸ்தவரல்லாத மாணவர்களுக்கு மதக்கட்டளைகளை தெரிவிப்பதை நிறுத்திவைத்தல் தொடர்பாக- மதறாஸ் பங்குத்தந்தைக்கு ஒரு கடிதம் (On reserve in communicating religious


instruction to non- Christians in mission schools in India: a letter to the Right Reverend the Lord Bishop of Madras. Madras: S.P.C.K. Press, 1879)

- கிறிஸ்தவத்துக்கு இந்து மத்ததுடன் உள்ள தொடர்பு (The Relation of Christianity to Hinduism. R. Clay, Sons, & Taylor: London, 1885)
- திருநெல்வேலி கிறிஸ்தவ மிசனின் ஆரம்ப கால வரலாற்றுப் பதிவுகள் (Records of the Early History of the Tinnevelly Mission, etc. Higginbotham & Co.: Madras, 1881)
- மூன்று பாதை வழிகாட்டிகள் (The Three Way-marks. Christian Vernacular Education Society: Madras, 1860).

ராபர்ட் கால்டுவெல்: தமிழின் வேர்தேடி சென்னையிருந்து நெல்லைக்கு நடந்துசென்ற அயர்லாந்து அறிஞர்!

https://www.vikatan.com/literature/arts/robert-caldwell-a-europen-scholar-who-learned-tamil-literature

ராபர்ட் கால்டுவெல்லைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? பெயரையே கேள்விப்பட்டதில்லையே என்கிறீர்களா! கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் திராவிடம் என்ற கருத்தாக்கம் பேசப்பட்டு வருகிறது, கடந்த அரை நூற்றாண்டாகத் திராவிடக் கட்சிகளின் ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. இந்த திராவிடம் என்ற கருத்தாக்கம், அதனடிப்படையிலான அரசியலுக்கு முன்னோடியாக விதைவிதைத்தவராக இருந்த ஒருவரைப் பற்றி அவசியம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்தான் கால்டுவெல், ஒரு அயர்லாந்து அறிஞர்.



ராபர்ட் கால்டுவெல்

1814 மே 7-ம் தேதி அயர்லாந்தில் பிறந்தவர் கால்டுவெல். ஐரோப்பாவில் இருந்து இந்தியாவிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு வருகிறார் கால்டுவெல். தமிழகம் வந்த கால்டுவெல்லுக்கு 18 மொழிகள் தெரியும். இங்கு வந்து தமிழ் மொழியையும் கற்க விழைகிறார் கால்டுவெல். தமிழ்மொழியைக் கற்கும்போது, அதனுடைய அழகு, அதனுடைய செழுமை, அதனுடைய தொன்மை மற்றும் அதனுடைய இலக்கிய வளம் ஆகியவற்றால் ஈர்க்கப்படுகிறார் கால்டுவெல். தொடர்ச்சியாகத் தமிழ் மொழியைக் கற்கும்போது தமிழ்மொழியின் வேர் எங்கிருக்கிறது என்பது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார் கால்டுவெல். தமிழ் மொழி குறித்த ஆராய்ச்சியின்போதுதான் சென்னையில் இருந்து திருநெல்வேலிக்கு நடந்தே செல்கிறார். இடையே திருச்சி, சிதம்பரம், நாகப்பட்டினம், நீலகிரி எனப் பல ஊர்களுக்கு நடைப்பயணமாகச் சென்று திருநெல்வேலியைச் சென்று சேர்கிறார். அப்படிப் பயணம் செய்த பல இடங்களிலும் அந்த மக்களுடைய வட்டார வழக்கு, அந்த மக்களுடைய வாழ்க்கை, அவர்களது தொழில், அவர்களுடைய பொருளாதாரம், அவர்களுடைய சடங்குகள், நம்பிக்கைகள், மதவழிபாடுகள் ஆகியவற்றைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்கிறார். அதன் பிறகே திருநெல்வேலி அருகேயுள்ள இடையன்குடி என்கிற இடத்தைச் சென்று சேர்கிறார் கால்டுவெல்.

தமிழ் மறுமலர்ச்சியில் இராபர்ட் கால்டுவெல்

https://tamil.oneindia.com/art-culture/essays/2008/0624-robert-caldwell-a-pioneer-in-the-study.html#google_vignette

உலக வரலாற்றை மாற்றியமைத்ததில் நூல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. காரல்மார்க்சின் மூலதனம் எனும் நூல் அவ்வகையில் அனைவராலும் போற்றப்படும் நூலாக உள்ளது. அதுபோலத் தமிழக வரலாற்றில் - தமிழ் வரலாற்றில் மிகப்பெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கிய நூல் எனில் அது இராபர்ட் கால்டுவெலின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலாகும். அந்த நூலையும் அதன் ஆசிரியரான கால்டுவெல்லையும் மதிப்பதற்குக் காரணம் தமிழர்களின் உள்ளத்திலும், உலக அளவில் தமிழ்பற்றி ஆராய்ந்த அறிஞர்களின் உள்ளத்திலும் புதிய வெளிச்சத்தை அந்நூல் பாய்ச்சியமையே ஆகும். தமிழக சட்டசபை தேர்தல் 2026 தகவல்களுக்கு ஒன்இந்தியா தமிழுடன் இணைந்திருங்கள் வடமொழியைத் 'தேவ பாஷை' என உயர்த்தியும் தமிழை 'நீச்சபாஷை' எனத் தாழ்த்தியும், தமிழ் இலக்கியங்கள் யாவும் வடமொழி வழிவந்தவை என நேராகவும் உரைகளின் வழியாகவும் வடமொழிச் சார்பாளர்கள் பதிவு செய்தனர். இக்காலகட்டத்தில் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டி மொழித்துறையிலும், அரசியல் துறையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய நூல் கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856, 1875) எனும் நூல் ஆகும். தமிழ்மொழி மிகச்சிறந்த செவ்வியல்மொழி எனவும் தமிழ்ச்சொற்கள் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீனில் இடம்பெற்றுள்ளன எனவும் தமிழ் மொழியிலிருந்து பிறந்தவையே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு மொழிகள் எனவும் இவையாவும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை எனவும் திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் திருந்தாத மொழிகள் என இருவகைப்படுத்தியும் தம் ஆய்வு முடிவுகளைக் கால்டுவெல் வெளிப்படுத்தியவர். தமிழ் வடமொழியின் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது என அழுத்தம் திருத்தமாகச் சான்று காட்டி நிறுவியவர். இதுநாள் வரை தமிழ்ப்பகைவரால் தமிழ் மீது பூசி மெழுகியிருந்த அழுக்குகளைத் துடைத்துப் பளிச்செனத் தமிழின் பெருமையை ஒளி பெறச்செய்ததால் கால்டுவெல் பெருமகனாரைத் தமிழ்உலகம் என்றும் போற்றக்

கடமைப்பட்டுள்ளது. கால்டுவெல்லின் வருகை கிறித்தவ மதப்பரப்புப் பணியை அடிப்படையாகக் கொண்டது. எனினும் கால்டுவெல் தமிழகத்தில் ஏறத்தாழ 53 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழி, வரலாறு, சமூக முன்னேற்றம், சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டதால் அவரின் வரலாறு அனைவராலும் அறியத்தகுந்த வரலாறாக அமைந்துள்ளது. Powered By கால்டுவெல் அவர்கள் அயர்லாந்து நாட்டில் உள்ள 'கிளாடி' எனும் ஆற்றின்கரையில் அமைந்த சிற்றூரில் பிறந்தவர்(1814). இளமையில் அறிவார்வம் கொண்ட தம் மகனை அழைத்துக் கொண்டு பெற்றோர் தம் தாய்நாடான ஸ்காட்லாந்துக்குச் சென்று 'கிளாஸ்கோ' நகரில் வாழ்ந்தனர். 16 ஆண்டுக்குள் ஆங்கில மொழியில் அமைந்த பல இலக்கியங்களைக் கால்டுவெல் கற்றுத் தேர்ந்தார். தம் மகனைக் கவின்கலைக் கல்லூரியில் பெற்றோர் சேர்த்தனர். ஓவியக்கலையைக் கால்டுவெல் கற்றுத்தேர்ந்தாலும் அதனை வாழ்க்கைத் தொழிலாக்கிக் கொள்ளவில்லை. கால்டுவெல் தம் இருபதாம் அகவையில் இறைப்பணி செய்வதற்காக இலண்டன் நகரில் அமைந்த சமயத்தொண்டர் சங்கத்தில் சேர்ந்தார். அச்சங்கத்தின் சார்பாகக் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்து ஐரோப்பிய மொழிகளில் அமைந்த நூல்களையும் சமய நூல்களையும் கற்றார். இதன் பயனாக இரண்டு ஆண்டுகளில் இளங்கலைப்பட்டம் பெற்றார். அவ்வாறு படிக்கும்போது கிரேக்கமொழியைப் பயிற்றுவித்த பேராசிரியர் டேனியல் ஸ்டான்போர்ட் அச்செம்மொழியின் பெருமையை மாணவர்களுக்கு நிறைவடையும்படி பயிற்றுவித்தார். கால்டுவெல் பெருமகனாருக்கு மொழியியலில் ஆர்வம் உண்டாக்கியது அப்பேராசிரியரின் வகுப்புரைகளே ஆகும். இலண்டன் சமயப்பரப்புக் கழகத்தின் சார்பாகச் சமயப் பணிக்கு என 1838ல் 'அன்னமேரி' என்னும் கப்பலில் ஏறி இந்தியாவுக்குப் பயணம் செய்தார். கடலில் பயணம் செய்தபோது இவர் ஏறிவந்த கப்பல் மீது பிரெஞ்சு கப்பல் ஒன்று மோதிச் சிதைந்தது. பலர் மடிந்தனர். சிலர் உயிர் பிழைத்தனர். பழுதுற்ற கலத்தைப் 'பிளிமத்' என்னும் துறைமுகத்தில் செப்பனிட்டனர். தென்னாப்பிரிக்கா வழியாகக் கப்பல் வரவேண்டி யிருந்ததால் நான்கு மாதம் பயணம் செய்து சென்னைக்கு வந்தார். அவ்வாறு வரும்போது சி.பி. பிரௌன் என்னும் குடிமைப்பணி அதிகாரியுடன்

நட்புக்கொண்டார். அவர் முன்பே ஆந்திராவில் பணி புரிந்ததால் தெலுங்கு, வடமொழி அறிந்து இருந்தார். அவர் வழியாகக் கால்டுவெல் அம்மொழிகளைக் கற்றார். கடலில் பயணம் செய்தபோது கால்டுவெல்லுக்கு முன்பு இருந்த இருமல் நோய் நீங்கியது. சென்னைக்கு வந்ததும் 'துருவர்' (Mr. Drew) எனும் தமிழ்கற்ற அறிஞரைக் கண்டு மகிழ்ந்தார். வின்சுலோ, போப், பவர், ஆண்டர்சன் முதலானவர்கள் பின்னாளில் நண்பர்களாயினர்.சென்னை மாநகரில் மூன்று ஆண்டுகள் தங்கிய கால்டுவெல் ஏறத்தாழ நானூறு கல்தொலைவில் உள்ள திருநெல்வேலிக்கு நடந்து செல்லத் தீர்மானித்தார். நடந்து செல்லும்போது மக்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், மொழி முதலான வற்றை அறியலாம் என நினைத்தார். சிதம்பரத்தில் இருந்த நடராசர் கோயிலைக் கண்டு மகிழ்ந்தார். மயிலாடுதுறை வழியாகச் சென்று தரங்கம்பாடியில் சில நாள் தங்கினார். டேனிஷ் மிசன் செய்யும் பணிகளை அறிந்தார். பின்பு குடந்தை வழியாகத் தஞ்சாவூர் சென்றார். பெரியகோயிலையும் மாராட்டிய மன்னர் அரண்மனையையும் கண்டு மகிழ்ந்தார். அங்கு வாழ்ந்த வேதநாயகரைக் கண்டு உரையாடினார். திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அழகையும் திருவரங்கச் சிறப்பையும் கண்டு மகிழ்ந்தார். பின்பு நீலமலை சென்றார். அங்கு ஸ்பென்சர் எனும் தந்தையாரைக் கண்டு அவரின் விருந்தினராக ஒரு மாதம் தங்கி இளைப்பாறினார். நீலமலையிலிருந்து இறங்கி, கோவை வழியாக மதுரை வந்தார். வரும் வழியில் மக்கள் அவரைப் பலவாறு இழித்தும், பழித்தும் பேசினர். ஒருநாள் நடந்து செல்லும்போது மழைவரத் தொடங்கியது. இரவுப் பொழுதில் தங்கிச்செல்ல நினைத்தார். சத்திரம், சாவடி உண்டா என வினவிய போது அரசின் சத்திரம் உள்ளது எனவும் அது ஆங்கிலேயர்க்கு இல்லை எனவும் கூறினர். மழையில் நனைந்து துன்பப்பட்ட கால்டுவெல்லைக் கண்டு மாட்டுத் தொழுவத்தில் தங்கும்படி சொன்னார்கள். சத்திரத்தில் இடம் கிடைக்காததாலும் மாட்டுத் தொழுவத்தில் தங்க மனம் விரும்பாததாலும் ஒரு வீட்டின் திண்ணையில் தங்கி இரவுப் பொழுதைக் கழித்தார். மதுரை வந்தடைந்த பின்பு திருமங்கலத்தில் சமயத்தொண்டு புரிந்த திரேசியர் (Tracy) அவர்களைக் கண்டு உரையாடினார். பின்பு நெல்லை வழியே பாளையங்கோட்டை சென்றடைந்தார்

(நவம்பர் 1841). பின்பு நாசரேத்தில் (நவம்பர் 28) தங்கி இறைவழிபாடு நிகழ்த்தி ஒரு விரிவுரையும் செய்தார். பின்பு முதலூரில் ஞாயிற்றுக்கிழமை விரிவுரையை அன்று நிகழ்த்தினார். அருகில் இருந்த இடையன்குடியைப் பாதை தெரியாமல் நெடுந்தூரம் சுற்றி அடைந்தார். அந்த ஊரே அவர் பணிபுரியும் இடமாகவும், கடைசிக் காலத்தில் நிலைகொள்ளும் இடமாகவும் அமைந்தது.

இன்று என்ன?

ராபர்ட் கால்டுவெல் சென்னை வருகை

https://www.hindutamil.in/news/vetrikodi/today-special/533984-robert-caldwell.html

திராவிட மொழி வரலாற்றில் முக்கியமானவர் ராபர்ட் கால்டுவெல். இவர் கடந்த 1814 மே 7-ம் தேதி அயர்லாந்து நாட்டில் பிறந்தார்.

தனது 24 வயதில், 'லண்டன் மிஷனரி சொசைட்டி' எனும் கிறித்துவ மதக் குழுவுடன் இணைந்து மதத்தை உலக மக்களிடம் பரப்ப வேண்டும் என்பதற்காக கடந்த 1838 ஜனவரி 8-ம் தேதி சென்னைக்கு வந்தார்.

ஒப்பியல் மொழி பற்றிய ஆய்வில் ஆர்வம் ஏற்பட்டது. பின்னர் தமிழகத்தின் இடையன்குடி எனும் ஊரில் தனது மதப்பணியை மேற்கொண்ட அதே வேளையில் 50 ஆண்டு காலம் மொழி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்.

இதன் விளைவாக 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுதினார் கால்டுவெல். அந்த நூலில் திராவிட மொழிகளுக்கு மூலம் தமிழ்தான் என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினார்.

ராபர்ட் கால்டுவெல் எழுதிய நூலை தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்: வைகோ

https://tamil.oneindia.com/news/tamilnadu/vaiko-urges-tn-govt-translate-tamil-language-robert-caldwell-books-200174.html

சென்னை: ராபர்ட் கார்டுவெல் அவர்களின் 200வது பிறந்தநாளினை சிறப்பளிக்கும் வகையில் அவர்

எழுதிய'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலை தமிழக அரசு தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.



தென்னாட்டில் வழங்கும் மொழிகளின் சொல் நிலைகளையும், இலக்கணக் கூறுகளையும் ஒப்புநோக்கி நுணுக்கமாக ஆராய்ந்து, திராவிட மொழித்திறம் உணர்த்திய பெருமைக்குரியவர் கால்டு வெல். அயர்லாந்து நாட்டில் கிலாடி ஆற்றின் கரையில் அன்ட்ரிம் எனும் ஊரைச் சேர்ந்த மேய்ப்பர் முற்றம் எனும் இடத்தில் 1814 இல் மே 7 இல் பிறந்தவர் ராபர்ட் கால்டுவெல் 1881-ல், 'திருநெல்வேலி சரித்திரம்' எனும் அற்புதமான நூலை ஆங்கிலத்தில் தந்தார் இம்மாமனிதர். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் அவரது நூல் பல பதிப்புகள் கண்டிருக்கின்றன. கால்டுவெல் உயிரோடு இருந்தபொழுது, 1875-ல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல், 2-வது விரிவான பதிப்பாக லண்டனில் வெளியிடப்பட்டது. அதன் உண்மையான பதிப்பு 2008 இல் மீண்டும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. சமயப் பணிகளில் இருந்து ஓய்வு பெற்று, பின்னர் அவர் இடையங்குடியில் கிருத்துவச் சமய திருப்பணி செய்ததோடு, அங்கு ஒரு அழகான தேவாலயம் எழுவதற்கும் காரணமாக இருந்தார்.

1891 ஆகஸ்ட் 28இல் கால்டுவெல் கொடைக்கானலில் இயற்கை எய்திய உடன், அவரது பூத உடல் இடையன்குடிக்கு கொண்டுவரப்பட்டு, தேவாலய வளாகத்துக்குள் அடக்கம் செய்யப்பட்டது. இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த கால்டுவெல் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல அரிய நூல்களைத் தந்துள்ளார். கால்டுவெல்லின் 200-வது பிறந்த நாளினை சிறப்பளிக்கும் வகையில் தமிழக அரசே அந்த பதிப்பை முழுமையாக தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். செந்தமிழுக்கு அரிய சேவை செய்த அறிஞர் கால்டுவெல்லின் நீடுபுகழ் போற்றுவோம்! என்று வைகோ தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இடையன்குடி சேவைகள்

இடையன்குடி

தென் தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளில் ராபர்டோ டி நொபிலி மற்றும் வீரமாமுனிவர் காலம் முதலாகவே கிறிஸ்தவம் வேரூன்றத் தொடங்கியிருந்தது. ஸ்வார்ட்ஸ் ஐயர் (சுவார்த்தர்) என்னும் போதகர் திருநெல்வேலி பகுதியில் இறைப்பணியில் புகழ் பெற்றிருந்தார். அந்தக் காலகட்டத்தில் நாடார் இனத்தவர் பலரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தனர். அவ்விதம் புதிதாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறியிருந்த பலரும் முதலூர் என ஒரு ஊர் அமைத்துக் குடியேறினர். பின்னர் அவ்விதம் திருநெல்வேலி மாவட்டத்தில் பல ஊர்கள் கிறிஸ்தவக் குடியிருப்புகளாகத் தோன்றின.

திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் வட்டத்தில் உள்ள இடையான்குடியின் இயற்பெயர் வலிடையன் குடியிருப்பு. அது மருவி இடையன்குடி ஆகியது. இடையன்குடிக்கு 1798-ல் ஸ்வார்ட்ஸ் போதகரின் தூதரான சத்தியநாதன் கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்தார். தொடர்ந்து தாவீது சுந்தரானந்தம் போதகராகச் செயல்பட்டார். வில்லியம் டொபியாஸ் ரிங்கல்தௌபே 1806 முதல் 1809 வரை அங்கே மதபோதனை செய்தார்.1811-ம் ஆண்டு பெருமழையும் தொற்றுநோயும் உருவாகி பலர் மடிந்தனர். 1812

ஆண்டில் கொடிய பஞ்சம் உருவாகியது. அது மதம் மாறியதால் ஏற்பட்ட தெய்வ சாபமென பல மக்கள் அஞ்சினர். இக்காலகட்டத்தில் தொடர்ச்சியாக கிறித்தவர்கள் தங்கள் பழைய மதத்திற்கு திரும்பிச் சென்றனர். 1829-ம் ஆண்டு அங்கே எஸ்.பி.ஜி போதகராக டேவிட் ரோசன் நியமனம் செய்யப்பட்டிருந்தார். ரோசன் அங்கே ஒரு சிறிய ஆலயத்தைக் கட்டி மதப்பணி புரிந்தார்.

சென்னை இடையன்குடி பயணம்

இந்தக் காலகட்டத்தில்தான் சென்னை மாநகரில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்த கால்டுவெல் ஏறத்தாழ நானூறு மைல் தொலைவில் உள்ள திருநெல்வேலி பகுதிக்கு நடைப்பயணமாக செல்ல முடிவெடுத்தார். செல்லும் வழியில் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறைகளையும் மொழியையும் நன்கு அறிந்து கொள்ள முடியுமென எண்ணினார். சிதம்பரம், மாயவரம் வழியாகச் சென்று தரங்கம்பாடியில் சில காலம் தங்கி டேனிஷ் மிஷன் செய்யும் பணிகளை அறிந்தார். பின்பு கும்பகோணம் வழியாகத் தஞ்சாவூர் சென்று, அங்கு வாழ்ந்த வேதநாயகரைக் கண்டு உரையாடினார். திருச்சிராப்பள்ளி வழியாக நீலமலை (ஊட்டி) சென்றார். அங்கு ஸ்பென்சர் எனும் மதபோதகரின் விருந்தினராக ஒரு மாதம் தங்கினார். கோவை வழியாக மதுரை வந்தார். வரும் வழியில் தங்குமிடம் மறுக்கப்பட்டு துன்புற்றார். மதுரையில் திருமங்கலத்தில் சமயத்தொண்டு புரிந்த திரேசியரைக் (Tracy) கண்டு உரையாடினார். பின்பு நவம்பர் 1841-ல் நெல்லை வழியே பாளையங்கோட்டை சென்றடைந்தார். நவம்பர் 28, 1841-ல் நாசரேத்தில் தங்கி இறைவழிபாடு நிகழ்த்தி ஒரு விரிவுரையும் செய்தார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை முதலூரில் விரிவுரையை நிகழ்த்தினார். பாதை தெரியாமல் அருகில் இருந்த இடையன்குடியைப் நெடுந்தூரம் சுற்றி அடைந்தார்.[2] 1841 டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி கால்டுவெல் இடையான் குடியை வந்தடைந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

இடையான்குடி மீட்டெடுப்பு

இடையான்குடி கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. கால்டுவெல் அதை மீட்டமைத்தார். அந்த ஊர் அவருடைய செயல்மையமாக அமைந்தது, கடைசிக் காலத்தில் அவர் நிலைகொள்ளும் இடமாகவும் அமைந்தது.1841 டிசம்பர் மாதம் 11-ம் நாள் ஞாயிறன்று கால்டுவெல்

இடையன்குடியில் ரோசன் அமைத்த சிறிய ஆலயத்தில் முதன்முதலாக இறைவழிபாட்டை நிகழ்த்தினார்.

கால்டுவெல் 1842 இடையான்குடி கிராமத்தை 40 பவுண்ட் விலைகொடுத்து வாங்கினார். அங்கே சீராக நிலப்பகுப்பு செய்து ஓர் ஊரை உருவாக்கி கிறிஸ்தவ மக்களைக் குடியேற்றினார். கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி சரித்திரம் நூலில் இடம்பெற்றுள்ள இடையான்குடி பற்றிய சித்தரிப்பில் அவர் உருவாக்கிய நகரை மேற்பார்வையிட மரத்தில் மேல் ஏறி உட்கார்ந்திருக்கிறார் கால்டுவெல். அப்பகுதியை பொட்டலாக விற்ற நில உரிமையாளரான நாடார் கால்டுவெல் தன் நிலத்தை பாத்திபோட்டு சீரழித்துவிட்டார் என்று புலம்புகிறார். சீரான தெருக்கள் அந்த அளவுக்கு அவரது கண்களுக்கு வித்தியாசமாக தெரிகின்றன.[3]

தேவாலயப் பணிகள்

கால்டுவெல் இடையன்குடியில் 1829-ல் ரோசன் கட்டிய சிறிய ஆலயத்தை 1842-ம் ஆண்டு விரிவாக்கிக் கட்டினார்.1845-ம் ஆண்டு புயலால் இந்த ஆலயம் அழிந்தது. பின்னர் மீட்டுக் கட்டப்பட்டது. ஐந்து முறை விரிவாக்கம் செய்யப்பட்ட இந்த ஆலயம் TDTA தொடக்கப்பள்ளியாகச் செயல்பட்டுவருகிறது. கால்டுவெல்லின் 200-வது பிறந்தநாளை ஒட்டி இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டது.

1880-ல் இடையன்குடியில் கால்டுவெல் தூய திரித்துவ ஆலயம் என்னும் புதிய தேவாலயத்தை கட்டினார். ஆலயத்தின் நீளம் 85 அடி. அகலம் 52 அடி. ஆலயத்தின் உயரம் 66 அடி. ஆலயத்தில் 16 கல்தூண்கள் உள்ளன. இந்த ஆலயத்தின் ஆல்டர் கோதிக் கட்டிடக்கலையை அடியொற்றி அமைந்தது. இந்த ஆலயத்தின் சன்னல்கள் உட்பட அனைத்து மரப்பணிகளும், கற்பணிகளும் கால்டுவெல்லால் வடிவமைக்கப்பட்டவை. அந்த தேவாலயத்திற்காக லண்டனில் இருந்து மணிகள் கொண்டு வரப்பட்டன. (தூய திரித்துவ ஆலயம், இடையான்குடி)

தூத்துக்குடி கால்டுவெல் கல்லூரியின் முகப்பில் 1 நவம்பர் 1886-ல் கால்டுவெல் ஒரு சிறு ஆலயத்தைக் கட்டினார்.

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டத்தில் அமைந்துள்ள இடையன்குடி, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய ராபர்ட் கால்டுவெல் 50 ஆண்டுகள் பணியாற்றிய வரலாற்று சிறப்புமிக்க

கிராமமாகும். இங்குள்ள [திருத்துவ ஆலயம்] கோதிக் கட்டடக்கலை பாணியில் அமைந்துள்ளது. இப்பகுதி மக்களின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு கால்டுவெல் ஆற்றிய பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது.

இடையன்குடியின் முக்கிய சிறப்பம்சங்கள்:

- ***கால்டுவெல் தொடர்பு:*** *அயர்லாந்தைச் சேர்ந்த கால்டுவெல், 1838-ல் வந்து, இந்த ஊரில் தங்கித் தமிழை ஆராய்ந்து, பல தமிழ்ப் பணிகளைச் செய்தார்.*
- ***கல்விப் பணி:*** *இடையன்குடி மக்களிடையே கல்வியறிவை மேம்படுத்த கால்டுவெல் பள்ளிகளை நிறுவினார், இது அப்பகுதி மக்களின் கல்விக்கு அடிப்படை.*
- ***திருத்துவ ஆலயம்:*** *இடையன்குடியில் உள்ள ஆலயம் 19-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட, கோதிக் கலைநயத்துடன் கூடிய ஒரு பழமையான தேவாலயம்.*
- ***அமைவிடம்:*** *திருநெல்வேலி மாவட்டத்தின் ராதாபுரம் வட்டத்தில், தெற்கு பகுதியில் அமைந்துள்ளது.*

இந்த ஊரில் உள்ள கால்டுவெல் நினைவில்லம் மற்றும் கல்லறை, தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்படும் முக்கிய தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சின்னங்களாகும்.












	 தீப பவனி 2026
 இடையன்குடி கால்டுவெல் நினைவு இல்லத்துக்கு வந்த வம்சாவளியினர் புதிய தலைமுறை	
	 இடையன்குடி ஆலய Altar ல் இருக்கும் Bishop Robert Caldwell கல்லறை
	
 இளையான்குடி சீமை ILAYANGUDI SEEMAI	






காலடுவெல்லும் இடையன்குடியும் ஒரு கிராமத்தின் உருவாக்கம்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamfeb2014/26165-2014-03-25-08-19-37

தமிழ் மண்ணில் சமயப் பணியாற்ற வந்த ஐரோப்பியத் திருத்தொண்டர்களுள் பெரும்பான்மை யோர் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் குறிப்பிடத் தக்க பங்களிப்புகள் செய்துள்ளனர். அவர்களுள் என்றும் நினைக்கத்தக்கவராக இருப்பவர்களுள் இராபர்ட் கால்டுவெல்லும் ஒருவராவார். இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழுக்கும் தமிழக அரசியலுக்கும் செய்த பங்களிப்புகளின் காரணமாக அந்த நூல் இன்றளவும் பேசப்படுகின்றது. இந்த நூல் பேசப்பட்ட அளவிற்கு அவரது பிற படைப்புகள் பேசப்படவில்லை. அது போன்றே அவரது சமூகச் சமயப் பணிகளும் பேசப்படவில்லை. தமிழ்ச் சமூகச் சூழலில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் மதிப்பிடற்கரிய பங்களிப்பாக அமைந்ததால் கால்டுவெல்லின் ஏனைய பணிகள் துலங்கவில்லை. அவ்வாறு துலங்காமல் போன ஓர் அரிய பணி, இடையன் குடியின் உருவாக்கமும் அங்கு அவர் எழுப்பிய தேவாலயமுமாகும்.



அயர்லாந்து நாட்டைச் சார்ந்த இராபர்ட் கால்டுவெல் முதலில் எல்.எம்.எஸ். நிறுவனத்தின் திருத்தொண்டராகச் சென்னைக்கு 1838 இல் அனுப்பப் பட்டார். மூன்று ஆண்டுக் காலப் பணிக்குப்பின் எல்.எம்.எஸ்-சை விட்டு விலகி எஸ்.பி.ஜி நிறுவனத்தில் கால்டுவெல் இணைந்தார். அதன்பின் 1841 இல் எஸ்.பி.ஜி யின் அதிகாரம் பெற்ற திருத்தொண்டராக இடையன்குடிக்கு வந்தார். கால்டுவெல் இடையன் குடிக்கு வருவதற்கு முன்பே அப்பகுதியில் கெரிக், சத்தியநாதன் ஆகியவர்கள் பணியாற்றிக் கிறித்த வத்தைப் பின்பற்றும் ஒரு சிறு கூட்டம் உருவானது. இவர்களின் வழிபாட்டுக்காக ஒரு சிறிய ஆலயமும் கட்டப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கிறித்தவர்களை முறையாக வழிநடத்தும் முழுநேரத் திருத்தொண்டர்கள் இன்மையால் அவர்கள் கிறித்தவத்தில் முழுமையாக நிலைத்திருக்கவில்லை. மேலும் இவர்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் காணப்பட்டனர். இவர்கள் இடையன் குடியைச் சுற்றியுள்ள இருபது குக்கிராமங்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். கால்டுவெல் திருப் பணியைத் தொடங்கும்போது இடையன்குடிக் கிறித்தவர்கள் சிதறடிக்கப்பட்டவர்களாகவும் பெரும் பான்மையினர் கிறித்தவத்தைவிட்டு வெளியேறியவர் களாகவும் காணப்பட்டனர். மேலும் அங்கிருந்த சிறிய ஆலயம் புயலால் பெரிதும் சிதைவுற்றுக் கிடந்தது.

இடையன்குடியில் இடையர்கள் மிகுதியாக வாழ்ந்ததால் அப்பெயர் பெற்றதாக வாய்மொழித் தகவல்கள் குறிப்பிடுகின்றன. வறட்சி, பஞ்சம் ஆகிய வற்றின் காரணமாக இடையர்கள் குடிபெயர்ந்ததால் நாடார்கள் இப்பகுதியில் குடியமர்ந்தனர். இடையன்குடி செம்மண் தேரி ஆகும். இதன் சுற்றுவட்டாரங்களில் பனைமரங்கள் மிகுதி. எனவே நாடார்கள் இடையன்குடி வறட்சியான பகுதி என அறிந்தும் அப்பகுதியில் குடியமர்ந்தனர். கால்டுவெல் அங்கு வரும் பொழுது அது ஒரு கிராமம் என்று அழைக்கும் தகுதியைப் பெற்றிருக்கவில்லை. “பிளந்த கள்ளியும் விரிந்த முள்ளியும் நிறைந்த தேரியில் கற்பகத்

தருவெனத் தழைத்துச் செழித்து வளரும் பனைகளே அந்நிலத்தில் வாழும் மாந்தர்க்கும் பழுதற்ற செல்வமாகும். காலையும் மாலையும் பனையேறிப் பதநீர் வடித்துப் பண்புறக் காய்ச்சி, கட்டிசெய்து விற்றுக் காலங்கழிக்கும் ஏழை மக்களே அவ்வூர்ப் பழங்குடிகளாவர். கால்டுவெல் ஐயர் அவ்வூரில் வந்த பொழுது கூரை வேய்ந்த குடிசைகள் தாறுமாறாகக் கட்டப்பட்டிருந்தன. மனைகளைச் சூழ்ந்து முள் நிறைந்த கள்ளியே வேலியாக அமைந்தது. நேரிய தெருக்கள் எங்கும் காணப்படவில்லை. ஊர் நடுவேயமைந்த அகன்ற வெளியிடத்தில் ஓங்கி உயர்ந்த புளிய மரங்கள் ஆங்காங்கு நின்று நிழல் விரிந்தன. அவ்வெளியிடத்தில் ஒரு மூலையில் வழிபாட்டுக்குரிய கிருத்தவக் கோயிலும் வேதியர்க்குரிய சிறு வீடும் அமைந்திருந்தன (ரா.பி.சேதுப்பிள்ளை 2013:733).

கால்டுவெல்லுக்கு முன்னர் அவ்வூரில் பணி யாற்றிய திருப்பணியாளர்கள் சிறிய ஆலயம் மற்றும் திருப்பணியாளர் இல்லம் ஒன்றும் அமைத்திருந்தனர். இதற்காக அவர்கள் சொற்ப அளவில் நிலமும் சொந்தமாகப் பெற்றிருந்தனர். கால்டுவெல்லுக்கு இடையன்குடி ஊரின் அமைப்பு ஒழுங்கற்றதாகவும் திட்டமிடப்பெற்ற குடியிருப்பதாகவும் தோன்றவில்லை. கால்டுவெல்லின் சமகாலத்திலும் அவருக்கு முன்னரும் திருநெல்வேலி மாவட்டத்தில் தொண்டாற்றிய ஐரோப்பியத் திருத்தொண்டர்கள் உருவாக்கிய பல கிராமங்கள் அவர் மனக்கண்முன் தோன்றின. அக் கிராமங்கள் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் திட்டமிடப் பெற்றிருந்தன. மெஞ்ஞானபுரம், சாயர்புரம், சமாதான புரம், நாசரேத், அடைக்கலப்பட்டணம் ஆகிய ஊர்கள் அவருக்கு முன் மாதிரிகளாக அமைந்தன. இவ்வூர்களை உருவாக்கிய ரேணியஸ், ஜி.யு.போப், மர்காசியஸ் போன்றவர்கள் அவருக்கு முன்மாதிரிகளாக அமைந்தனர்.

கிறித்தவத்தைத் தழுவியவர்களுக்கு அவர்களது சாதியினராலும் பிறசாதியினராலும் கொடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் இடையூறுகளுமே இத்தகைய புதிய கிறித்தவக் கிராமங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தன. ஆனால் இடையன்குடியில் கால்டு வெல்லுக்கு அப்படியரு சூழல் இருந்ததாகத் தெரியவில்லை. "எஸ்.பி.சி.கே. சங்கத்தாருடன் மிகத் தோழமை கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தரான ஒரு ஆங்கிலோ இந்தியச் சபையினரான சாயர் என்பவருடைய பெயர் அவருக்கு நன்றியறிதலான, ஞாபகர்த்தமாக இடப்பட்டது. துன்புறுத்தப்பட்ட கிறித்தவர்கட்காக தாமிரபரணி

ஆற்றின் வடபுறத்தில் 150 ஏக்கர் நிலம் வாங்கி அந்த அமைதியான சமாதானமான இடத்தில் அவர்களைக் குடியேற்றினர். 1814இல் அந்தக் கிராமமானது சாயர்புரம் என்ற பெயர் பெற்றது (ஹென்ரி பாக்கிய நாதன்,பக்.54). இவ்வாறு புதிதாக நிலத்தை வாங்கி அங்குக் குடியிருப்புக்களை அமைத்து ஒரு கிராமத்தை உருவாக்கும் செயலைப் பல திருப்பணியாளர்கள் செய்துள்ளனர்.

இடையன்குடி கால்டுவெல்லுக்குச் சவாலாக இருந்தது. அங்குக் குடிசைகள், சிறிய ஆலயம் போன்றவை ஏற்கனவே இருந்தன. இந்த அமைப்பை ஒழுங்குபடுத்துவதே கால்டுவெல்லின் நோக்கம். கால்டுவெல் கிறித்துவப் பயிற்சிக்கு முன்னர் டப்ளினில் ஓவியப் படிப்புப் படித்தார். எனவே அவருக்கு அழகுணர்ச்சி இயல்பாகவே அமைந்திருந்தது. இதனால் அழகான இடையன்குடி குறித்த ஒரு ஓவியம் அவர் மனத்தில் இருந்தது. இந்தச் செயல்திட்டத்தை நிறை வேற்றக் கடுமையாகப் போராடினார் அவர். “திருக் கோயிலைச் சுற்றியிருந்த நிலங்களை விலை கொடுத்து வாங்கினார். அந்நிலங்களில் தொன்று தொட்டுக் குடியேற்றுரிமையின் பெயரால் வீடு கட்டுங் காலங் களில் கடமை பெற்று வந்த சில நாடார்களின் உரிமை களைத் தக்க விலை கொடுத்து விலக்கினார். இங்ஙனம் வில்லங்கத்தைத் தீர்த்தொழித்த பின்பு அந்நிலங்களைத் திருத்தத் தொடங்கினார். எம்மருங்கும் பரந்து கிடந்த கள்ளியையும் முள்ளியையும் களைந்தெறிந்து தெருக் களைத் திருத்தமுற வகுத்து சந்திகளில் கிணறுகளமைத்து நிழல் விரிக்கும் மரங்களை வீதியின் இரு புறமும் நட்டு செவ்விய முறையில் சிறு வீடுகள் கட்டுவித்தார். எண்ணும் எழுத்தும் அறியாதிருந்த அவ்வூர்ச் சிறுவர் சிறுமியர்க்கு எழுதவும் படிக்கவும் கற்பிக்கக் கருதிப் பாடசாலைகள் நிறுவினார் (ரா.பி.சேதுப்பிள்ளை 2013:734).

கால்டுவெல் அவர்கள் இடையன்குடி கிராமத்தை வடிவமைக்க ஒரு வரைபடம் தயாரித்ததாகச் சொல்லப் படுகின்றது. இந்த வரைபடத்தைத் தயாரிப்பதற்காக மரம் ஒன்றின் மீது ஏறி அதன் பரப்பையும் கிடப்பையும் அறிந்தார் என செவிவழிச் செய்திகள் உள்ளன ((D.S.George Muller 1996:3). ஆர்.எஸ். ஜேக்கப் அவர்கள் எழுதிய பனையண்ணன் நாவலில் கால்டுவெல் பனைமரத்தின் மீது ஏறி இடக்கிடப்பை அறிந்தார் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது (ஆர்.எஸ்.ஜேக்கப் 2009:95). எவ்வாறாயினும் அவர் இடையன்குடி கிராம உருவாக்கத்திற்கு வரைபடம் ஒன்று தயாரித்துச் செயல்படுத்தினார் என அறியமுடிகின்றது. நிலம் வாங்குவதற்கும் நிலத்தைச் சீர் செய்வதற்கும் தனது நண்பர்களிடமிருந்து

நன்கொடைகள் பெற்றார். இவ்வேலைகளை அக்கிராமத்து மக்களுக்குச் சம்பளம் கொடுத்துச் செய்வித்தார். அவர்கள் பெற்ற சம்பளத்தைச் சேமிக்கச் செய்து தங்களுக்கு வீடுகள் அமைக்கச் செய்தார். மாதிரிக்காக சில வீடுகளைக் கட்டி அதே மாதிரி வீடுகளைக் கட்டுவித்தார்.

1890 இல் கடுமையான பஞ்சம் நிலவியது. அப்போது இடையன்குடியில் 61 வீடுகள் தீக்கிரையாயின. மனத்துயருற்ற கால்டுவெல் உடனடியாக நிவாரண உதவிகள் செய்தார் ((D.S.GeorgeMuller1996:11). இச்செய்தி இடையன்குடியில் கட்டப்பட்ட வீடுகள் பனையோலையால் வேயப்பெற்றவையாக இருக்கலாம் என்பதை உணர்த்துகின்றது.

கால்டுவெல் பணியாற்றிய காலம் எஸ்.பி.ஜி. மற்றும் சி.எம்.எஸ். ஆகிய நற்செய்தி நிறுவனங்களுக் கிடையில் இருந்த வேற்றுமைகள் ஒரளவிற்குத் தணிந் திருந்த காலமாகும். இரு நற்செய்தி நிறுவனங்களும் பரஸ்பரம் நல்லிணக்கத்துடன் செயல்பட்ட காலம். இந்தியாவில் காலனிய ஆட்சி நிலைபெற்று நின்றது. சென்னை மாகாணமும் உருவாக்கப்பட்டிருந்தது. சீகன் பால்கு தரங்கம்பாடியில் உருவாக்கிய அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவான கல்வி நிலையங்கள் என்னும் கருத்தாக்கம் சென்னை மாகாணம் முழுவதும் பரவியிருந்தது. காலனிய அரசும் பொதுக் கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்தது.

“இந்தியாவில் இலக்கிய மறு மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இந்தியக்குடிகளிடையே கல்வியறிவை ஊக்குவிக்கவும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில் வாழும் மக்களிடையே விஞ்ஞான அறிவைப் புகுத்தவும் அரசு வருமானத்தில் ஆண்டு தோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் 1813 சாசன சட்டத்தின் 43ஆவது பிரிவு தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளித்தது” (து.சதாசிவம் மேற்கோள் திராவிடப்பித்தன் 2009:36). இந்தச் சூழல் கால்டு வெல்லுக்கு இடையன்குடியில் கல்விக்கூடம் அமைப் பதற்கு வசதியாக அமைந்தது. அவர் 9 பள்ளிக்கூடங்கள் நிறுவியதாகக் குறிப்புகள் உள்ளன ((D.S.George Muller 1996:3)பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார். பெண்கல்விக்கு இடையன்குடியில் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் கால்டுவெல் ஊர்ப்பெரியவர்களை வாரம் ஒரு முறை சந்தித்துப் பெண்கல்வியின்

இன்றியமை யாமையை எடுத்துரைத்து அவர்களைத் தெளிவடையச் செய்தார். அவரது மனைவி எலிசாவின் உதவியுடன் பெண்களுக்குத் தையல் பயிற்சி மற்றும் கல்வி கிடைக்க வாய்ப்பளித்தார். இடையன்குடியில் 1844இல் பெண்களுக்காக உறைவிடப் பள்ளி ஒன்றைக் கால்டு வெல்லின் மனைவி எலிசா தொடங்கினார். பொது மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு ஆகியவை கிடைக்க வழிவகை செய்தார். சென்னை மாகாண கவர்னர் நேப்பியரிடம் பேசி 1870 இல் இடையன் குடியில் மருத்துவமனை ஒன்று தொடங்க உரிய ஏற்பாடுகள் செய்தார்.

இடையன்குடி நாடார்கள் மூடநம்பிக்கைகள் உடையவர்கள் என்றும் நாகரிகமற்றவர்கள் என்றும் கால்டுவெல் உணர்ந்தார். எனவே மூடநம்பிக்கைகளை அகற்றவும் பண்பட்ட வாழ்வியல் முறையைக் கற்றுக் கொடுக்கவும் தொடர்ந்து போதனை செய்துவந்தார். இடையன்குடியைப் புதியதொரு ஒழுங்கமைப்பில் அகலமான தெருக்களோடு வடிவமைத்த கால்டு வெல்லுக்கு அவ்வூரில் பிரமாண்டமான திரித்துவ ஆலயம் ஒன்று எழுப்ப விரும்பினார். இது தொடர்பாக வரைபடம் பெறுவதற்காக இங்கிலாந்திலிருந்த ஆலய நிர்மாண சங்கத்தாருக்கு வேண்டுதல் விடுத்தார். அவர்கள் திரித்துவ ஆலயத்திற்கான வரைபடம் ஒன்றை அனுப்பி வைத்தனர். வரைபடம் பெற்ற மகிழ்ச்சியில் கால்டுவெல் ஆலயம் எழுப்ப உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதிதிரட்டத் தொடங்கினார். ஆலயத்திற்கான அடிக்கல்லை 1847 இல் நாட்டினார். கால்டுவெல் திட்டமிட்டபடி சில ஆண்டுகளுக்குள் ஆலயத்தைக் கட்ட இயலவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்ட பஞ்சம், கொள்ளை நோய் போன்றவற்றின் காரணமாகவும் தமிழ் ஆய்வுகளின் காரணமாகவும் போதிய நிதி கிட்டாமையாலும் ஆலயத்தைக் கட்டிமுடிக்க 33 ஆண்டுகள் ஆகின. அவர் திருநெல்வேலியின் உதவி பிஷப்பாகப் பொறுப்பேற்ற பின் 1880 இல் அவர்கட்டிய திரித்துவ ஆலயம் திருநிலைப்படுத்தப்பட்டது. இந்த ஆலயம் கால்டு வெல்லின் பெயரை நினைக்கச் செய்யும் மற்றொரு நினைவுச் சின்னமாகும். ஆலயத்தின் அமைப்பு, கலை நுட்பங்கள் போன்றவை கலைத்திறன் மிக்கவை.

கால்டுவெல்லின் 33 ஆண்டுக்கால உழைப்பில் உருவாகிய திரித்துவ ஆலயமும் இடையன்குடி கிராமமும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன. “அக்கோவிலின் ஒவ்வோரங்கமும் கண்களைக் கவரும் அழகு வாய்ந்து விளங்குகின்றது. ஆயினும் சாலச் சிறந்த அக்கோவில்

சாளரங்களைக் கண்டோர் அவற்றின் அழகையும் அமைப்பையும் எந்நாளும் மறவார் என்பது திண்ணம். திருப்பணி நடைபெறும் பொழுது கால்டு வெல் ஐயர் களியினால் சாளரங்கள் செய்து அவற்றில் கோலமார் கோடுகள் வரைந்து காட்டினார் என்றும் அவற்றை மாதிரியாகக் கொண்டு தச்சரும் கொல்லரும் சாளர வேலை செய்து முடித்தாரென்றும் அவ்வூர் முதியோர் கூறுகின்றார்கள். இளமையில் கவின்கலைக் கல்லூரியில் பழகி ஓவியக் கலையில் பரிசு பெற்ற கால்டுவெல் ஐயரின் கைவண்ணம் இடையன்குடிக் கோவில் சாளரங்களில் இயங்கக் காணலாம் (ரா.பி. சேதுப்பிள்ளை 2013:735-736). கால்டுவெல்லுக்கு இருந்த ஓவியக் கலை அறிவை ஆலயத்தை வடிவமைப்பதில் நுட்பமாகப் பயன்படுத்தியுள்ளார். இதற்குப் பலர் உதவியுள்ளனர். “அந்த ஆலயத்தின் இசை ஒலிக்கும் மணிகள், கால்டுவெல் அத்தியட்சரின் குடும்பத்தாரின் நன்கொடையாகும். கிராதி அறையின் சித்திரமயமான ஜன்னல் அக்காலத்தில் சென்னை ராஜ்ய கவர்னராக விருந்த நேப்பியர் பிரபுவின் நன்கொடையாகும்” (ஹென்றி பாக்கியநாதன்,பக்.57). இவ்வாறாக உருவாக்கப் பட்ட இடையன்குடி தூய திரித்துவ ஆலயம் கட்டடக் கலை நுட்பங்களிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்தது.

இடையன்குடி ஆலயம் கோதிக் கட்டடக்கலை மரபைச் ((Gothic Architecture)) சார்ந்து கட்டப்பட்டது. ஜெர்மனியில் கி.பி 11ஆம் நூற்றாண்டில் தோன்றிய இக்கலைமரபு 13ஆம் நூற்றாண்டில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. கதீட்ரல் ஆலயங்கள், அரண்மனைகள், ஆடம்பர பங்களாக்கள் போன்றவை இக்கலை மரபில் கட்டப்பட்டன. இருப்பினும் கோதிக் கலைமரபு கதீட்ரல் தேவாலயங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தன. பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் பரவிய இக்கலை மரபு 13ஆம் நூற்றாண்டிற்குப்பின் புதிய கோதிக் கலைமரபால் உள்வாங்கப்பட்டது. கோதிக் கலை மரபில் கூர்மையான ஆர்ச், மெல்லிய உயரமான தூண்கள், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகள், சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்த ஜன்னல்கள் ஆகியவை அடிப்படையான பண்புகள் ஆகும். இப்பண்புகளை இடையன்குடி திருத்துவ ஆலயத்தில் காணலாம். கூர்மையான ஆர்ச், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகளைக் கொண்ட உயரமான தூண்கள், அத்தூண்களில் நாற்புறமாக அமைந்த ஆர்ச்சுகள் கூரையைத் தாங்குவதாக இடையன்குடி ஆலயம் அமைந்துள்ளது. சன்னல்களும் கதவுகளும் கூர்மையான ஆர்ச் வடிவம் பெற்றவை.

கால்டுவெல் இடையன்குடியில் செய்த புரட்சி ஆலயத்தின் நுழைவாயிலை நடுவில் அமைக்காமல் ஓரத்தில் அமைத்ததுதான். பொதுவாக கதீட்ரல் ஆலயங்களில் இவ்வாறு அமைவதில்லை. நுழைவாயில் நடுவில் அமைவது தான் மரபு. இம்மரபைக் கால்டுவெல் பின்பற்றவில்லை. ஆலயம் முச்சந்தியை நோக்கி அமைந்துள்ளது. இம்முச்சந்தியில் நாட்டார் தெய்வ வழிபாடுகளின் போது மேளதாளங்களுடன் சாமியாடு வதுண்டு. ஆலயத்தின் தலைவாசல் முச்சந்தியை நோக்கியதாக அமைந்தால் சாமியாட்டம் ஆல்டருக்கு நேராக அமையும் எனக் கருதிய கால்டுவெல் அதனை ஓரத்திற்கு மாற்றியதாகச் சொல்லப்படுகின்றது. ஆலயத்தின் தரை மற்றும் சுவர் கருங்கற்களால் அமைக்கப்பெற்றுள்ளது. வெளிப்புறக் கட்டட அமைப்பு பிரஞ்சுக் கட்டடக்கலை சார்ந்தது. குறிப்பாக வெளிப் புறச் சுவரின் தூண்கள் அமையுமிடங்களிலும் மூலை களிலும் பளுதாங்கிச் சாய்வுச் சுவர்கள் அமைக்கப் பட்டுள்ளன. இது பிரஞ்சு மரபு ஆகும்.

ஆலயத்தின் ஆல்டரின் மேற்கூரை ஆல்டரைச் சுற்றியுள்ள சன்னல்கள் அனைத்தும் கோதிக் கலை மரபைப் பின்பற்றிய கதீட்ரல் ஆலய அமைப்பாகும். ஆனால் சித்திரங்கள் கால்டுவெல்லின் கைவண்ணம் எனச் சொல்லப்படுகின்றது. ஆல்டரைச் சுற்றியுள்ள சாளரங்களின் கண்ணாடிகளில் வரையப்பட்டுள்ள வண்ண ஓவியங்கள் ரோமானியம் மற்றும் அரேபியக் கலை மரபுகள் கலந்த கலவையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கோயிலின் உட்புறத்தில் கூர்மை யான 5 ஆர்ச்சுகள் உள்ளன. இந்த ஆர்ச்சுகளின் மீது மரத்தால் கூரை வேயப்பட்டுள்ளது. கூரை செங்குத்துச் சாய்வாக அமைந்துள்ளது. பனிப்பிரதேசங்களில் அமையும் கூரை வடிவம் இதுவாகும். கோதிக் கலைமரபைப் பின்பற்றி இடையன்குடி ஆலயம் அமைக்கப்பெற்றிருந்தாலும் கோதிக் மரபின் வளமை இடையன்குடியில் காணப்படவில்லை. இதற்குப் போதுமான நிதி கிடைத்திருக்காது என்பதே காரண மாகலாம்.

சென்னை மாகாண கவர்னர் நேப்பியர் இடையன் குடிக்குக் கால்டுவெல்லின் பணிகளைப் பார்வையிட வந்த போது அவருக்கு 1000 பனைமரங்கள் பயிரிடத் தேவையான நன்கொடைகள் வழங்கினார். இங்கிலாந்தி லிருந்த போதகர் «ஐ.எம். வென்டன் என்பவர் வழங்கிய 100 பவுண்டு நன்கொடையைக் கொண்டு அரசு நன் கொடையாக வழங்கிய மலைச்சரிவில் கால்டுவெல் எஸ்டேட் ஒன்றை உருவாக்கினார் (D.S.George Muller1996:9).

கால்டுவெல்லுக்குச் சுற்றுச்சூழல் குறித்த உணர்வு இருந்தது என்பதையே இக்குறிப்புகள் உணர்த்துகின்றன. இடையன்குடி ஊரில், ஏராளமான மரங்களை நட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தின் வறட்சி குறிப்பாக தேரிக்காட்டின் வெப்பம், அவ்வவ்போது ஏற்பட்ட பஞ்சம் ஆகியவற்றை நேரடியாக உணர்ந்த கால்டுவெல் மழைவளம் பெற மரம் வளர்க்க வேண்டும் எனப் போதித்தார். அதைத் தானும் செய்து காட்டினார். வாழிடம் என்பது வெறும் நிலம் மட்டுமல்ல என்பதில் கால்டுவெல் உறுதியாக இருந்தார்.

ஒரு கிராமத்தை உருவாக்குவது என்பது எளிதான ஒன்று அல்ல. நிலத்தைப் பிரித்து, தெருக்கள், வீட்டு மனைகள், கோயிலுக்கான இடம் எனப் பருப்பொருளாகக் காண்பது எளிது. அதுமட்டுமே ஒரு கிராமமாகிவிடாது. அங்கு மக்கள் குடியமர வேண்டும். வீடுகள் அமைய வேண்டும். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும். ஆலயம், பள்ளிகள், மருத்துவமனை, கிணறுகள், வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்றவை அனைத்தும் ஒருங்கே அமைந்தால்தான் அது வாழிடக் கிராமம் ஆகும். இதனை இடையன் குடியில் கால்டுவெல் வெற்றிகரமாகச் செய்து காட்டியுள்ளார். இடையன்குடி ஒரு மாதிரி கிராமமாக அமைந்துள்ளது. அண்மையில் இந்திய அரசின் சிறந்த திட்டமிடப்பட்ட கிராமம் என்னும் விருதை இக் கிராமம் பெற்றுள்ளது என்பது கால்டுவெல்லின் கிராம உருவாக்கத்திற்குக் கிடைத்த அங்கீகாரம் என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. ஹென்றி பாக்கியநாதன், ஆ.இ.: நெல்லைத் திருச்சபை: இருநூறாண்டு சரித்திரம் (1780-1980), திருநெல்வேலி.

2. சண்முகசுந்தரம் (ப.ஆ) 2013 ரா.பி.சேதுப்பிள்ளை, சென்னை:காவ்யா

3. ரம்பாலாபோஸ்கோ,1980: கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள், தூத்துக்குடி: கிறித்தவத் தமிழ் இலக்கியக் கழகம்.

4. ஜேக்கப்,ஆர்.எஸ், 2009: பனையண்ணன், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

5. திராவிடப்பித்தன் 2009: திராவிட நாட்டுக் கல்வி வரலாறு, சென்னை: கயல்கவின்.

6. George Muller,1996: Bishop Robert Caldwell,Tirunelveli: Bishop Stephen Neil Study & Research Centre.

7. Kumaradoss, Vincent, Y. 2007: Robert Caldwell: A Scholar- Missionary in Colonial South India, Delhi: ISPCK.

இராபர்ட் கால்டுவெல்

இருநூற்றாண்டு (1814-2014)

திராவிடக் கருத்தியல் - வரலாறும் கருத்து நிலையும்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamfeb2014/26164-1814-2014

இராபர்ட் கால்டுவெல் (1814-2014) என்னும் மனிதரின் இருநூறு ஆண்டு நினைவைக் கொண்டாட வேண்டும். இருநூறு ஆண்டுகளில் தமிழ்ச் சமூகத்தில் உரையாடலுக்குட்பட்ட 'திராவிட இயல்' என்னும் கருத்துநிலை தொடர்பான உரையாடலுக்கு வழிகண்ட மனிதர்களுள் கால்டுவெல் முதன்மையானவர். திராவிட இயல் என்னும் கருத்துநிலையின் இருநூறு ஆண்டுகள் பயணத்தில், கால்டுவெல் குறியீடாக அமைகிறார். இந்தக் குறியீட்டின் இருநூற்றாண்டுப் பயணத்தை மதிப்பீடுசெய்து, அதன் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் கால்டுவெல் என்னும் ஆளுமையின் நினைவைப் போற்றும் கடமையும் நமக்கிருக்கிறது. கால்டுவெல்லைப் புரிந்துகொள்வதற்கு உதவும் நோக்கத்தில் பின் கண்ட வரையறைகளை உருவாக்கிக் கொள்வோம்.


-காலனியப் புலமையாளர்கள், அவர்களால் கட்டமைக்கப்பட்ட ‘இந்தியா’ என்ற நிலப்பகுதியில் செயல்பட்ட இனம், மொழி குறித்த மதிப்பீடுகளை உருவாக்கியமுறைகள்.

- சென்னை மாநிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் செயல்பட்ட புலமைத்துவச் செயல்பாடுகள்.

-கால்டுவெல் உருவாக்கிய ‘ஒப்பிலக்கணம்’ என்னும் துறை சார்ந்து, தமிழ்ச்சூழலில் முன்னெடுக்கப்பட்ட, மொழிசார்ந்தும் அம்மொழியைப் பேசும் மக்கள் சார்ந்தும் உருவான கருத்து நிலைகள்.

-தந்தை பெரியார் என்று அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி கட்டமைத்த கருத்து நிலையைக் கால்டுவெல் - கருத்துநிலையின் தொடர்ச்சியாகப் புரிந்துகொள்ளும் தேவை.

-பெரியார் மறைவுக்குப் பின் திராவிடக் கருத்துநிலை சார்ந்த செயல்பாடுகளைக் கால்டுவெல் உருவாக்கிய கருத்துநிலையின் வீழ்ச்சியா? அல்லது அக்கருத்துநிலை வேறு பரிமாணத்தில் உள்வாங்கும் தேவை இருக் கிறதா? என்ற உரையாடல்.



மேற்குறித்த உரையாடல் இருநூறு ஆண்டுகளில், தமிழ் மொழி பேசும் நிலப்பகுதியின் பண்பாட்டு வரலாற் றோடு இணைந்தும் இருக்கிறது.

இந்த வரலாற்றைக் கால்டுவெல் நினைவு சார்ந்து மதிப்பீடு செய்வதற்கான சூழல் உருப்பெற்றிருப்பதாகக் கருதலாம். தமிழ்ச்சூழல், பண்பாட்டு நெருக்கடியில் இப்போது தத்தளிக்கிறது. இதற்கான காரணங்கள் குறித்த உரையாடலும் அடுத்தகட்ட நகர்விற்கு, அக்கருத்துநிலை தொடர்பான மதிப்பீட்டைச் செய்ய வேண்டும். அதன் மூலம் புதிய நடைமுறைகளைக் கட்டமைக்க முடியும். பொருளாதார நெருக்கடிகள் நம்மால் புரிந்துகொள்ளும் அளவிற்கு மொழி-இனம் சார்ந்த பண்பாட்டு நெருக்கடிகள் புரிந்துகொள்வதற்கான சூழலும் தேடலும் மிகவும் குறைவாகவே இருப்பதை உணர்கிறோம். ‘தனிமனித செயல்பாடு’ சார்ந்து மதிப்பீடு செய்வதின் மூலம், அம்மனிதர் முன்னெடுத்த கருத்துநிலைக்கும் சமூகத்தில் அக்கருத்துநிலை சார்ந்த செயல்பாட்டிற்கும் உள்ள உறவைப் புரிந்துகொள்ளலாம்.

1784 - ஆம் ஆண்டு ‘ஆசியவியல் கழகம்’ என்னும் அமைப்பைக் கல்கத்தாவில் வில்லியம் ஜோன்ஸ் (1746-1794) உருவாக்கினார். இலண்டன் நகரில் செயல்பட்ட ஆசியவியல் கழகத்தின் கிளையாகவே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு, ஆசியாக்கண்டம் சார்ந்த நிலப்பகுதி மற்றும் ஆப்பிரிக்கா நிலப்பகுதியில் வாழும் மனிதர்கள் சார்ந்த இனவியல் ஆய்வுகளில் அக்கறையுடன் செயல்பட்டது. இவ்வமைப்பில் செயல்பட்ட பலரும் ‘இந்தியா’ என்னும் நிலப்பகுதியின் மக்கள் என்பவர்கள் இந்தோ-ஆரிய மொழிக் குடும் பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதினர். இந்நிலப் பகுதியில் பேசப்படும் மொழிகள் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமசுகிருத மொழியி லிருந்து உருவான மொழிகள் என்றும் கருதினர். சமசு கிருத மூல மொழியிலிருந்தே இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் கிளைத்திருக்க வேண்டும் என்னும் கருதுகோளை முன்னிறுத்தியே ஆய்வு செய்தனர். கி.பி. 1812 இல் சென்னையில், சென்னை இலக்கியச் சங்கம் உருவாக்கப்படும் வரை, மேற்குறித்த கருத்துநிலைதான் நடைமுறையில் இருந்தது.

1784 - 1812 என்ற காலச்சூழலில் காலனியப் புலமைத்துவச் செயல்பாட்டில், திராவிட மொழிக் குடும்பம் என்னும் கருத்துநிலை இடம்பெறவில்லை. இதன் மூலம் காலனியப் புலமையாளர்கள் கட்டமைத்த கருத்துநிலைகளைப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

-‘இந்தியா’ என்று காலனிய ஆட்சி அதிகாரத்தில் கட்டமைக்கப்பட்ட நிலப் பகுதியின் மூல மொழி சமசுகிருதம் என்னும் நிலைப்பாடு.

-சமசுகிருத மொழியில் உள்ள நூல்கள் தான்,‘இந்தியா’ என்ற நிலப்பகுதியின் பண் பாட்டுக் கூறுகளைப் புரிந்துகொள்ள உதவும் என்னும் புரிதல்.

- சமசுகிருத மொழி வழி அறியப்படும் ‘இந்து மதம்’ என்னும் கருத்துநிலை. அதுவே இந்தியா தொடர்பான சட்ட மரபுகளை உருவாக்க உதவும் என்னும் புரிதல்; இந்துமதம் சார்ந்த ‘மநுநூல்’ பதிவுகளே இந்தியாவின் அறநூல் மரபாகக் கொள்ள வேண்டும் என்ற செயல் பாடு.

மேற்குறித்த பின்புலத்தில்,‘தென்னிந்தியா’ என்ற நிலப்பகுதி குறித்தோ, அப்பகுதியில் மக்கள் பேசும் மொழி குறித்தோ எவ்விதமான புரிதல் அற்றதாகக் காலனியப் புலமைத்தளம் செயல்பட்டதைக் காண்கி றோம். இந்நிலையைக் கி.பி. 1816 இல் பிரான்சிஸ் வைட் எல்லீஸ் (1777-1819) என்னும் காலனிய ஆட்சி யாளர் மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறார். ஏ.டி. காம்பெல் (1789-1857) என்பவர் 1816 இல் எழுதிய தெலுங்கு இலக்கண நூலுக்கு முன்குறிப்பை எழுதுகிறார் எல்லீஸ். இதில் தென்னிந்திய மொழிகள் பல இருப் பதைக் குறிக்கிறார். எல்லீஸ் வெளிப்படுத்திய குறிப்பு சார்ந்து பின்வரும் செய்திகளைத் தொகுத்துக் கொள்ள முடியும்.

-இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம் என்று ஆசியவியல் கழகம் கருதும் கருத்துநிலைக்கு மாறாக தென்னிந்தியப் பகுதியில் வேறு மொழிக்குடும்பம் நடைமுறையில் இருப்பது அறியப்படுகிறது.

- சமசுகிருத மொழிக்கும், தென்னிந்தியப் பகுதியில் இருக்கும் மொழிகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பது குறித்தும் உலகுக்கு அறிவிக்கப்படுகிறது.

- எல்லீஸ் வெளிப்படுத்திய மேற்குறித்த கருத்து நிலையைத் திராவிட அடையாளம் ((Dravidan proof)என்று தாமஸ் ட்ரவுமன் பின்னர் வரை யறை செய்யும் வாய்ப்பு உருப்பெறுகிறது.

எல்லீஸ் வழி உருவான மேற்குறித்த அடையாளம், சென்னையில் காலனிய ஆட்சியாளர்களால், குறிப்பாக எல்லீஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட 'சென்னை இலக்கியச் சங்கம்' (1812) மற்றும் புனித ஜார்ஜ் கல்லூரி ஆகியவற்றின் செயல்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தப் படுகிறது. மேற்குறித்த அமைப்புகளின் மூலம் அச்சகம் உருவாக்கப்படுகிறது. நூல்வெளியீட்டகம் அமைக்கப் படுகிறது. பல்வேறு நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப் படுகின்றன. இவ்வமைப்பின் செயல்பாடுகள் 1812 - 1854 என்றகாலப்பகுதியில் வளமாகச் செயல்படுகிறது. திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் குறித்த வேறுபட்ட புரிதல் இவ்வமைப்பால் கட்டமைக்கப்பட்டது. காலனியப் புலமையாளர்கள், உள்ளூர்ப் புலமையாளர்களுடன் இணைந்து செயல் படும் சூழல் உருவானது. இவ்வகைச் செயல்பாட்டை இப்போது சென்னைக் கீழ்த்திசைப்பள்ளி (Madras school of Orientalism)என்று தாமஸ் ட்ரவுமன் போன்றவர்கள் அழைக்கிறார்கள். இக்கருத்துநிலை மூலம் உருவான புதிய தன்மைகளாய்ப் பின்கண்டவற்றைத் தொகுக்கலாம்.

- சமசுகிருத மொழி சார்ந்த அடையாளம் என்ற தன்மையிலிருந்து வேறுபட்ட பிறிதொரு அடையாளம் வெளிப்படுத்தப்படுகிறது.

- மேற்குறித்த அடையாளம் திராவிட அடை யாளம் என்னும் 'திராவிடமொழிக் குடும்பம்' என்ற பிறிதொரு மொழிக் குடும்பமும் இந்திய நிலப்பகுதியில் செயல்படுவதும் உறுதிப் படுத்தப்பட்டது.

- 1784 இல் உருவாக்கப்பட்ட ஆசியவியல் கழகத்தின் கருத்து நிலைகள், மொழி, இனம், பண்பாடு, நிலவியல் ஆகிய பல்வேறு கூறு களிலும் தவறானவை என்பது உலகுக்கு அறிவிக்கப்படுகிறது.

1784 - 1812 என்ற காலநிலையில் உருவாக்கப் பட்ட கருத்துநிலைகள் 1812 - 1856 உள்ளிட்ட காலப் பகுதியில் 'சென்னைக் கீழைத்தேயவியல் பள்ளி' என்னும் கருத்துநிலையாக உருப்பெற்றுவிடுகிறது. காலனிய அதிகாரத்தில் உருவாக்கப்பட்ட இந்தியா என்னும் நிலப்பகுதி இருவேறுபட்ட மொழிக்குடும்பங்கள் செயல்படும் பூமியாக இருப்பது உறுதியாகிறது. இதன் மூலம் 'கீழைத்தேயவியல்' என்னும் கருத்துநிலையில் அடிப்படையான

மாற்றங்களை முன்வைக்கும் சூழல் உருப்பெற்றதாகக் கருதலாம். அதனைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்வோம்.

- மேற்குலகைச் சேர்ந்த காலனிய மனநிலை யாளர்களால் உருவாக்கப்பட்ட கீழைத் தேயவியல் Orientalism என்னும் கருத்து நிலையில், இந்தியா என்னும் நிலப்பகுதியில் சமசுகிருத மொழிசார்ந்த ஆக்கங்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

- புதிய கருத்துநிலையியல், தென்னிந்திய மொழிகள், அதிலும் குறிப்பாக 'தமிழ்' என்பதும் இடம்பெற்றது. சமசுகிருத மொழிக்கு இணையான பழமை உடையதாகவும் தமிழ் அறியப்பட்டது.

- கீழைத்தேயவியல் என்னும் கருத்துநிலையில், வரலாற்றுப் போக்கில் தமிழ்மொழி, அதனைப் பேசும் மக்கள் ஆகியோர் குறித்த கருத்துநிலை இடம் பெறவேண்டியதன் தேவை முன்வைக்கப் பட்டது.

- தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்று முள்ள திராவிட மொழிகள் சார்ந்த பல்வேறு கூறுகளும் 'கீழைத்தேயவியல்' என்னும் கருத்து நிலைக்குள் வரும் தன்மையும் உலகுக்கு அறிவிக்கப்பட்டது.

மேற்குறித்த பின்புலத்தில் இராபர்ட் கால்டுவெல் (1814-1891) என்னும் மனிதரின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யும் தேவை உண்டு. மேற்குறித்த 1784 - 1856 கால இடைவெளியில் உருவான 'திராவிடஇயல்' என்னும் கருத்துநிலைகளைக் கால்டுவெல் எவ்வகையில் எதிர் கொண்டார் என்பதன் மூலம் அவரது தனித்த ஆளுமையைப் புரிந்துகொள்ள இயலும். கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதுவதற்கு முன்பு, தமிழியல் தொடர்பாகச் செயல்பட உருவான சூழல் குறித்தும் பதிவு செய்வது அவசியம். 1812 - 1854 காலச்சூழலில் செயல்பட்ட, சென்னைக் கல்விச் சங்கம், மற்றும் சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியின் மூலமாகப் பல்வேறு செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், கால்டுவெல் சென்னைக்கு வந்து சேர்கிறார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், தாண்டவராய முதலியார், விசாகப் பெரு மாளையர் ஆகிய பிற தமிழறிஞர்கள் கோட்டைக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்தச்சூழல் தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றைப் பிரித்தானியர்கள் எளிதாகக் கற்று

அறியும் வாய்ப்பை உருவாக்கியது. கால்டுவெல் 1838 இல் சென்னை வந்தடைந்தபின் அவருக்குக் கிடைத்த புறச்சூழலின் தன்மைகளைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ள இயலும்.

- அன்ட்ரிக் அடிகள் (1520-1600), இராபர்ட் டி-நொபிலி (1577-1656), வீரமாமுனிவர் (1680-1746), சீகன்பால்கு (1682-1719) ஆகிய பலர் தமிழியல் தொடர்பாக உருவாக்கியிருந்த பின்புலம், கால்டுவெல் இயல்பாகச் செயல் பட வாய்ப்பாக அமைந்தது.

- துரு, கால்டுவெலின் நெருக்கமான நண்பர். இவர் இராமாநுசக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். திருக்குறளில் 63 அதிகாரங்களை மொழிபெயர்த்தவர். மேலும் பவர் (1812-1885) அவர்களும் கால்டுவெல்லின் நண்பரா வார். இவர் சீவகசிந்தாமணி நாமகள் இலம் பகம் வரை மொழிபெயர்த்தவர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியை உருவாக்கிய அந்தர்ஸன் கால்டுவெல்லுக்கு நெருக்கமான நண்பராக இருந்தார்.

- 1841 ஆம் ஆண்டில் சென்னையில் மாநிலப் பள்ளி ((Presidency School)) உருவாக்கப்பட்டது. இதில் ஆசிரியராக பவர் பணியாற்றினார். இந்தக் காலத்தில் கால்டுவெல் உடனிருந்தார். கரந்தை இராசாராம் முதலியார் என்பவரிடம் தமிழ்பயின்றார்.

கால்டுவெல் மேற்குறித்த தமிழ்ச்சூழலில் 1838-1841 ஆண்டுகளில் சென்னையில் வாழ்ந்தார். பின்னர் கால்நடையாகவே திருநெல்வேலி சென்றடையத் திட்டமிட்டார். சிதம்பரம் வழியாகத் தரங்கம்பாடியைச் சென்றடைந்தார். அங்குச் செயல்பட்டுக் கொண்டிருந்த டேனிஸ் ஏசு சபைச்செயல்பாடுகளை நேரில் கண்டறியும் வாய்ப்பு கிடைத்தது. பின்னர் தஞ்சாவூரில் இருந்த சுவார்த் (1726-1798) அவர்களைச் சென்று பார்த்தார். அவருடன் சில காலம் தங்கியிருந்தார். சுவார்த் தமிழ்-இலத்தின் அகராதியைத் தொகுத்தவர். பின்னர் நீலகிரி, கோயம்புத்தூர் வழியாக மதுரையைச் சென்றடைந்தார். இப்பொழுது செயல்படும் அமெரிக்கன் கல்லூரி உருவாவதற்கு மூலமாக அமைந்த பள்ளிக்கூடத்தைத் திருமங்கலத்தில் உருவாக்கிய திரேசி அவர்களையும் மதுரையில் சந்தித்தார். சென்னைப் பல்கலைக்கழக அகராதியை ((Tamil/Lexicon)) மதுரையில் தொடங்கி வைத்த சாந்தலர் என்பவரையும் கால்டுவெல் சந்தித்தார்.

இவ்வகையில் தமிழகத்தின் நிலவியல் கூறுகள், பல்வேறு வகைப்பட்ட மக்களின் வாழ்முறைகள் ஆகியவற்றை அறிந்துகொண்டு 1841 இல் திருநெல்வேலி நாசரத் சிற்றூரைச் சென்றடைந்தார். பின்னர் நிலையாக இடையன்குடியில் தங்கி சமயப் பணியாற்றத் தொடங் கினார். இவர் இடையன்குடியில் பணியாற்றிய போது மிக அருகில் இருந்த சாயர்புரத்தில் போப் (1820-1908) பணியாற்றிக்கொண்டிருந்தார். இடையன்குடியிலிருந்து ஐந்துகல் தொலைவில் இருந்த சுவிசேஷபுரத்தில் சச்சந்தர் சமயப் பணிபுரிந்தார். நாகர்கோவிலில் மால்த் என்பவர் சமயப் பணிபுரிந்து வந்தார். இவருடைய மகள் எலிஜா அவர்களைத்தான் கால்டுவெல் பின்னர் திருமணம் செய்து கொண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் திருநெல்வேலிச் சீமை முழுவதும் இவ்வகை கிறித்தவத் தொண்டர்களின் சமயப்பணி நடைபெற்ற சூழலில் கால்டுவெல் பணியாற்றினார். இவருக்கு தட்பவெட்பச் சூழல், உடல்நலம் கெட வாய்ப்பாயிற்று. எனவே, 1854 இல் தமது தாயகத்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு ஓய்வாக இருந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை உருவாக்கி 1856 இல் இலண்டன் நகரத்தில் அச்சிட்டு வெளியிட்டார். கால்டுவெல் உருவாக்கிய இந்நூல்தென்னிந்திய திராவிட மொழிக்குடும்பம் குறித்த நிலையான ஆவணமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து 1857 இல் போப் - உருவாக்கிய தமிழ் இலக்கண நூலும், 1858இல் சாமுவேல்பிள்ளை உருவாக்கிய தொல்காப்பிய நன்னூல் என்னும் நூலும் 1862 இல் வின்சுலோ உருவாக்கிய தமிழ்-ஆங்கில அகராதி மற்றும் ஆங்கில-தமிழ் அகராதியும் தமிழியல் ஆய்வு வளர்ச்சியில் முக்கிய பணிகளாக உருப்பெற்றன. 1860 இல் பர்னல் எழுதிய ‘தென்னிந்திய தொல் லெழுத்தியல் கூறுகள்’ குறித்த நூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்தது. கால்டுவெல் செயல்பட்ட இச்சூழலில், தமிழ்ச்சூழல் எவ்வகையில் செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பது குறித்த புரிதல் தேவை. இதனைப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

- வடலூர் இராமலிங்கன் என்னும் வள்ளலார் (1823-1874) சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் சமயச் சீர்திருத்தப் பணியைச் செய்துகொண் டிருந்த காலம்.

- சைவ சமய மறுமலர்ச்சியைக் காலனியத்தின் மூலம் உருப்பெறும் மறுமலர்ச்சிக்கு இணை யாகக் கட்டமைக்க ஆறுமுகநாவலர் (1822-1879) முயற்சி எடுத்துக் கொண்ட காலமும் இதுவாகும்.

- பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் போன்ற சமயச்சீர்திருத்த இயக்கங்கள் செயல்பட்ட காலமும் இதுவாகும்.

- சென்னை இலௌகிக சங்கம் (1878-1888) என்னும் நாத்திக இயக்கம் செயல்பட்ட காலமும் இதுவாகும்.

மேற்குறித்த அமைப்புகள் எதுவும் கட்டமைக்காத கருத்துநிலையைக் கால்டுவெல் தமது நூலின் மூலமாகக் கட்டமைத்தார். 'திராவிடம்' என்னும் அக்கருத்துநிலை, அவரால் 1856 இல் உருவாக்கப்பட்டு, அவர் தமது நூலை 1875 இல் இரண்டாம் பதிப்பாகக் கொண்டு வரும் போது மேலும் வளர்த்தெடுத்த நிலையைக் காண முடிகிறது. 1856-1875 காலச்சூழலில், தமிழ்ச்சூழலில் உருவான புதிய கூறுகள் அனைத்தையும் தமது நூலில் அவர் இணைத்தார். அந்நூல் சென்னைப்பல்கலைக்கழகப் பாடநூல் ஆக்கப்பட்டது. கால்டுவெல், சென்னைப் பல்கலைக்கழக - ஆட்சிமன்ற உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டார். 1879 இல் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் தகுதியும் அவருக்கு ஏற்பட்டது. 1913 இல் கால்டு வெல்லின் ஒப்பிலக்கண நூலைச் சில மாற்றங்களுடன் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அந்நூலில் செய்யப் பட்ட மாற்றங்கள், கால்டுவெல் முன்னெடுத்த திராவிட இயல் குறித்த கருத்து நிலையைச் தமிழ்ச்சமூகம் எதிர் கொண்டதற்கான ஆதாரமாகக் கொள்ள இயலும். அந்நூலில் நீக்கப்பட்ட பகுதிகள், எவ்வகையான கருத்து நிலை சார்ந்து செயல்பட்டது என்பதைத் தொகுத்துக் கொள்வோம்.

- கால்டுவெல், தமிழ் இலக்கிய உருவாக்கம் நடைபெற்ற போக்குகளை அவரது கண் ணோட்டத்தில் பதிவு செய்து இருந்தார். அதில் 'சமண இலக்கிய வட்டம்' என்னும் பகுதியும்,'பார்ப்பனிய எதிர்ப்பு இலக்கிய வட்டம்' என்னும் பகுதியும் இடம்பெற்றிருந்தது.

- பறையர்கள் என்னும் மக்கள், ஆதிதிராவிடர்கள் என்னும் கருத்து நிலை சார்ந்த கருத்துக்களைக் கால்டுவெல் பதிவு செய்திருந்தார்.

1849 இல் ஒடுக்கப்பட்ட சாணர்கள் குறித்த இனவரை வியல் நூலைக் கால்டுவெல் எழுதியிருந்தார். இந்தப் பின்புலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த பதிவைச் செய்தார்.

- இந்து மத நடவடிக்கைகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இருப்பதையும் பிற் காலத்தில் விரிவாகப் பதிவு செய்தார். இந்தக் கருத்தின் பல கூறுகளும் இவரது நூலில் இடம் பெற்றிருந்தன.

கால்டுவெல் நூலிலிருந்து அகற்றப்பட்ட பகுதிகளின் அரசியல் கருத்துநிலையைப் புரிந்துகொள்ளப் பின் கண்ட வரையறையை முன்வைக்கலாம்

- சைவ மற்றும் வைதீக மரபுக்கு மாறான சமண மரபு முன்வைக்கப்படுகிறது.

- சாதிய அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்கள் திராவிடர்கள் என்னும் அடையாளத்திற்குள் கொண்டு வரப்படுகிறார்கள்.

- சமசுகிருத கருத்துநிலை சார்ந்த நிலைப் பாட்டிற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன.

- ‘இந்துமதம்’ என்னும் கட்டமைப்பு கேள்விக்கு ஆளாக்கப்படுகிறது.

கால்டுவெல் நூலில் நீக்கப்பட்ட பகுதிகள் மூலம், திராவிட இயல் சார்ந்த கருத்துக்களாக கால்டுவெல் கருதியவை நீக்கப்பட்டு சுத்தமாக்கப்படும் சூழல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1913) உருவானது. இத்தன்மை உருப்பெற்றதற்கான காரணம், ‘வைதீக கருத்துநிலை சார்ந்தவர்கள்’, குறிப்பாக சைவர்கள், கால்டுவெல் சொல்லும் திராவிடக் கருத்தியலை ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள்.

சைவமரபு சார்ந்த திராவிடக் கருத்தியலை முன்னெடுக்க முயன்றவர்கள். சமூகத்தின் ஆதிக்க சாதியாக இருந்த வெள்ளாளர்கள் மற்றும் பார்ப்பனர்கள் கட்ட விரும்பிய திராவிட இயலுக்குப் புறம்பானதாகக் கால்டுவெல் கூறும் திராவிட இயல் அமைந்திருக்கிறது. வைதீக மரபுகள் சார்ந்த சாதியப் படிநிலைகளை ஏற்றுக் கொண்டவர்கள் கருதும் திராவிடம், கால்டுவெல் பேசும்

திராவிடத்தை ஏற்கும் வகையில் இல்லை. இந்த முரண்தான் கால்டு வெல் நூலின் பகுதிகளை நீக்குவதற்கு அடிப்படையாக அமைவதைப் புரிந்துகொள்ள வேண்டும். மேற்குறித்த சைவம் சார்ந்த திராவிட மரபுகளை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை (1855-1897) தொடங்கி, மறைமலை யடிகள் (1876-1950) வழியாக உருவான திராவிட வெள்ளாள மரபைப் புரிந்துகொள்ள முடியும். இவ்வகையில் கால்டுவெல் கட்டமைத்த திராவிட இயல் என்பது பின்வரும் கூறுகளில் கவனத்தில் கொள்ளத் தக்கது.

- ஐரோப்பிய புத்தொளி மரபில் உருவான மொழிகளில் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு, திராவிடமொழிக் குடும்பம் என்பதைக் கண்டறிந்தது

- திராவிட மொழிகளைப் பேசுபவர்கள் கொண் டிருந்த சாதிய மரபுகளை ஏற்றுக் கொள்ளாதது.

- இந்து மதம் என்னும் பெயரில் வைதீகம் கட்டமைத்த கருத்துக்கள் முற்றிலும் மாறானது.

- சாதிய படிநிலைச் சமூக உளவியல் தன்மையில் வாழும், ஆதிக்க சாதி மற்றும் ஆதிக்க சமயம் ஆகியவற்றுக்கு முரணானது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, அந்த நூற்றாண்டின் இறுதிக்குள் கால்டு வெல் கட்டமைத்த திராவிட இயல் என்பது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உருவான பின்கண்ட கூறுகளால் வலுவானது. அக்கூறுகள் வருமாறு:

- காலனிய புத்தொளி மரபில் உருவான தொல்லியல்துறை (1864) பல்வேறு புதிய வரலாற்றுத்தரவுகளைக் கண்டெடுத்தது. இதன் உச்சமாக சிந்துசமவெளி அகழாய்வு தொடர்பான கருத்துநிலைகள் உருப்பெற்றன.

- அச்சுக்கருவி வருகையில், நமது தொல்லிலக்கண மரபு, தொல்லிலக்கிய மரபு ஆகியவை பரவலாக அறியும் வாய்ப்பு உருவானது. அதன் மூலம் உலகம் தழுவிய மரபுகளில் ஒன்றாக திராவிட இயல் மரபின் தொன்மை அறியப் பட்டது.

மேற்குறித்த தன்மைகள் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு மேலாக வலுப்பெற்று வந்திருந்த வைதீக மரபு, சமஸ்கிருத மரபு, ஆதிக்க சாதியக் கருத்துநிலை ஆகிய பலவற்றைக்கேள்விக்கு உட்படுத்தியது. தமிழ்ச் சமூகத்தின் இயங்குநிலை மூன்று அடிப்படையான கூறுகளில் செயல்படத் தொடங்கியது. அதற்குள் திராவிடக் கருத்துநிலை உள்வாங்கப்பட்டது.

- வைதீகத்தை அடிப்படையாகக் கொண்ட, சைவ, வைணவ இணைவில் உருப்பெற்ற 'இந்துத்துவா' கருத்துநிலை பின்னர் உருப்பெற மூலமாக அமைந்த சாதியப்படிநிலை அமைப்பு.

- ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களை அடையாளப் படுத்த, ஆதிதிராவிடக்குடிகள் என்னும் கருத்து நிலை சார்ந்து, பௌத்த, சமண, சாங்கிய கருத்து நிலைகளை முன்னெடுத்த சூழல்.

- இந்தியா என்ற தேசம் கட்டப்பட்ட சூழலில், அதில் செயல்படும் சாதி, மதம் ஆகிய அனைத்துக் கூறுகளையும் மறுக்கும் சுயமரியாதை இயக்க மரபு.

மேற்குறித்த மூன்று நிலைகளில், இறுதியாகக் கூறப்பட்ட சுயமரியாதை இயக்க மரபு, கால்டுவெல் முன்னெடுத்த 'திராவிட கருத்துநிலை' மரபை ஏற்றுக் கொண்ட மரபாகப் புரிந்து கொள்ள முடியும். அயோத்தி தாசர், பெரியாருக்கு முன் இத்தன்மைகளை பௌத்த மரபாக முன்னெடுத்தார். இம்மரபுகளை எல்லாம் மறுத்த 'சென்னை இலௌகீக சங்கம்' பத்தொன்பதாம் நூற்றாண்டில் செயல்பட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் இருக்கும் நாம், கால்டுவெல் வழியாகக் கட்டப்பட்ட திராவிட இயல் கருத்துநிலையின் இன்றைய வளர்ச்சி, பொருத்தப்பாடு ஆகிய புரிதலுக்குள் செயல்படவேண்டிய நெருக்கடி உருவாகியுள்ளது. இதனை விவாதிக்க கீழ்க்காணும் கால ஒழுங்கிலான ஒரு பாகுபாட்டை வசதிக்காக உருவாக்கிக் கொள்வோம்.

- 1784-1816 என்ற காலச்சூழலில் ஐரோப்பிய புத்தொளி மரபு மூலமாக, நமது மரபுகளைக் புரிந்துகொள்ள முற்பட்டபோது, திராவிட இயல் என்னும் கருத்துநிலை இல்லை.

- 1816-1856 என்ற காலச்சூழலில் 'சென்னைக் கீழைத் தேயப்பள்ளி' ((Madras School of Orientalism)) என்னும் கருத்துநிலை சார்ந்து இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்ட இன்னொரு மொழிக் குடும்பம் என்னும் 'திராவிட அடையாளம்' ((Dravidian Proof)) உருப்பெற்ற காலம்.

- 1856-1925 என்ற காலச்சூழலில், கால்டுவெல் கட்டமைத்த திராவிட இயல் என்னும் மொழி மற்றும் இனக்குழு சார்ந்த கருத்துநிலை உரை யாடலுக்கு உட்படுத்தப்பட்ட காலம். சமயம் சார்ந்த மரபிலிருந்து வேறுபட்டு மொழிநூல் என்ற பயில்துறை மூலம் உலகம் தழுவிய புத்தொளி மரபில் புரிதல் உருவான காலம். இதன் மூலம் 'திராவிட இயல்' அங்கீகரிக்கப் பட்ட காலம்.

- 1925-1973 என்னும் காலம், ஈ.வெ.ராமசாமி என்னும் பெரியார் செயல்பட்ட காலம். திராவிடக் கருத்துநிலை, பார்ப்பனீய ஆதிக்கம், வைதீக-சமய ஆதிக்கம், வடநாட்டு முதலாளிகள் ஆதிக்கம், சமசுகிருத வழி வந்த இந்துஸ்தானி எனப்படும் இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான போர் என்று திராவிடக் கருத்துநிலை புரிந்துகொள்ளப்பட்ட காலம்.

- 1973-2014 என்ற நமது சமகாலம். பெரியார் முன்னெடுத்த திராவிடக் கருத்துநிலை என்பது 'தேர்தல் சார்ந்த கட்சிகளுக்கான அடையாள மாக' கட்டமைக்கப்பட்டு, பல்வேறு பண் பாட்டுச் சீரழிவுகள் உருப்பெற்றுள்ள காலம். கால்டுவெல் உருவாக்கிய கருத்துநிலை இரண்டு நூற்றாண்டு காலமாகப் பயணம் செய்து வந்த காலத்தின் இறுதிப்பகுதி.

மேலே நாம் பாகுபடுத்திய காலப்பகுதிகள் சார்ந்து, முதல் மூன்று பகுதிகளை கால்டுவெல்லை முதன்மைப் படுத்தி உரையாடலுக்கு உட்படுத்தினோம். இறுதி இரண்டு காலப் பகுதிகளில் செயல்பட்ட திராவிடக் கருத்தியல் சார்ந்த உரையாடல் நம்முன் உள்ளது. இதனை இடதுசாரி கண்ணோட்டம் கொண்ட இயக்கவியல் கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்தவர் களின் கருத்துநிலைகளை, மீண்டும் உரையாடலுக்கு உட்படுத்த வேண்டும். இடதுசாரி அமைப்புகள், இனம், மொழி சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை மதிப்பீடு செய்வதில் முந்தைய நிலைப்பாடுகளிலிருந்து சில

மாற்றங்கள் உள்வாங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்தக் கண்ணோட்டத்தில், திராவிடக் கருத்துநிலை மொழி, இனம் சார்ந்த அடையாளமாகச் செயல்பட்டு, அது இன்று செயல்படும் நிலையில் உருவாகியுள்ள சிக்கல்களை எப்படிப் புரிந்துகொள்வது? என்ற உரையாடலை கால்டுவெல்லின் இருநூறாம் ஆண்டுச் செயல்பாடாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

சான்றாதாரங்கள்

நூல்கள்

1827 - Document Transactions of the Literary society of Madras. Part-I: Longman, Rees, Orme, Brown and Green.Paternoster Row. London

1875 - Caldwell Robert. A comparative Grammar of the Dravidian of South Indian family of Languages - London. Trubner & Co., Ludgate Hill. First Renewed Print – 2008 By Kavithasaran pathipagam.Chennai – 19.

1922 - No Author; Eminent Orientlists – Reprinted by Asian Educational Series

1991.1958 - கந்தசாமிப்பிள்ளை.நீ. கால்டு வெல்லும் அவர் வாழ்ந்த காலமும் (கட்டுரை) தமிழ்ப் பொழில் - கால்டுவெல் நூற்றாண்டு மலர்.

1982 - டாக்டர் கால்டுவெல் திராவிடமொழி களின் ஒப்பிலக்கணம். தமிழில் கா.கோவிந்தன், கி.ரத்னம், திருமகள் நிலையம். சென்னை - 1.

2006 - Trautmann R. Thomas. Languages and Nations.The Dravidian proof in Colonial Madras. Yoda Press. NewDelhi – 1.

2008 - மாற்றுவெளி: கால்டுவெல் சிறப்பிதழ் - சிறப்பாசிரியர் - வீ.அரசு. சென்னை.

2010 - சாமுவேல்பிள்ளை. கி. பதிப்பு: இரா.வெங்கடேசன், வெ.பிரகாஷ், தொல்காப்பிய நன்னூல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை - 98 (முதல் பதிப்பு - 1858)

2012 - அரசு.வீ. திராவிட இயக்கம் நூறு ஆண்டுகள் (குறுநூல்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை 98.


2012 - நஜ்மா.மு, கஸ்தூரி.மு, மோகனா.அ, காமாட்சி.மு, (தொகுப்பாளர்கள்) காஞ்சி: ஐரோப்பிய, அமெரிக்கத் தமிழியல் அறிஞர்கள், பரிசல் சென்னை-106.

பேராயர் கால்டுவெல்லின் திருநெல்வேலி வரலாறு

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagamfeb2014/26163-2014-03-25-07-06-55

தென்னிந்திய வரலாற்றுடன் இணைந்த திருநெல்வேலியின் இரண்டாயிரம் ஆண்டுக்கால நெடிய வரலாற்றை மீட்டெடுக்க இந்நூல் முயற்சி செய்கிறது (வின்செண்ட் குமாரதாஸ்)

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்திலும், 1858க்கும் பின் ஏற்பட்ட பிரிட்டிஷ் ஆட்சியின் போதும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் வரலாறுகள் ஆங்கில அதிகாரிகளால், ஆங்கில மொழியில் எழுதப்பட்டு, நூல்வடிவில் வெளிவந்தன. ‘மானுவல்’, ‘கெசட்டியர்’ என்ற பெயர்களில் இவை வெளியாயின. ஒரு குறிப்பிட்ட நிர்வாகப் பகுதியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் ஆங்கில அதிகாரிகளுக்கும், இவர்களுக்கு மேலதிகாரிகளாக சென்னையில் இருந்த ஆங்கில அதிகாரிகளுக்கும் குறிப்பிட்ட நிர்வாகப் பகுதி குறித்த அறிமுகத்தைச் செய்வதுதான் இந்நூல்களின் அடிப்படை நோக்கமாக அமைந்தது.



இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், குறிப்பிட்ட நிர்வாகப் பகுதியின் தொடக்ககால வரலாறு, ஆங்கில ஆட்சி அங்கு நிலைபெற்ற வரலாறு, நில அமைப்பு, ஆறுகள், மலைகள், காடுகள் குறித்த புவியியல் செய்திகள், வாழும் மக்கள், அவர்களிடம் நிலவும் சாதிப்பிரிவுகள், பழக்க வழக்கங்கள், சமயம், பண்பாடு, தொழில் ஆகியனவற்றை அப்பகுதிக்குப் புதிதாகப் பொறுப்பேற்கும் அதிகாரிகள் புரிந்துகொள்ள இவை துணைசெய்தன.

இவ்வகையில் ஆங்கில ஆட்சிக் காலத் திருநெல்வேலி மாவட்டத்தைக் குறித்துப் பின்வரும் இரு ஆங்கில நூல்கள் வெளியாயின :

1) ஸ்டூவர்ட் (1879): திருநெல்வேலி மானுவல்

2) பேட் (1917): திருநெல்வேலி மாவட்டக் கெசட்டியர்.

இவ்விரு நூல்களும் மேற்கூறியபடி நிர்வாக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந் நோக்கத்தில் இருந்து விலகி நின்று, இவ்விரு நூல் களுக்கும் இடைப்பட்ட காலமான 1881-இல் கால்டு வெல்லின்; 'திருநெல்வேலி வரலாறு' வெளியானது. இந்நூலுக்கு அவர் கொடுத்துள்ள தலைப்பு வருமாறு:

A: History of Tinnevlly From the Earliest Period To its cession to the English Government in A.D.1801.இந்நூல் அதிகாரிகளுக்கான வழிகாட்டி நூலாக அல்லாமல் வரலாற்று நூலாகவே எழுதப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சீமை

விசயநகரப் பேரரசின் படையெடுப்புக்குத் தமிழகம் ஆளான பின்னர், அப்பேரரசின் கட்டுப்பாட்டிற்கு உட் பட்ட 'மண்டலம்' என்ற நிர்வாகப் பகுதி உருவானது. இவ்வகையில் உருவான மண்டலமே மதுரை.

மதுரை மண்டலத்தின் ஆளுநராக நியமிக்கப் பட்டவர் நாயக்கர் என்ற பதவிப் பெயர் பெற்றார். மண்டலத்தின் உட்பிரிவாகச் சீர்மை என்பது அமைந்தது. இதுவே பேச்சுவழக்கில் 'சீமை' எனப் பட்டது.

மதுரையின் தென்பகுதியில் உருவாக்கப்பட்ட சீமையாகத் திருநெல்வேலிப் பகுதி அமைந்தது. திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டிருந்த இச்சீமைக்கு மேற்கெல்லையாக மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்கெல்லையாக வங்கக் கடலும் அமைந்தன. இன்றைய விருதுநகர் மாவட்டத்தின் தென்பகுதியும், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களும் இச் சீமையில் அடங்கியிருந்தன. இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தின் நாஞ்சில் நாட்டுப் பகுதி அவ்வப்போது இச்சீமைக்குள் அடங்கி வந்தது.

மாவட்டம்

தென்பாண்டி நாடு என்ற பெயரில் இதே பகுதி நாயக்கர் ஆட்சிக்கு முன்னர் அழைக்கப்பட்டது. ஆங்கில அரசு இப்பகுதியில் ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்ட பின் இப்பகுதி திருநெல்வேலி மாவட்டம் என்றாயிற்று. நாஞ்சில் நாடு திருவிதாங்கூர் மன்னராட்சிக்கு உட்பட்ட பகுதியாய்த் தொடர்ந்தது.

* * *

இந்தியர்களுக்கு வரலாற்றுணர்வு கிடையாது என்ற அய்ரோப்பியர்களின் வழக்கமான கூற்றுடன் தன் நூலைத் தொடங்கும் கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டம் மதுரையின் ஒரு பகுதியே என்று கருதுகிறார் (கால்டுவெல் 2004:3). அடுத்து

திருநெல்வேலியின் பூர்விகக் குடிகள் குறித்துச் சில கருத்துக்களை முன் வைக்கிறார். அவரது கருத்துப்படி ஆதிதிராவிடர்கள் (பறையர்), மள்ளர் (பள்ளர்) என்ற இரு சமூகத்தினரும் தான் மாவட்டத்தின் பூர்வீக குடிகள். இம்முடிவுக்கு வருவதற்கு அவர் கூறும் காரணம் இதுதான்:

இம்மாவட்டத்தின் பல்வேறு சாதியினரிடையே இடம்பெயர்ந்து வந்தது குறித்த பாரம்பரியச் செய்திகள் உள்ளன. ஆனால் இவ்விரு சாதியினரிடமும் இடப் பெயர்ச்சி குறித்த செய்தி எதுவுமில்லை.

தாமிரவருணிஆறு

இதன் தொடர்ச்சியாக இதே மாவட்டத்தில் உற்பத்தியாகி இதே மாவட்டத்தில் கடலில் கலந்து வந்த பொருநை ஆறு குறித்துச் சற்று விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் உற்பத்தி குறித்த புராண, இலக்கியச் செய்தி களையும், கிரேக்க நாட்டவரின் பதிவுகளையும், இதில் கலக்கும் சிற்றாறு குறித்தும் விவரித்துள்ளார் (மேலது 5-11).

பாண்டிய மன்னர்கள்

பாண்டியர் என்ற பெயரின் மூலம் குறித்தும், அவர்களது பட்டங்கள் குறித்தும் சிங்களவர்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவு குறித்தும் விளக்கி யுள்ளார் (மேலது 12-15). பாண்டியர்கள் குறித்த கிரேக்கப்பதிவையும், ரோம் நாட்டை ஆண்ட அகஸ்ட்டஸ் சீசருக்குத் தூதனுப்பிய இந்திய மன்னன் போரஸ் (புருசோத்தமன்) அல்லன் பாண்டிய மன்னனே என்றும் கூறுகிறார் (மேலது 16-17).

கொற்கை

பாண்டியர் காலத்தில் சிறப்புற விளங்கிய துறைமுகம் கொற்கை. இப்பகுதியில் கிடைத்த முத்துக்கள் சிறப்பாகக் கருதப்பட்டன. கொற்கைத் துறைமுகம் குறித்த கிரேக்கர்களின் எழுத்துப்பதிவை, குறிப்பாக தாலமியின் எழுத்துப்பதிவை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.
அவரது கருத்துப்படி தற்போது கடலில் இருந்து விலகி உள்நாட்டுப் பகுதியாக இருக்கும் கொற்கை, முன்னர் கடற்பகுதியாக இருந்துள்ளது. கடல் உள் வாங்கிச் சென்ற பிறகு மத்திய காலத்தில்

காயல் துறை முகமாக மாறியது. இச்செய்திகளையடுத்து குமரித்துறை பாம்பன் ஆகியன குறித்த செய்திகளுடன் முதல் இயல் முடிகிறது.

* * *

இரண்டாவது இயலில் பாண்டிய நாட்டின் எல்லைகள் தொடங்கி, பாண்டிய மன்னர்கள், பாண்டியர், சோழர் முரண், சோழபாண்டியர் என்ற பரம்பரை, சுந்தரபாண்டியனுக்கும் இஸ்லாமியருக்கும் இடையிலான உறவு, தகியுடின், சிராஜிதன், நிஜாமுதின் என்ற இஸ்லாமியர்கள் அவனது அமைச்சர்களாக இருந்தமை ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மாலிக்காபூரின் படையெடுப்பு குறித்தும் குறிப்பிடப் பட்டுள்ளது. மார்க்கோ போலோ குறிப்பிடும் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனே என்பது அவரது கருத் தாகும்.

சுந்தர பாண்டியனின் காலம் குறித்துச் சிக்கல் உள்ளதாகக் கூறும் அவர் கூன் பாண்டியன் எனப்படும் பாண்டிய மன்னனையும் சுந்தர பாண்டியனையும் ஒன்றாகக் கருதுகிறார் (பக்கம் 35). அவரது இக்கருத்து தவறானது. நின்ற சீர் நெடுமாறன் பாண்டிய மன்னனே கூன் பாண்டியனாவான். சுந்தர பாண்டியன் காலத்தால் இவனுக்குப் பிந்தியவன். கி.பி.பத்தாம் நூற்றாண்டில் இருந்துதான் பாண்டியர் கல்வெட்டுக்களில் சுந்தர பாண்டியன் என்ற பெயர் இடம்பெறுவதாகத் தொல்லியல் ஆய்வாளர் வேதாச்சலம் உரையாடலின் போது குறிப்பிட்டார்.

மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகளில் இருந்து காயல் துறைமுகம் தொடர்பான விரிவான மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் வாயிலாக அப்போதைய காயல் நகரம், அங்கு நிகழ்ந்த வணிகம் குறிப்பாகக் குதிரைவணிகம், முத்துக்குளிப்பு நிகழ்ந்த முறை ஆகியன குறித்த விரிவான செய்திகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

இப்பகுதியில் அவர் மேற்கொண்ட கள ஆய்வில் சீன, அரேபிய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன (பக்: 4). விசயநகரப் பேரரசின் ஆட்சி குறித்த செய்திகளும் இவ்வியலில் இடம்பெற்றுள்ளன.

* * *

மூன்றாவது இயலில் பிற்காலப் பாண்டியர் மற்றும் நாயக்கர் ஆட்சிக்காலம் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தென்பகுதியில் வலுப்பெற்றிருந்த பாளையக்காரர் முறை குறித்து நெல்சன் என்ற ஆங்கில அதிகாரி எழுதியது விரிவான மேற்கோளாக இடம் பெற்றுள்ளது (இதன் தொடர்ச்சி போன்று பாளையக் காரரின் செயல்பாடு நான்காவது இயலில் விரிவாக எழுதப்பட்டுள்ளது).

இவ்வியலில் நாயக்க மன்னரின் ஆட்சி குறித்த கால்டுவெல்லின் மதிப்பீடு பின்வருமாறு அமைந்துள்ளது:

முந்தைய அரச பரம்பரைகளைவிட நாயக்கர் ஆட்சி மோசமானது என்று கருதக் காரணங்கள் இல்லை. நாயக்கர்களுக்கு முன்பு ஆட்சி செய்தவர்களான பாண்டியரையும் சோழரையும் சிறந்த ஆட்சியாளர் என்று கருதமுடியாது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் சாலைகள் இல்லை. இருபுறமும் மரங்கள் கொண்ட பாதைகள்தான் சாலைகளாக இருந்தன. பாலங்களும் இல்லை. தலைநகரில் மட்டுமே நீதிபதிகள் இருந்தனர். அரசர்களே நீதிபதியாகச் செயல்பட்டனர். இவர்களுக்குப் பிராமணர்கள் ஆலோசகர்களாகச் செயல்பட்டனர். வாணிபத் திற்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லை. பொருள் சேர்த்த வணிகர்கள் தம் பொருள் வளத்தை வெளியே காட்டத் துணியவில்லை. மருத்துவ மனைகள் இல்லை. மன்னரின் விருப்பம் அல்லது இறுக்கமான மரபு, சாதி யழுங்குகள் ஆகியன வற்றைக் கொண்டே வழக்குகளும் சிக்கல்களும் தீர்த்துவைக்கப்பட்டன. தம் முன்னோரைவிடச் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வாழமுடியும் என்று எண்ணவில்லை, அதற்கான முயற்சியும் செய்யவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி உருவாகும் வரை பொது மக்களின் வாழ்க்கையை உயர்த்த எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. பொதுப்பணியாக நீர்ப்பாசன முறை மட்டுமே பரவலாகச் செயல்படுத்தப் பட்டது. மிக விரைவாகவும் பரவலாகவும் மேற் கொள்ளப்பட்ட இப்பணியை முன்னெடுத்துச் செய்தோர் மன்னர் அல்லர் மக்கள்தான். முக்கியமான ஆறுகளுக்குக் குறுக்கே, குறிப்பாக தாமிரவருணியின் அணைகள் கட்டப்பட்டன. நிலப்பகுதி எங்கும் குளங்கள் இருந்தன (கால்டுவெல்: 63).

கால்டுவெல்லின் இம்மதிப்பீட்டில் ஓரளவு உண்மை இருந்தாலும் அவரது அய்ரோப்பிய இனமையவாதச் சிந்தனையின் தாக்கம் மேலோங்கியுள்ளது. அய்ரோப் பாவை ஆண்ட மன்னர் ஆட்சிக் காலமும் இத்தகைய நிலையில்தான் இருந்துள்ளது. மதகுருக்கள், அவர்கள் நடத்திய சமய நீதிமன்றங்கள், வழங்கிய தண்டனைகள், நிலப்பிரபுக்கள் கொண்டிருந்த முதலிரவு உரிமை, குடியானவர்களின் அவலநிலை எனப் பல இருண்ட பக்கங்கள் அய்ரோப்பிய வரலாற்றிலும் உண்டு. இவை யெல்லாம், நாடு, மொழி, மதம் என்ற எல்லைகளைத் தாண்டி நிலஉடைமைச் சமூகத்தின் நடைமுறைச் செயல்பாடுதான் என்ற உண்மையை அவர் உணரத் தவறிவிட்டார் என்றே கூறுதல் வேண்டும்.

அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டுகள் குறித்து எழுதியுள்ளார். இங்குள்ள எட்டு அணைக்கட்டுகளில் ஏழு அணைக்கட்டுகள் ஆங்கில ஆட்சிக்கு முன்னரே கட்டப்பட்டவை என்ற உண்மையைப் பதிவு செய்துள்ளார்.

தாமிரவருணி ஆற்றின் கனடியன் அணைக்கட்டு தொடர்பாக, சங்குண்ணி மேனன், தமது 'திருவிதாங்கூர் வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள செப்பேட்டுச் செய்தியை விரிவான மேற்கோளாகக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

போர்ச்சுக்கீசியர், 16ஆம் நூற்றாண்டில் இம் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் நிலைகொண்டு செயல்பட்டமை குறித்தும், தூத்துக்குடி நகர் குறித்தும், போர்ச்சுக்கீசியரை அடுத்து டச் ஆதிக்கம் உருவானது குறித்தும் குறிப்பிட்டுள்ளார். முத்துக்குளித்தல் தொடர் பாக மார்ட்டின் என்பவர் எழுதிய செய்திகளும் பருத்தி ஆலைகள் உருவானமை குறித்த செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

* * *

நான்காவது இயலும் அய்ந்தாவது இயலும் நெருக்கமான தொடர்புடையவை.

ஆற்காடு நவாப்பின் ஆட்சியின் கீழ் இம்மாவட்டம் வருதல், கம்மந்தான் கான்சாகிப் என்றழைக்கப்பட்ட முகமது யூசப்கான், இப்பகுதியை, தன் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரல், அவனது

கட்டுப் பாட்டிற்குள் இருந்த மதுரையை ஆங்கிலேயர் கைப் பற்றல், அவனது மரணம் ஆகியன இவ்வியல்களில் இடம்பெற்றுள்ளன.

* * *

நவாபிடமிருந்து வரிவாங்கும் உரிமையைப் பெற்றிருந்த ஆ.கி.கம்பெனி தன்னை இப்பகுதியில் நிலைநிறுத்திக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள், பாளையக்காரர்களுடன் இது தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகளும் மோதல்களும், 1771 இல் திருநெல் வேலி கச்சேரி (அரசு அலுவலகம்) கொளுத்தப்பட்டு ஆவணங்கள் எரிந்துபோனமை என 1764 தொடங்கி 1799 முடிய இப்பகுதியில் ஆங்கிலேய கம்பெனியை மையமாகக் கொண்ட நிகழ்வுகள் ஆறாவது இயலில் இடம்பெற்றுள்ளன.

பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரில் இடம்பெறும் பாஞ்சா என்ற சொல் பாரதக் கதையின் கதாபாத்திரமான பாஞ்சலியை மையமாகக் கொண்டு உருவானதாகக் குறிப்பிடுகிறார். இது செவிவழிச் செய்தியை அடிப்படை யாகக் கொண்டது.

மாவட்ட நிர்வாகியை மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற தமிழ்ச் சொல்லால் இன்று அழைக்கிறோம். இதற்கு இணையாக ஆங்கில ஆட்சியில் பயன்படுத்தப் பட்ட சொல் ‘கலெக்டர்’ என்பதாகும்.

நிலவரியே ஆங்கிலேய கம்பெனியின் அடிப்படை வருவாய் இனமாக இருந்தமையால் குறிப்பிட்ட மாவட்டத்தில் அதை வாங்குபவர் (வசூலிப்பவர்) என்ற பொருளைத் தரும் கலெக்டர் என்ற சொல்லால் அழைக்கப்பட்டார். இன்று அவரது பணியின் தன்மை மாறியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் கலெக்டராக, ஜியார்ஜ் புரோக்டர் என்பவர் நியமிக்கப்பட்டார். வரி வாங்கும் தன் வேலையை இவர் செய்ய முயன்றபோது பாளையக்காரர்கள் சிலருடன் முரண்பாடு தோன்றியது. இவர்களில் புலித்தேவரும், கட்டபொம்மனும் முக்கிய மானவர்கள். இச்செய்திகளையும் இவ்வியல் குறிப்பிடுகிறது.

* * *

ஏழாவது இயலின் முக்கிய செய்தியாக அமைவது மேஜர் பானர்மேன் தலைமையிலான ஆ.கி.கம்பெனிப் படைக்கும் கட்டபொம்மனுக்கும் இடையில் 1799 இல் நடந்த சண்டையாகும்.

இச்சண்டையின் தொடக்கம் குறித்த வரலாற்றுப் பின்புலத்தை கி.பி.1781 இல் இருந்து கால்டுவெல் அறிமுகப்படுத்துகிறார். இவ்வியலில் ஆ.கி.கம்பெனியின் மூல ஆவணங்களை வரிபிறழாது அவர் மேற்கோளாகக் கொடுத்துள்ளார், இது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். திருநெல்வேலியில் ஆட்சித்தலைவர்களாக இருந்த ஜாக்சன், லூசிங்டன், சென்னையில் இருந்த வருவாய்த் துறை வாரியத்தின் உயர் அதிகாரிகள் பாஞ்சாலங் குறிச்சிப் போரை நடத்திய மேஜர் பானர்மேன் ஆகியோருக்கு இடையிலான கடிதப்போக்குவரத்து, சென்னையின் ஆளுநராக இருந்த கிளைவ் அனுப்பிய பிரகடனம் என்பன குறிப்பிடத்தக்க ஆவணங்கள். பாஞ்சாலக்குறிச்சிப் போரை 1799 இல் நடத்திய மேஜர் பானர்மேன் சென்னை அரசின் செயலருக்கு எழுதிய கடிதத்தில் கட்டபொம்மனின் அமைச்சரையும், கட்ட பொம்மனையும் பிடித்துத் தூக்கிலிட்டது குறித்து எழுதியுள்ளான். அது வருமாறு:

சுப்பிரமணிய பிள்ளையைக் கைதியாக என் கூடாரத்திற்குக் கொண்டுவந்தனர். இவரைக் கொண்டு வந்த எட்டையபுரத்து ஆட்களுக்கு நல்ல வெகுமதி தர உத்தரவிட்டேன். மேலும் நாகலாபுரத்தில் பலரும் கூடுமிடத்தில் சுப்பிர மணிய பிள்ளையைத் தூக்கிலிட்டு, பின் அவர் தலையைக் கொய்து, அதை ஈட்டியில் சொருகி பஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குக் கொண்டு வந்து பொதுஇடத்தில் வைக்கும்படி கூறினேன் (கால்டுவெல்: 185).

அரசின் ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் செயல்பட்ட இம்மனிதனுக்கு வழங்கப்படும் கடுமையான தண்டனை ஏனையோருக்கு ஒருபாடமாக இருக்கவேண்டுமென்று எண்ணிச் செயல்பட்டுள்ளேன். (மேலது).

* * *

நேற்று விசாரணையின்போது, கூடியிருந்தோர் முன்பாக இப்பாளையக்காரர் (கட்டபொம்மன்) மிக அற்பத்தனமாகவும் திமிராகவும் நடந்து கொண்டார் என்பதை இங்கே குறிப்பிடுவதில் தவறில்லை. இவரைக் கைது செய்ய உதவிய எட்டையபுரம், சிவகிரிப் பாளையக்காரர்களை வெறுப்புடனும் கோபமாகவும் அடிக்கடி நோக்கினார். தூக்கிலிடுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டபோது செருக்குடனும் வீரமாகவும் நடந்து சென்றார்.

வலது புறத்திலும் இடது புறத்திலும் நின்றிருந்த பாளையக்காரர்களை இழிவாக நோக்கினார்.

எட்டாவது இயல் 1801 இல் ஊமைத்துரை நடத்திய இரண்டாம் பாஞ்சாலங்குறிச்சிப் போரைக் குறிப்பிடு கிறது. இப்போரை நடத்திய கர்னல் வெல்சின் குறிப்பு களை இவர் பயன்படுத்தியுள்ளார்.

ஆங்கிலேயர்களுடன் தமிழ்க் கிறித்தவர்களையும் இணைத்து நோக்கி அவர்களுக்குப் பாளையக்காரர்கள் இழைத்த கொடுமைகளும் இவ்வியலில் இடம் பெற்றுள்ளன.

காயம்பட்ட ஊமைத்துரையைப் படைவீரன் ஒருவனின் தாய் காப்பாற்றிய வரலாற்றை வெல்சின் நாட் குறிப்பில் இருந்து மேற்கோளாகக் காட்டியுள்ளார். முதற் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் மாண்ட ஆங்கிலப் படை யினரின் கல்லறைகள் ஒட்டப்பிடாரத்திலும், இரண்டாம் பாஞ்சாலக்குறிச்சிப்போரில் இறந்து போனவர்களின் கல்லறைகள் பாஞ்சாலங்குறிச்சியிலும் உள்ளன. இக்கல்லறைகளில் இடம்பெற்றுள்ள கல்லறை வாசகங்களையும் குறிப்பிட்டுள்ளார். நமசிவாயம் என்பவர் எழுதிய 'பாஞ்சாலங்குறிச்சி சிந்து' என்ற நூல் குறித்து கீரன் பாரதியார் எழுதியுள்ளதையும் 'வெற்றி காண்டம்' என்ற தலைப்பில் அதில் இடம்பெற்றுள்ள செய்தியையும் எடுத்தாண்டுள்ளார்.

* * *

ஒன்பதாவது இயல் சிவகங்கை, காளையர்கோவில் பகுதியில் மருது சகோதரர்களுடன் நடத்திய யுத்தத்தைக் குறிப்பிடுகிறது. மாநில ஆளுநரின் உத்தரவின் அடிப் படையில் லெப்டினன்ட் கர்னல் ஆக்னியூ வெளியிட்ட பிரகடனம் ஒன்று அப்படியே இவ்வியலில் இடம் பெற்றுள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் 1801 வரை நிகழ்ந்த பாளையக்காரர்களுடனான போராட்டத்தில் வெற்றி பெற்ற பின் ஆ.கி.கம்பெனி தன்னை நிலைநிறுத்திக் கொண்டதுடன் இவ்வியல் முடிவடைகிறது. இவ்வாறு நிலைபெற்ற ஆ.கி.கம்பெனி ஆட்சியை, 'நல்லாட்சி' என்று குறிப்பிடும் கால்டுவெல் இது தொடர்பாக மேலும் கூறுவது வருமாறு:

அன்பான இந்த ஆட்சி இம்மக்களுக்கு அனைத்து இக்கட்டுகளிலும் உதவியாக இருந்துள்ளது. இவர்களை இவர்களே ஆட்சி செய்யக் கற்றுக் கொடுத்துள்ளது. முன்பிருந்த ஆட்சிகளைவிட இந்த ஆட்சியே சிறந்தது. ஒரு சில மக்களை மட்டுமே உயர்த்தாமல் அனைத்து மக்களையும் உயர்த்தியுள்ளது. இம்மாவட்ட மக்கள் நிம்மதி யாகவும் மனநிறைவுடனும் வாழ்கின்றனர். ஏறத்தாழ பதினேழு இலட்சம் மக்களைப் பத்து ஆங்கிலேயரே கொண்ட நிர்வாகம் ஆட்சி செய்வது என்னே வியப்பு! இப்பதினேழு இலட்சம் மக்கள் பத்து அய்ரோப்பியருக்குக் கட்டுப்பட்டு பணிந்து வாழ்வது அதிசயமான ஒன்று. இந்த ஆட்சியை இம்மக்கள் முணுமுணுப் பின்றி முழு மனதுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிலைபெற்றிருந்த ஆங்கில ஆட்சி குறித்த இம்மதிப்பீடு காலனிய ஆதரவுப் போக்கின் வெளிப்பாடுதான். ஆனாலும் மேட்டிமை சாதியினரின் ஆதிக்கம் என்ற சமூக யதார்த்தம் இம்மதிப்பீட்டை முழுமையாக மறுக்க விடாது செய்து விடுகிறது. நூலின் இறுதி இயலான பத்தாவது இயல் இம்மாவட்டத்தில் கத்தோலிக்கக் கிறித்தவமும், சீர்திருத்தக் கிறித்தவமும் பரவிய வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. காமநாயக்கன் பட்டி என்ற ஊரில் உள்ள கத்தோலிக்க ஆலயத்தில் இடம்பெற்றுள்ள கல்வெட்டு ஒன்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கால்டுவெல் வாழ்ந்த காலத்தில் மேற்கூறிய இரு கிறித்தவப் பிரிவுகளுக்கும் இடையே நிலவிய இணக்க மின்மை இப்பகுதியில் வெளிப்படுகிறது. கத்தோலிக்கக் குரு மார்ட்டின் 1700 இல் எழுதியுள்ள குறிப்புக்கு மாறான நிலை 1660 இல் இப்பகுதியில் நிலவியதாகச் சீர்திருத்த சபைக் குருவான பால்தூஸ் என்பவரின் குறிப்பைத் துணையாகக் கொண்டு குறிப்பிடுகிறார். டச் நாட்டினர் தமக்கென்று கட்டியதாக அவர் குறிப்பிடும் தேவாலயத்தில் கத்தோலிக்கப் பெண்ணின் கல்லறை வாசகம் அடங்கிய கல்வெட்டு இடம்பெற்றுள்ளதை அவர் குறிப்பிடவில்லை. கத்தோலிக்கர்களுக்கு உரிய வழிபாட்டுத்தலம் கைப்பற்றப்பட்டதற்குச் சான்றாக இக்கல்வெட்டைக் கருதமுடியும். நூலின் இறுதியில் அய்ந்து பின்இணைப்புகள் இடம்பெற்றுள்ளன.

முதல் பின்இணைப்பு திருவிதாங்கூருக்கும் திரு நெல்வேலிக்குமான உறவு குறித்தது. இரண்டாவது பின் இணைப்பு இம்மாவட்டத்தில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கு மற்றும் தொற்றுக்காய்ச்சல் குறித்தது.

மூன்றாவது பின்இணைப்பு இப்பகுதியின் எழுத்தாளர் களான அகத்தியர், நம்மாழ்வார், பரிமேலழகர் ஆகி யோரைக் குறித்தும் இலக்கியத் தொடர்புடைய சில ஊர்கள் குறித்தும் குறிப்பிடுகிறது. நான்காவது பின் இணைப்பு தொல்லியல் சான்றுகளாகக் கிடைத்த தாழிகளைக் குறிப்பிடுகிறது. அய்ந்தாவது பின்இணைப்பு கொற்கையிலும் காயலிலும் நிகழ்த்திய அகழ் ஆய்வுகளைக் குறித்தும் அதில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் குறித்தும் விவரிக்கிறது. தனி மனிதராகக் கொற்கையிலும் காயலிலும் அகழ்வாராய்ச்சியை அவர் மேற்கொண்டுள்ளதை இப்பின்னிணைப்பு வாயிலாக அறியும்போது வியப்படைய நேருகிறது.

* * *

நூலின் சிறப்பு

கிறித்தவ மறைப்பணியாளர் ஒருவர் தம் மறைப் பணிகளுக்கிடையில் பல்வேறு அறிவுத்துறைச் சான்று களைத் திரட்டி ஆய்வு செய்து ஒரு மாவட்டத்தைக் குறித்த வரலாற்று நூலொன்றை எழுதியது குறிப்பிடத் தக்க ஒன்றுதான்.

அய்ரோப்பிய மறைப்பணியாளர் என்ற முறையில் காலனிய ஆட்சியை விமர்சிக்கும் தன்மை இல்லாமல் போனதும் இன்று நமக்குக் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகள் அவர் காலத்தில் கிட்டாமையாலும் வெளியாகாமையாலும் ‘சமூக வரலாறு’ என்ற வரலாற்று வகைமை வளர்ச்சியுறாமையாலும் அவரது நூலில் சில குறைபாடுகள் இடம்பெற்றுள்ளன. அவர் இந்நூலை எழுதிய காலத்திய சமூகச் சூழலை மனதில் கொண்டால் இந்நூலைக் குறை கூறி எளிதாக ஒதுக்கிவிடமுடியாது.

இன்று வட்டார அளவிலான வரலாற்று வரைவு குறித்தும், பல்துறைச் சங்கம ஆய்வுமுறை குறித்தும் பேசுகிறோம். ஆனால் இச்சிந்தனைப் போக்கு வளர்ச்சி பெறும் முன்பே கால்டுவெல் தமது திருநெல்வேலி மாவட்ட வரலாற்றை, பல அறிவுத் துறைச் சான்றுகளின் துணையுடன் எழுதியுள்ளது பாராட்டுதலுக்குரிய ஒன்று. இந்நூலை அடியற்றியே குருகுகதாசப் பிள்ளை (எட்டையபுரம்) என்பவர் ‘திருநெல்வேலி சீமைச் சரித்திரம்’ என்ற தமிழ் நூலை எழுதியுள்ளார்.

தமது ‘இராபர்ட் கால்டுவெல்’ என்ற நூலில் கிறித்தவ மறைத்தள வரலாற்றறிஞர் ஆர்.இ.பிரிகன் பெர்க் இந்நூல் குறித்து ‘தொல்லியல்,

கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல் அவரது மிகச் சிறந்த முழுமையான படைப்பு' என்று கூறியுள்ளது (வின்செண்ட் குமாரதாஸ் 2008) பொருத்தமான மதிப்பீடாகும். இன்று இந்நூல் ஒளிநகல் பதிப்பாக அச்சிடப்பட்டு விற்பனையில் உள்ளது. இது இந்நூலைப் பலரும் இன்று வாசிக்கத் துணைபுரிகிறது என்பது உண்மையே.

என்றாலும், வரைபடங்கள், புகைப்படங்கள், இன்று கிடைத்துள்ள புதிய தொல்லியல், வரலாற்றுச் சான்றுகளின் துணையுடன் செம்பதிப்பு ஒன்று ஆங்கிலத்தில் மட்டுமின்றித் தமிழிலும் வெளிவருவது அவசியமான ஒன்று. கால்டுவெல்லின் வரலாற்றை நல்ல முறையில் எழுதியுள்ள பேராசிரியர் வின்செண்ட் குமாரதாஸ் போன்றோர் இம்முயற்சியில் ஈடுபடுவது அவசியமான ஒன்று. கால்டுவெல்லின் இருநூறாவது பிறந்த நாள் விழாவின் தொடர்ச்சியாக இப்பணி நிறை வேறினால் அது அவரது புகழை மேலும் நிலைத்திருக்கச் செய்யும் வழிமுறையாக அமையும்.

இடையன்குடி தமிழ் இடையன்
கால்ட்வெல் பிறந்த நாள்

https://stanelyrajan.wordpress.com/2018/05/07/%E0%AE%87%E0%AE%9F%E0%AF%88%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9F%E0%AE%BF-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D-%E0%AE%87%E0%AE%9F%E0%AF%88%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D/

தமிழுக்கு தொண்டு செய்த வரிசையில் தமிழர்கள் மட்டும் அல்ல, பலநாட்டு அறிஞர்களும் பேருதவி புரிந்துள்ளனர், மறக்க முடியாதவர்கள் அவர்கள்.
அலெக்ஸாண்டர் காலத்திலே அவர்கள் அடைய துடித்த இந்தியா பின்னாளில் பிரிட்டிசார் காலத்திலே முழுக்க சாத்தியமாயிற்று, ஏராளமான ஐரோப்பியர் குவிந்து அவர்களுக்கு தேவையானதை தேடினர்.
வியாபாரிகள், பேராசைக்காரர் ஒருபுறம், ஆன்மீகத்தை தேடியோர் இன்னொரு புறம், இங்கு தாழகிடந்தவர்களை உயர்த்த வந்தோர் ஒருபுறம் ஏராளமானோர் வந்தனர்.
இங்கிருக்கும் மொழிகளை கற்று அவற்றில் ஏதும் அறிவுசெல்வம் இருக்குமா என தேடி வந்தோரும் உண்டு, அவர்களில் ஒருவர்தான் கால்டுவெல்.

அவருக்கு அப்பொழுது இருபது வயது, அயர்லாந்துக்காரர் நிச்சயம் சமயபணிக்காகத்தான் வந்தார், கப்பலில் வரும்பொழுதே தெலுங்கு தெரிந்த ஒருவருடன் பழகினார். அப்பொழுதே தென்னக மொழிகளின் மீது அவருக்கு ஈர்ப்பு வந்தது.

சென்னைக்கு வர 4 மாதம் ஆகும் நிலையில் கப்பலிலே தெலுங்கும், சமஸ்கிருதமும் ஓரளவு கற்றுகொண்டார், சென்னையில் இறங்கும்பொழுதே அவர் தெலுங்கு பேச படித்திருந்தார்.
சென்னையில் இறங்கினார், அங்கே துருவர் என்ப அறிஞரிடம் தமிழ்கற்றார், தமிழை அவர் கசடற கற்றது அங்குதான்ஒருவருடம் மொழி படித்துவிட்டு, தமிழகத்தை படிக்க கிளம்பினார். தமிழகத்தை நடந்தே சுற்றினார் கால்டுவெல் சென்னையிலிருந்து திருச்சி , தஞ்சை என நடந்தார். சிதம்பரம் தஞ்சை கோயில்களை தரிசித்தார், பின் கோவைக்கு நடந்தார். அதன் பின்பே பாளையங்கோட்டை வந்தார்.

தமிழகத்தை நடந்தே சுற்றியதால் அவருக்கு தமிழ்நாடும் புரிந்தது, தமிழும் புரிந்தது.அக்கால போதகர்கள் எல்லாம் பால் தினகரன் போல கோட் சூட் போட்டு ஏசி அறையில் போதிப்பவர்கள் அல்ல, வேகாத வெயிலில் அலைந்து வறிய கிராமங்களில் குடிசையில் வாழ்ந்தவர்கள்
அப்படி கால்டுவெல்லும் இடையன்குடி எனும் தேரிகாட்டு கிராமத்தில் பனைமரங்கள் புடைசூழ்ந்த பகுதியில் குடியேறினார், அங்கிருந்தே கல்விபணி, சமயபணி எல்லாம் செய்தார். ஒரு ஆலயம் அமைத்தார் மிக அழகான ஆலயம் அது, அதனைவிட மகா முக்கியமானது அவர் ஆரம்பித்தபள்ளி.

அங்கிருந்துதான் தமிழின் அனைத்து பண்டைய நூல்களையும் கற்றார், அன்று அவை அச்சுக்கு கூட வரவில்லை சகலமும் ஓலை சுவடியே
அதனிலிருந்து கவனம் கவனமாக படித்து தன் முடிவுகளை அவர் ஒவ்வொன்றாக சொல்ல ஆரம்பித்தார், அது பின் நூலாகவும் வந்தது
அவர் சொன்னது இதுதான் , தமிழ் உலகின் ஆதிமொழி தனித்துவமான மொழி. முதல் 6 பண்டைய மொழிகளில் ஒன்றுதெலுங்கு, கன்னடம், மலையாளம் , துளு எல்லாம் இந்த தமிழினின்றும் பிற மொழிகளின் கலவையிலும் உருவானவையே.

இப்படி அவர் தன் ஆய்வு முடிவுகளை எழுதிய நூல்தான் “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணக்கணம்” தமிழின் சிறப்பினை கூறும் மிக சிறந்த புத்தகம் அது, பின்னாளைய தேவநேயபாவணார் அதனைத்தான் தன் மேற்கோளாக கொண்டார்.

கடற்கரையெங்கும் சுற்றியிருக்கின்றார், இடையன்குடியின் அருகிலிருக்கும் உவரியின் பழமையினை பற்றி ஆய்வு செய்திருக்கின்றார், ஈழ தமிழருக்கும் தமிழருக்கும் உள்ள தொடர்புகளை பதிவு செய்திருக்கின்றார்

ஈழதமிழர்கள் தமிழகத்தின் நெல்லைபகுதியில் இருந்து சென்றவர்கள் என்பது அவரின் முடிவு. பல விஷயங்களில் நெல்லையருக்கும் யாழ்பாணத்தாருக்கும் ஒற்றுமை அதிகம்அங்கு காணபடும் திருநெல்வேலி, தாமிரபரணி போன்ற பெயர்களாகட்டும், சனிகிழமை பழக்கமாகட்டும், சொதி போன்ற உணவுகளாகட்டும் நெல்லைக்கும், யாழ்பாணத்திற்கும் தொடர்புகள் மிக அதிகம் அதனை முதன் முதலில் ஆய்வில் சொன்னவர் கால்டுவெல்தான்.

தமிழ் ஆராய்ச்சிகள் ஒருபக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் அன்றைய நெல்லை மாவட்டத்து அரசியலை அப்படியே டைரி போல எழுதி வைத்திருந்தார் அந்நூல்தான் “திருநெல்வேலியின் அரசியல் பொது வரலாறு” தமிழுக்காக வாழ்ந்த கால்டுவெல் நாகர்கோவிலை சேர்ந்த தமிழ்பெண்ணைத்தான் திருமணம் செய்தார், அவர் பெயர் எலிசா. இத்தம்பதிகள் இடையன்குடியில் சுமார் 50 ஆண்டுகாலம் சேவையாற்றி இருக்கின்றன.

அந்த பள்ளி மகா முக்கியமானது, இன்று இடையன் குடி மட்டுமல்ல அப்பகுதி மக்களே ஓரளவு நல்ல கல்வி பெற்றிருப்பதற்கு அப்பள்ளியே அடிப்படை. ஏவிடி நிறுவணர் ஏவி தாம்சன் போன்றோர் உருவாக அப்பள்ளிகொடுத்த கல்வி மகா அடிப்படை.கால்டுவெல் தமிழுக்கும், தென் பகுதி மக்களுக்கும் செய்திருக்கும் உதவி கொஞ்சமல்ல.

கொஞ்சநாளைக்கு முன்பு நாடார்களை அவர் ஏதோ எழுதிவிட்டார், அதனை பாடமாக்கிவிட்டார்கள் என சசிகலா புஷ்பா வரை குதித்தது நினைவிருக்கலாம்.அக்காலத்தில் புறக்கணிக்கபட்ட தேரிகாட்டிற்கு நாடார்கள் விரட்டபட்டிருந்தனர். நாயக்கர்கள் வளமான பகுதிகளில் ஆட்சி செலுத்த நாடார்கள் ஒதுக்கபட்டிருந்தனர். அவர்கள் விவசாயத்தை விட்டு பனைஏறுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்ட காலம் அது.

அப்பொழுது கண்ட நாடார்களை பற்றி சில குறிப்புகளை எழுதியிருந்தார், அது சிலரால் கொடூரமாக திரிக்கபட்டு பின் விவகாரமாயிற்று.
நாடார் மக்களோடு வாழ்ந்துகொண்டு அப்படி ஒரு வரியினை அவர் எழுதியிருக்க முடியாது, எழுதியிருந்தால் 50 ஆண்டுகாலம் அவரால் அக்கிராமத்தில் வசித்திருக்க முடியாது.

தமிழின் பெருமையினை ஆங்கிலத்தில் நூலாக எழுதி ஐரோப்பாவிற்கு அனுப்பினார், கிளாஸ்கோ பல்கலை கழகம் அவரை கொண்டாடியது,

அந்நாளைய சென்னை கவர்னர் நேப்பியர் நேரில் இடையன் குடி சென்று அவரை வாழ்த்தினார்.கிறிஸ்தவம் சம்பந்தமாக பல நூல்களை எழுதினார், அது அவரின் தொழில்முறை எனினும், தமிழுக்காக அவர் தனித்து எழுதிய புத்தகங்களில் அவரின் தமிழ்பற்று தெரிகின்றது.

மாந்தரின் தோற்றம் குமரிகண்டத்தில் தொடங்கி வடக்கு நோக்கி சென்றது, சிந்துவெளி மெசபடோமியா என அது வரவிற்று, தமிழர் என்பதே திராவிடர் என திரிந்தது என்றேல்லாம் முதன் முதலில் பதிந்தது கால்டுவெல்தான்
அந்த பாதையில்தான் தமிழரின் தொன்மை பற்றி புதுவேகம் தமிழகத்தில் பிறந்தது, பல தமிழறிஞர்கள் அவர் கருத்தை ஆதரித்தார்கள், "கல்தோன்றி மண்தோன்றா.." போன்ற வசனங்கள் அதன் பின்புதான் தொடங்கின.
அதாவது நாயக்கர் காலத்தில் தமிழ் தன் அடையாளங்களை இழக்க தொடங்கியிருந்தது, கல்வெட்டு தமிழை படிப்பவர் மிக குறைவு, பேச்சு தமிழ் மட்டும் வழக்கில் இருந்தது. பிராமணார் ஆதிக்கத்தில் அவர்கள் சொற்களும் கலந்திருந்தன.

தமிழகம் தன் அடையாளத்தை அறியாமல் தடுமாறியது, நாயக்கர்களும் நல்லாட்சிதான் நடத்தினர், குறை சொல்லமுடியாது, அவர்களின் சமயபணிகளும் நன்றிகுறியது.ஆனால் தமிழின் தொன்மை, அதன் அடையாளங்கள் எல்லாம் மறைந்துகொண்டிருந்தன, அதனை காக்கத்தான் யாருமில்லை உதாரணம் சொல்லவேண்டுமென்றால் தஞ்சை கோவிலை கட்டியதுயார் என்றே தெரியாது, பின்னாளில் ஒரு ஜெர்மானியன் தான் கல்வெட்டு படித்து அதனை கட்டியது ராஜராஜ சோழன் என சொன்னான்
அப்படி கால்டுவெல்லும் பின்னால் வந்து உலகிற்கே மூத்தமொழி தமிழ் என சொல்லி அதற்கு புத்தகமும் எழுதினான்.

மார்க்ஸின் புத்தகம் ஐரோப்பாவினை புரட்டியது போல, ஹிட்லரின் மெயின் கேம்ப் ஜெர்மனியினை அதிர செய்தது போல கால்டுவெல்லின் புத்தகமும் ஐரோப்பாவினை அதிர செய்தது
குறிப்பாக அந்த ஒரு வரி, எந்த வரி?

பைபிளை கசடற கற்றவன் கால்டுவெல், அதில் ஆதியாகம் அழகாக சொல்கின்றது, கடவுள் மண்ணில் மனிதனை படைத்து "நீ மண்ணில் இருந்து வந்ததால் மனிதன் எனப்படுவாய்" என்கின்றார்.இன்றும் ஆங்கிலத்தின் மனிதனின் பெயர் மண் என்பதுதான், மன் (men) அல்லது மேன் (Man) என சொல்லிகொள்வார்கள், உச்சரிப்புதான் வேறே தவிர. மணிதன் என்றால் அவர்கள் மொழியில் மண் தான்.

இதனை அழுத்தி சொன்னான் கால்டுவெல், ஆங்கிலத்தில் சாண்ட் என்றால் தமிழில் மண். கடவுள் மனிதனுக்கு மண் என பெயரிட்டார் என்றால் ஆதிகால மொழி தமிழாகவே இருந்திருக்க வேண்டும், அதுவேதான்

சமஸ்கிருதத்தில் அது மனு என்றாகின்றது, மண் என்பதன் திரிபு அது.
ஆக கடவுள் ஆதியாகமத்தில் சொன்னது உண்மையென்றால், ஆதிமனிதனின் மொழி தமிழே, கடவுளே மனிதனை மண் என் அழைத்ததைத்தான், ஆங்கிலத்தில் மன் என அழைக்கின்றோம் என குறிப்பிட்டிருந்தான்

ஆடிபோனது ஐரோப்பா, அதனை அங்கீகரிக்க படித்த அறிஞர்களுக்கு வியர்த்து கொட்டிற்று, இந்த வரிகள் உலகில் பல அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பதால் அவற்றை வெட்டிவிட்டார்கள்.இது கால்டுவெல் சம்பதத்தோடு நடந்ததா, இல்லையா என்பது தெரியவில்லை, இதுவும் பெரும் மூடி மறைக்கபட்ட வரலாற்று மோசடி. வெள்ளையர்கள் அங்கீகரித்த வரலாறு அப்படித்தான்.எப்படி இருந்தாலும் கால்டுவெல் என்பவர் மறக்க கூடியவர் அல்ல, தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டு பல தமிழர்கள் ஆற்றிய தொண்டிற்கு சற்றும் குறைந்தது அல்ல.

உவரி கோவிலுக்கு செல்லும் பொழுது அந்த இடையன் குடி ஊரினை கடந்துதான் செல்லவேண்டும், அப்பொழுதெல்லாம் இறங்கி அந்த ஆலயத்தில் அவர் புதைக்கபட்ட அந்த இடத்தில் கொஞ்சநேரம் அமர்ந்துவிட்டு வருவது வழக்கம்.அது கிறிஸ்தவ ஆலயம் என ஒதுக்கிவிட முடியாது, ஒரு மாபெரும் தமிழ்காதலன் உலாவி திரிந்த இடம் அது, அந்த பீடத்தினை கைகளால் தொட்டாலே ஒரு சிலிர்ப்பு ஓட்டிகொள்ளும்
அங்கிருப்பது எல்லாம் 18ம் நூற்றாண்டு பொருட்கள், அழகும் உறுதியும் வாய்ந்த பொக்கிஷங்கள் அவை.

அந்த ஆலயத்தை அடுத்துதான் அவன் வாழ்ந்த வீடும் உண்டு, முன்பு குடிசையில்தான் இருந்தாராம் பின் வோட்டு வீடாக மாறிற்றாம்.
அயர்லாந்தின் குளுகுளுவான பகுதியில் வாழ்ந்தவன், இங்கு வந்து இந்த வேகாத வெயிலில் என்னபாடு பட்டிருப்பான்? எப்படி அவனால் முடிந்தது?
அவனின் மனம் அவ்வளவு விசாலமாக இருந்திருக்கின்றது, எந்த சூழலையும் தாங்கும் பக்குவத்தை அது கொடுத்திருக்கின்றது, வெயிலையும் குளிரையும் ஒன்றாகவே கருதியிருக்கின்றான் அந்த உயர்ந்தவன்.

அந்த வீட்டினை அவரின் நினைவு இல்லமாக மாற்றியிருக்கின்றார்கள், அங்கிருந்துதான் அவன் தமிழை ஆராய்ந்திருக்கின்றான், அந்த ஒப்பற்ற நூலை எழுதியிருக்கின்றான் எனும்பொழுது தமிழனாக நன்றி கண்ணீர் கொட்டியது.

இன்று அவருக்கு பிறந்தநாள் நாள்

கிறிஸ்தவம் என்பது மைக் கட்டிகொண்டு இந்து தெய்வங்களை பழிப்பதோ இல்லை காளகேயர் போல தஸ்தா புஸ்தா என பரலோக பாஷை பேசுவதோ அல்லது டிவியில் கோட் சூட் போட்டு பாட்டுபடிப்பது அல்ல.

எங்கோ பிறந்து இன்னொரு நாட்டுக்கு வந்து அம்மக்களில் ஒருவனாகமாறி, அம்மக்களின் கலாச்சரத்தில் கலந்து அவர்களோடு வாழ்ந்து மரிப்பது நல்ல கிறிஸ்தவனான கால்டுவெல் அதனை செய்தார்.இங்கு அல்லேலூயா என கத்தும் ஒரு கிறிஸ்தவனை ஆப்ரிக்க பின் தங்கிய கிராமத்தில் சென்று, அவர்கள் மொழியினை கற்று, அவர்களுக்கு பள்ளி நடத்தி, அவர்கள் பெண்களில் ஒருவரை மணந்து அவர்களில் ஒருவராக வாழ்கின்றாயா? என கேளுங்கள்.

“அப்பாலே போ சாத்தானே, என்னை சோதிக்காதே ..” என்பார்கள். இவர்களுக்கு தெரிந்த கிறிஸ்துவம் என்ன? யாரையாவது சதா திட்டவேண்டும், யாருக்காவது சாபம் கொடுத்து கொண்டே இருக்கவேண்டும், அதன் பெயர் ஜெபம். இப்பொழுது வசமாக சிக்கியிருப்பவர் மோடி.ஏதோ மோடி அவர்கள் ஆலயத்தில் புகுந்து அவர்களி பைபிளை கிழித்து போட்டு, இவர்களை இழுத்து போட்டு சிலுவையால் அடிப்பது போல பலர் பேசிகொண்டிருக்கின்றான்.அவன் மோடியினை பார்க்கவேண்டாம், இந்த கால்டுவெல்லை பார்த்தால் போதும் தமிழ் , தமிழ் என கத்தி அரசியல் செய்பவர்களும் கால்டுவெல்லை பார்த்தால் பல விஷயங்கள் தோன்றும்.எங்கிருந்தோ வந்து தமிழுக்கு எவ்வளவு காரியங்களை சத்தமின்றி செய்திருக்கின்றான் அவன், இதில் 10ல் ஒரு பங்கேனும் இங்கு இருக்கும் தமிழுணர்வாளர்கள் செய்திருப்பார்களா என்றால் இல்லை.

இன்று அவனுக்கு பிறந்தநாள்

அந்த மாமனிதனுக்கு இடையன்குடியின் வசித்த தமிழ் இடையனுக்கு ஆழ்ந்த தமிழ் அஞ்சலி.

திருநெல்வேலி மாவட்ட ஆவணப்பதிவு

ஹெச்.ஆர்.பேட் ஐ.சி.எஸ்

[Tinneveli District Gazetteer By H.R.Pate I.C.S.]

https://www.jeyamohan.in/23/

திருநெல்வேலியைப்பற்றி அறிவதற்கான முதல் வரலாற்று நூலாக இருப்பது பிஷப் கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி சரித்திரம். 1916ல் சென்னை ஆளுனரின் ஆணைக்கேற்ப நெல்லை ஆட்சியர் ஹெச்.ஆர்.பேட் தொகுத்தெழுதிய திருநெல்வேலி மாவட்ட ஆவணப்பதிவு அதன் பின் வந்த நேர்த்தியான மொழியில் எழுதப்பட்ட தகவல் களஞ்சியம். நுட்பமான தகவல்கள் செறிவாக தொகுக்கப்பட்டு அழகிய நடையில் எழுதப்பப்பட்ட இந்நூலும் அக்கால ஆங்கில ஆட்சியாளருக்கு இருந்த நூலறிவு மொழிப்பயிற்சி ஆகியவற்றுக்குச் சான்றாகும். சுதந்திரத்துக்குப் பின் நம் ஆட்சியர்களில் மிகச்சிலரே நூல்களை எழுதியிருக்கிறார்கள் என்பதும் அந்நூல்களில் மிகச்சிலவே வாசிக்கத் தகுதி கொண்டவை என்றும் பார்க்கும்போது இப்போது ஆட்சியர் பணி என்பது ஒருவகை 'பெரிய குமாஸ்தா' பதவிதான் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஆங்கிலேயர் எழுதிய ஆவணக்குறிப்புகள் மற்றும் வரலாற்று நூல்கள் பொதுவாக கீழ்க்கண்ட சிறப்புகள் உடையவை. 1. தெளிவான செறிவான நடை 2. ஏராளமான தகவல்கள் 3. தகவல்களை பகுக்கவும் தொகுக்கவும் அறிவியல்நோக்கு சார்ந்த ஒரு அடிப்படைத்தளம் 4. பிரச்சார நோக்கம் இல்லாத பதிவுத்தன்மை. 5. பலதுறை அறிதல்களை தொகுக்கும் இயல்பு

அவை அனைத்துக்குமே கீழ்க்கண்ட குறைகளும் உண்டு 1. ஆதிக்க இனத்தின் நோக்கில் இந்தியாவை பார்ப்பதனால் உருவாகும் இயல்பான அலட்சியமும் புரிதல் குறைகளும் 2. மதக்காழ்ப்பும் மதக்காழ்ப்புள்ள பாதிரிமாரின் நூல்களை சார்ந்திருக்கும் தன்மையும் 3. இந்தியா போன்ற ஒரு பரந்த நாட்டின் பல்லினப் பலமொழி பலமதப் பண்பாட்டை எளிதில் பொதுமைப்படுத்திக்கொள்ளும் முயற்சி. இக்குறைகளை கவனத்தில்கொண்டபின்பு நாம் இவர்கள் அளிக்கும் தகவல்களை கணக்கில் கொண்டால்கூட நம்மைப்பற்றி நாம் அறிய மிகச்சிறந்த ஆவணங்கள் இவை.

மேலும் நாம் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பின் ஒரு பகுதியாக உருவாக்கிக் கொண்ட சுயபெருமிதம் சுதந்திரத்துக்குப் பின்பு ஒரு பெரும்போக்காக மாறி இப்போது நம்மைப்பற்றி பொய்யான கற்பிதங்களை உருவாக்கிக் கொள்ளும் மிகை வரலாறுகளை எந்தவித ஆவணப்பின்புலமும் இல்லாமல் எழுதிக்கொள்ளும் இடத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. பிரிட்டிஷ் ஆவணப்பதிவுகள் இந்நிலையில் ஒப்புநோக்க மேலும் சமநிலை கொண்ட வரலாற்றுக்குறிப்புகளாக

உள்ளன. நமது எம்பித்தாவல்களை சமன்படுத்தும் பின் எடைகளாக இவை அமையலாம்.

இன்னொரு முக்கியமான அம்சம் இரு உலகப்போர்களை ஒட்டி இந்தியாவில் உருவான தீவிர நவீனமயமாதலால் இந்தியாவின் முகம் மாறியது. சாலைகள் உருவாயின. பல தொழில்கள் பிறந்தன, மரபான தொழில்கள் அழிந்தன. ஏராளமான மரபுச்சின்னங்கள் அழிந்தன. இவ்வழிவுக்கு முந்திய சித்திரங்களை இந்நூல்கள் அளிக்கின்றன. உதாரணமாக இந்நூலில் ஹெச்.ஆர்.பேட் வள்ளியூர் , திருக்கணங்குடி, பணகுடி பகுதிகளில் பல கோட்டைகளின் இடிபாடுகள் இருந்ததாகச் சொல்கிறார். இவை பெரும்பாலும் மண்கோட்டைகள் அல்லது வெட்டுபாறையால் கட்டபட்டவை. கற்கோட்டைகள் மட்டுமே நவீனமயமாதலை தாண்டின. அவரது கணக்கெடுப்பில் வள்ளியூரிலும் சுற்றுப்புறங்களிலும் பற்பல இடிந்த சமணக்கோயில்கள் இருந்திருக்கின்றன. 1930களில் பிறந்த முதியவர்களுக்குக் கூட அவற்றை பார்த்த நினைவு இல்லை. அவ்வகையிலும் இந்நூல்கள் முக்கியமானவை

இந்த ஆங்கிலேயரின் குறைபாடுகளை வரலாற்று எழுத்தில் எழுதுபவனின் ஆளுமையும் ஆதிக்க நோக்கும் வெளிப்படும் தவிர்க்க இயலாத குறைகளாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் எழுதப்பட்ட சுதேசிய வரலாறுகளிலும் முறையே பிராமண வேளாள நோக்குகள் ஓங்கியிருந்தன என்று காணலாம். வெள்ளை அதிகாரிகளின் நோக்கில் உள்ள திரிபுகள் இயல்பாக நிகழ்பவை, திட்டமிட்டு செய்யப்படுபவை அல்ல என்றே சொல்ல வேண்டும். உதாரணம் ஹெச்.ஆர்.பேட் இந்நூலில் இந்துமதம் குறித்து எழுதும் பகுதிகள். நெல்லையில் சைவ வைணவ மதங்களைவிட மேலாக சிறுதெய்வ வழிபாடு ஓங்கியிருந்த சித்திரத்தை நேர்த்தியாக பதிவுசெய்கிறார். பெரும்பாலான ஆட்சியர்கள் அவர்களின் கோணத்தில் அக்காலத்தில் ஓங்கியிருந்த காலனிய நோக்கையும் மீறி அறிவியல் ரீதியாக செயல்பட்டிருப்பதாகவே எனக்குப் படுகிறது. ஹெச்.ஆர்.பேட்டின் இந்நூலும் அத்தகையது. மனோன்மணியம் பல்கலை 1993ல் இந்நூலை மறு பதிப்பு செய்துள்ளது.

**

ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் நில அமைப்பு குறித்த விரிவான சித்திரத்தை அளிக்கிறது முதல் அத்தியாயம். நெல்லை கனிவளத்தில் வளம் மிக்கதல்ல என்று சொல்லும் ஹெச்.ஆர்.பேட்

அதன் முக்கியமான நிலத்தனித்தன்மையாகச் சொல்வது கோயில்பட்டியை மையமாக்கிய பருத்திக்கான கரிசல் நிலத்தையே. பின்னர் அரசியல் வரலாறு. தொல்லியலாளர் புரூஸ் ·பூட் [Bruce Foote] 1883ல் சாயர்புரத்தில் ஒரு மேட்டு நிலத்தில் கற்கால பண்பாட்டின் தடையங்களை கண்டெடுத்ததையும், ஆதிச்சநல்லூர் ஆய்வுகளையும் குறிப்பிட்டு நெல்லை மண்ணின் தொன்மையை விவரித்து பேச ஆரம்பிக்கிறார். ஆதிச்சநல்லூர் ஆய்வுகள் பிற்பாடு ஆதிச்சநல்லூரைப்பற்றிய குறிப்புகளில் மிக விரிவாக அளிக்கப்படுகின்றன. இக்காலகட்டத்தில் திராவிட -ஆரிய வாதம் முன்வைக்கப்பட்டிருந்தபோதிலும்கூட இங்கு முதுமக்கள் தாழிகளில் புதைக்கப்பட்ட மக்கள் எவர், எந்த இனம் என்பதெல்லாம் மேலதிக ஆய்வுக்குப்பின்னரே வகுக்கப்பட இயலும் என்கிறார் ஹெச்.ஆர்.பேட் .

வழக்கம்போல பண்டைவரலாறு சுருக்கமாகவும் அதிக தகவல்கள் இல்லாமலும்தான் உள்ளது, ஆய்வுகள் பிற்பாடு தான் வளர்ந்தன. ஆனால் நாயக்கர் காலத்தில் உருவான பாளையப்பட்டுகள் எப்படி நெல்லை நிலத்தை பகுத்து ஆண்டன என்பதன் மிக விரிவான சித்திரமும் அவற்றுக்கிடையேயான பூசல்களின் ஏராளமான உள்தகவல்களும் இந்நூலில் உள்ளன. இப்பகுதி colleries என்றும் cullers என்றும் பாதிரிகளால் குறிப்பிடப்படும் கள்ளர்கள் மற்றும் தொட்டிய நாயக்கர்கள், கம்பளத்து நாயக்கர்கள் ஆகியோரின் சிறு சிறு படைகளால் தனித்தனி துண்டுகளாக ஆளப்பட்டன. சிவகிரி ,அழகாபுரி ஆகிய பாளையப்பட்டுகள் வன்னியர்களுக்குரியவை. பிரிட்டிஷார் நெல்லையில் காலெடுத்து வைக்கும்போது இந்த பாளையப்பட்டுகள் பலவாறாகபெருகி விட்டிருந்தன என்று ஹெச்.ஆர்.பேட் சொல்கிறார். அவரது நோக்கில் முதலில் நெல்லைக்கு வந்த வெள்ளைய அதிகாரி லெ·ப்டினெண்ட் இன்னிஸ் தான் [Lt.Innis]

பிரிட்டிஷ் அதிகாரியான ஓர்மே [Orme] எழுதிய ஒரு குறிப்பு எடுத்து தரப்படுகிறது " இப்பகுதியின் கள்ளர்கள் [திருநெல்வேலி மேற்கு] பொதுவாக மலைவாழ்மக்களில் காணப்படும் குரூபத்தையோ உருவப்பிழையோ கொண்டவர்கள் அல்ல. இவர்கள் உயரமான திடமான நல்ல தோற்றம் கொண்டவர்கள். அம்புகள் ஈட்டிகள் ஆகியவற்றை ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள். ஆண்கள் எப்போதும் வாளும் கேடயமும் தரித்திருக்கிறார்கள். இவர்கள் தீரமான போர்வீரர்கள். ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு ஏற்ப பல குழுக்களாக போரில் ஈடுபட்டாலும் கூட வேல்கம்பு

ஏந்தியவர்கள்தான் முக்கியமானவர்கள். அவர்களே போர்களில் முன்னேறித்தாக்குபவர்கள். பதினெட்டடி நீளம் வரை வரும் கூரிய ஆயுதம் இது. இதில் முனைக்கு கீழே செங்காவி நிறத்தில் குதிரைமுடியை கட்டியிருப்பார்கள். குதிரைகளைத் தாக்கும்போது அதில் சிறிய மணியையும் கட்டியிருப்பார்கள். முன்கூட்டிய தயாரிப்போ ஒத்திகையோ இல்லாமல் அவர்கள் ஒரு இறுக்கமான குழுவாக திரண்டுகொள்வார்கள். ஒருவரோடொருவர் ஒண்டிக் கொண்டபடி நிதானமான உறுதியான அடிகள் வைத்து வேல்கம்புகளை நீட்டியபடி முன்னேறுவார்கள். ஈட்டிகளை ஆட்டி மணியொலி எழுப்பி குதிரைகளை அச்சுறுத்தி கலையவைத்து தாக்குவார்கள். காலாள்படையை வேகமாக தாக்குவார்கள். பீரங்கிகளை எதிர்கொள்ளும் பயிற்சி இவர்களுக்கு இல்லை....”

நாயக்கராட்சியின் இறுதியில் சந்தா சாகிபின் படைகள் நெல்லையையும் அதன் வழியாக குமரியையும் சூறையாடிய சித்திரம் ஏராளமான தகவல்கள் வழியாகச் சொல்லப்படுகிறது. அதன் பின்னர் கட்டப்பொம்மு நாயக்கனும் பூலித்தேவனும் நடத்திய கலகங்களின் விரிவான சித்திரம் அளிக்கப்படுகிறது. கட்டப்பொம்மு நாயக்கரின் கலகம் நாம் நன்கறிந்த சிவாஜிகணேசனின் திரைப்படம் காட்டும் சித்திரத்துக்கு பலவகையிலும் வேருபட்டு இந்நூலில் காட்சியளிக்கிறது. கட்டபொம்மு நாயக்கருக்கு தேசியம் சார்ந்த புரிதலோ ஒரு நாட்டை அமைக்கும் நோக்கமோ இருந்ததாக தெரியவில்லை. பிற பாளையக்காரர்களைப்போல அவரும் மற்ற பாளையபப்ட்டுகளில் மக்களை கொள்ளையடிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். பிரிட்டிஷார் அவரை கட்டுப்படுத்தி கடுமையான கிஸ்தி போடுகிறார்கள். பொதுவாக பாளையக்காரர்களுக்கு போடப்பட்ட கிஸ்திக்கு எதிராக கடுமையான அதிருப்தி இருந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து லெ'ப்.ஜாக்ஸனிடம் வாதாடியபின் இறங்கிச்செல்லும் வழியில் கட்டப்பொம்மு நாயக்கர் அவரை தடுக்க முயன்ற ஆங்கில ஊழியர் கிளேர்க்கை கொன்று தப்பிச்செல்கிறார்.

கட்டபொம்மு நாயக்கருக்கு அவரைச் சுற்றியிருந்த மறவர், வன்னியர் பாளையக்காரர்கள் அனைவருமே எதிராக இருக்கிறார்கள். ஊத்துமலை ஜமீந்தாரும், சிவகிரி ஜமீந்தாரும் சுப்ரமணியபிள்ளை தலைமையில் தங்கள் நாடுகளில் கொள்ளையடிக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்காரர்களுக்கு எதிராக போராட வெள்ளையரை தங்கள் உதவிக்கு அழைக்கிறார்கள். இவர்களின் உதவிகொண்டு

கட்டப்பொம்மு நாயக்கர் ஒடுக்கப்படுகிறார். இதன் விரிவான தகவல்கள் இந்நூலில் அளிக்கப்படுகின்றன.

ஹெச்.ஆர்.பேட் டின் சித்தரிப்பில் நமக்குக் கிடைப்பது நாயக்கர் கால மைய ஆட்சி ஒழிந்து சுதந்திரம் பெற்ற பாளையப்பட்டுகள் எவ்விதமான நியதியுமில்லாமல் பரஸ்பரம் போரிட்டு மக்களைக் கொள்ளையடித்து அட்டூழியம் செய்த ஒரு சித்திரம். பல்வேறு நாட்டார் இலக்கியங்களும் இதை உறுதிசெய்கின்றன. இந்த அராஜகநிலையை பயன்படுத்திக்கொண்டு வெள்ளையர் காலூன்றுகின்றனர். அவர்கள் உருவாக்கிய உறுதியான நிர்வாகம் மக்களிடையே பேராதரவு பெற்று அவ்வாதரவு வ.உ.சிதம்பரனார் காலத்து சுதந்திரப்போராட்டம் வரை அப்படியே நீடித்தது. நாம் அறியும் பாஞ்சாலங்குறிச்சி கதை சில சில நாட்டுப்புற வீரகதைப்பாடல்களில் இருந்து மாயாண்டி பாரதி பின்னர் ம.பொ.சிவஞான கிராமணி போன்றோரால் உருவாக்கபபட்டு சுதந்திரப்போராட்டத்தின் ஒருபகுதியாக முன்வைக்கப்பட்ட சித்திரமாகும்.

மூன்றாம் அத்தியாயம் மக்களைப்பற்றியது. பொதுவாசகனை மிகவும் கவரக்கூடியதாக இது இருக்கும். பல்வேறு சாதிகளைப்பற்றிய ஆங்கிலநோக்கிலான அவதானிப்புகள் ஆர்வமூட்டக்கூடியவை. உதாரணமாக மறவர் சாதியில் உள்ள உள்பிரிவுகளில் கொண்டையங்கோட்டை, செம்புநாடு பிரிவுகள் மட்டுமே நெல்லையில் உள்ளன என்கிறார் ஹெச்.ஆர்.பேட் . கொண்டையங்கோட்டைபிரிவே நெல்லையில் பெருவாரியாக உள்ளவர்கள். கொண்டையங்கோட்டை பிரிவுக்குள் மிளகு, வெற்றிலை, தென்னை, பனை, ஈச்சம் என மரங்களின் அடிபப்டையில் பிரிக்கப்பட்ட இனக்குடும்பங்களும் உள்ளன என்று ஹெச்.ஆர்.பேட் விவரம் அளிக்கிறார். ஒட்டுமொத்த மறவர் குலமே போடும் தாலியின் அடிபப்டையில் பெருந்தாலி சின்னத்தாலி என்று பிரிக்கபட்டிருப்பது போன்ற தகவல்கள் ஏராளமாக சொல்லபப்டுகின்றன. இப்பிரிவுகள் அனைத்துமே தாய்வழியாக வருபவை என்று ஹெச்.ஆர்.பேட் சொல்வது மிகவும் ஆர்வமூட்டுவது.

அதேபோல நாடார்கள் என்றும் சாணார்கள் என்றும் அழைக்கப்பட்ட சாதியினர் தங்களை 1911ல் நடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சத்ரியர்கள் என்று குறிப்பிட்டார்கள். காரணம் தாங்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை என்றார்கள் என்று கணக்கதிகாரி மோலோனி [Molony] குறிப்பிடுவதை

சுட்டிக்காட்டும் ஹெச்.ஆர்.பேட் இக்காலகட்டத்தில் சாணார் சாதியினர் விவசாயம் வணிகம் தொழில் ஆகியவற்றில் ஆழ வேரூன்றி செல்வம் மிக்க சாதியினராக மாறிவருவதையும் சுட்டிக்காட்டுகிறார். இக்காலத்தில் நடக்கும் நிலவிற்பனைப் பதிவுகளில் கணிசமானவை இவ்வகுப்பினரால் வாங்கபப்டுபவை என்கிறார். இது மறவர் ,வேளாளார் முதலிய சாதிகளில் உருவாக்கிய கோபத்தை குறிப்பிடுகிறார். 1899ல் சிவகிரியில் நாடார்களுக்கும் பிறருக்கும் கடுமையான பூசலும் உயிரிழப்புகளும் ஏற்பட்டன என்று விவரிக்கிறார்.

நாடார்கள் அதிகமும் பனை ஏறும் தொழில் செய்தாலும் வணிகமும் தொழிலாக பண்டுமுதலே இருந்தது என்கிறார். இவர்களில் கருக்குமட்டையன், மேனாட்டான்,கொடிக்கால் அல்லது நட்டாத்தி, காவடி புரத்தான் மற்றும் புழுக்கச் சாணான் என்னும் பிரிவுகள் இருப்பதைச் சொல்லும் ஹெச்.ஆர்.பேட் நட்டாத்தி மற்றும் காவடிபுரத்தார்கள் உயர்ந்தவர்கள் புழுக்கச்சாணார் அடிமைகள் என்று குறிப்பிடுகிறார். மறவரிலும் புழுக்கமறவன் என்னும் சாதி அடிமைகளாக இருந்தது. வேளாளர்களிலும் புழுக்கவேளார் என்ற அடிமைகள் இருந்தனர்.

நான் எழுதி இன்னும் வெளிவராத `ஏழுகோட்டைவீடு ` என்ற கதையில் நெல்லையில் குற்றங்களில் ஈடுபடும் ஒரு நாடார் வகுப்பைப் பற்றி சில தகவல்கள் சொல்லியிருந்தேன். அப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் தன்னை உவரிவழி என்று சொல்லியதாக நினைவு. அதை உறுதிப்படுத்தும் தகவலை இந்நூலில் கண்டேன். ஹெச்.ஆர்.பேட் உவரியை அடுத்த ஒரு கிராமத்தைச் சேர்ந்த நாடார்கள் மறவர்களைப்போல ஊர்க்காவல் செய்தார்கள் என்றும் அவர்களுக்கு அம்பலக்காரர் பட்டம் இருந்தது என்றும் சொல்கிறார்.

இக்காலகட்டத்தில் நெல்லைப்பகுதியில் தெலுங்கு பிராமணர்களுக்கும் சைவ வேளாளர்களுக்கும்தான் ஆதிக்கப்போட்டி இருந்தது என்ற தகவலை காணலாம். வேளாளர்கள் சைவ உணவை உண்பதன் மூலம் சாதி மேன்மைக்கு முயல்வதை, ஒருவரை பார்த்ததுமே அவர் சைவ உணவா என்று கேட்டு அறிவதையும் அப்பிரிவினையின் சமூகவியல் உள்ளடக்கங்களையும் , வேளாளர்களில் சிறுபான்மையினரான கார்காத்த வேளாளர்களின் மதம்சார்ந்த மேலதிக சாதிமேன்மையையும் சுட்டிக்காட்டுகிறார் ஹெச்.ஆர்.பேட் .

அதன் பின் வேளாண்மை [அத்யாயம் 4] காடுகள் [அத்தியாயம் 5] தொழில் [அத்தியாயம் 6] செய்திபரிமாற்றம் [அத்தியாயம்7– இத்தகைய ஒரு தலைப்பு ஜெ.ஹெச்.நெல்சனின் மதுரை ஆவணப்பதிவில் இல்லை என்பதை கவனிக்கலாம். அது ஏறத்தாழ அறுபது வருடம் முற்பட்டது] மழைப்பருவங்கள் [அத்தியாயம் 8] ஆரோக்கியம் [அத்தியாயம் 9] கல்வி [10] நிலநிர்வாகம் [அத்தியாயம் 11] சில்லறை பொருளியல் [அத்தியாயம் 12] நீதி [அத்தியாயம் 13] உள்ளூர் நிர்வாகம் [அத்தியாயம் 14] ஆகியவை பிற தலைப்புகள்.

பொதுவாசகனுக்கு மிக ஆர்வமூட்டுவது அதன் பின் 15 வது அத்தியாயத்தில் நெல்லையை தாலுக்காக்களாக பிரித்து ஊர்களைப்பற்றி ஹெச்.ஆர்.பேட் அளிக்கும் சித்திரம். குற்றாலம் வள்ளியூர் என எனக்கு நன்குதெரிந்த ஆர்வமூட்டும் ஊர்களைப்பற்றி படிப்பது உற்சாகமளித்தது. இடையான்குடி பற்றிய சித்தரிப்பில் பிஷப் கால்டுவெல்லின் வாழ்க்கையைப்பற்றிய அழகிய சித்தரிப்பு உள்ளது. தான் உருவாக்கிய நகரை மேற்பார்வையிட மரத்தில் மேல் ஏறி உட்கார்ந்திருக்கிறார் கால்டுவெல். அப்பகுதியை பொட்டலாக விற்ற நில உரிமையாளரான நாடார் தன் நிலத்தை பாத்திபோட்டு சீரழித்துவிட்டார் என்று புலம்புகிறார். சீரான தெருக்கள் அந்த அளவுக்கு அவரது கண்களுக்கு வித்தியாசமாக தெரிகின்றன. பாண்டிச்சேரியில் இருந்து இளையான்குடிவரை செருப்பில்லாமல் நடந்து வந்த கால்டுவெல்லின் சித்திரமும் அவர் பள்ளி தொடங்கியபோது வந்த எதிர்ப்புகளும் [தாசிக்கும் அரசிக்கும்தானே கல்வி தேவை? எங்கள் பெண்கள் இரண்டும் அல்ல] ஆர்வமூட்டுபவை. அக்கால பாளையங்கோட்டை கோட்டைபகுதியைப்பற்றிய வரைபடமும் உள்ளது.

ஆய்வாளர்களுக்கும் பொதுவாக தமிழ்நாட்டை தெரிந்துகொள்பவர்களுக்கும் உதவும் நூல் இது.

காணொளிகள்

01] ஜாதியாவது..மதமாவது.. தமிழ்நாட்டையே புரட்டிப்போட்ட மாமனிதனின் வரலாறு **History of Robert Caldwell**
https://www.youtube.com/watch?v=GfdxGBSH_5A [18:30]

02] **Robert Caldwell | தமிழின் வேர்தேடி சென்னையிருந்து நெல்லைக்கு நடந்துசென்ற அயர்லாந்து அறிஞர்!**
https://www.youtube.com/watch?v=9msRdFQz3TU [11:49]
03] **தமிழ்த்தாய் வாழ்த்து | திராவிட மொழியியலின் தந்தை ராபர்ட் கால்டுவெல் கதை**
https://www.youtube.com/watch?v=qF3d9lA_3tQ [30:14]
04] History of Robert Caldwell | Tamil
https://www.youtube.com/watch?v=OFYQmFjovMM [14:16]
05] Robert Caldwell: Father of Dravidianist Racial Politics | Aravindan Neelakandan
https://www.youtube.com/watch?v=oV62YJ9kS0g [31:20]
06] ROBERT CALDWELL life History| **கால்டுவெல்** | Tamil Movie
https://www.youtube.com/watch?v=C-fpXZe86Bs [2:42:10]

(😊)(😊) இராபர்ட் கால்டுவெல் (😊)(😊)





